16 - 31 டிசம்பர் 99 ரூ. 4.00

www.padippakam.com

# புதிய ஜனநாயகம்



**போஃபர்ஸ் வழக்கு: பா.ஜ.க.வின் அரசியல் ஆயுதம்**




படிப்பகம்

www.padippakam.com

# காவிரி நீருக்காகப் போராடுவது குற்றமா?

தேச ஒற்றுமை பேசும் ஓட்டுக் கட்சிகள் காவிரிப் பிரச்சினையில் அம்பலமாகி நிற்கின்றன. தமிழ்நாட்டிலுள்ள 'தேசிய'க் கட்சிகள் வாய்மூடிக் கிடக்கும்போது, கர்நாடகத்திலுள்ள 'தேசிய'க் கட்சிகள் இனவெறியைத் தூண்டி, ஆதாயம் தேடுகின்றன.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 'காவிரி பிரச்சினையைத் தீர்த்தவர் வாஜ்பாய்' என்று சொல்லியே பாரதீய ஜனதாவும் அதன் கூட்டாளிகளும் தமிழகத்தில் ஓட்டுப் பொறுக்கின. ஐந்தாம் கட்ட வாக்குப் பதிவு முடியுமுன்னே இப் பொய்ப் பிரச்சாரம் அம்பலமாகி நாறத் தொடங்கியது.

இராமதாசு, வைகோ, கருணாநிதி கும்பல், தமது பொய்ப் பிரச்சாரம் · அம்பலமானதற்கு கொஞ்சமும் வெட்கித் தலைகுனியாததோடு, காவிரியில் தண்ணீர் திறந்துவிடக் கோரி சுவரொட்டி ஒட்டியதற்காக மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புத் தோழர்கள் மீது பொய் வழக்குப் போட்டுள்ளது. காவிரி நீருக்குப் போராடுவது வன்முறை என போலிசை ஏவி ஒடுக்கியது.

இவற்றையும் மீறி தமிழகமெங்கும் சுவரொட்டி இயக்கங்கள் நடந்தன. தஞ்சை, திருச்சி, சென்னைப் பகுதிகளில் ஆர்ப்பாட்ட இயக்கங்கள் நடந்தன.

★ திருச்சியில் 28.9.99 அன்று சத்திரம் பேருந்து நிலையத்தில் ம.க.இ.க. செயலர் முத்து தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. பு.மா.இ.மு. மாநகரச் செயலர் சேகரும் மற்றும் தொ.பி.கு. தோழர் கந்தசாமியும் சிறப்புரையாற்றினர். ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

★ தஞ்சையில் தோழர் காளியப்பன் தலைமையில் 250-க்கும் மேற்பட்டோர் பங்கேற்ற ஊர்வலம் நடந்தது. காலிப்பானையுடன் கருணாநிதி மற்றும் வாஜ்பாய் வேடமணிந்த இருவர், காவிரிக்கு 'திவசம்' நடத்த ஊர்வலத்தில் வந்தது மக்களிடம் வரவேற்பைப் பெற்றதோடு, துரோகிகளை அடையாளம் காட்டியது.

காவிரிப் பாசன அலுவலகத்திற்கு எதிரிலுள்ள சாந்தப்பிள்ளை நுழைவாயிலில் இருந்து புறப்பட்ட ஊர்வலம் விண்ணதிர முழங்கிச் சென்று, பழைய பேருந்து நிலையத்தில் முடிந்து, அங்கு தொடர் முழக்க ஆர்ப்பாட்டம் நடந்தது. அதில் திருச்சி மாநகர பு.மா.இ.மு. செயலர் தோழர் சேகர் சிறப்புரையாற்றினார்.

★ சென்னையில் 12.10.99 அன்று புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி தலைவர் தோழர் முகுந்தன் தலைமையில் அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து நிலையத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தில், பு.ஜ.தொ.மு. பொருளாளர் தோழர் விசயகுமார், இணைச் செயலர் தோழர் தங்கவேல் ஆகியோர் உரையாற்றினர்.

காவிரிப் பிரச்சினையில் ஓட்டுக் கட்சிகளின் நயவஞ்சகத்தை அம்பலப்படுத்தி தஞ்சையில் நடந்த பேரணி




## சிட்டி யூனியன் வங்கி:

# பீதியடைந்த திருடர்கள் பா.ஜ.க.விடம் தஞ்சம்

குடந்தையைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கிவரும் சிட்டி யூனியன் வங்கியில், அதன் தலைமைப் பொது மேலாளர் வெங்கட்ராமனும் அவரது கும்பலும் நடத்திவரும் நிதிமுறைகேடுகள், ஊழல் - மோசடி, ரவுடித்தனங்களைப் பற்றி "புதிய ஜனநாயகம்" ஜூன் இதழில் விரிவான கட்டுரை வெளிவந்தது. இது, அனைத்துத் தரப்பு வங்கி ஊழியர்கள், பொதுமக்கள் மத்தியில் பரபரப்பான வரவேற்பைப் பெற்றது. இதைத் தொடர்ந்து கடந்த ஜூலை 29-ந் தேதியன்று இம்மோசடிக் கும்பலை அம்பலப்படுத்தி குடந்தையில் மக்கள் கலை இலக்கியக் கழகம் மாபெரும் பொதுக் கூட்டத்தை நடத்தியது. ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன் சிறப்புரை ஆற்றிய, 2000 பேருக்கு மேல் கலந்து கொண்ட இப்பொதுக் கூட்டம் வெங்கட்ராமன் கும்பலுக்குப் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தோழர் காளியப்பனின் உரையை ஒரு கடைக்காரர் ஒலிநாடாவில் பதிவு செய்து, பிரதி எடுத்து பரபரப்பாக விற்பனை செய்யுமளவுக்கு மக்களிடம் இப் பொதுக்கூட்டம் பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

இதைத் தொடர்ந்து, வெங்கட்ராமன் கும்பலால் பாதிக்கப்பட்ட ஊழியர்களிடம் வங்கி நிர்வாகம் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. வெங்கட்ராமன் கும்பலின் அராஜகத்தால் அஞ்சி ஒடுங்கிப் போயிருந்த வங்கி ஊழியர்கள், இதனால் சற்று ஆறுதலும் நம்பிக்கையும் பெற்றுள்ளனர். தோழர் காளியப்பனின் பேச்சை ஒலிநாடாவில் பதிவு செய்து கேட்டுவிட்டு, வழக்குப் போட எத்தணித்த வங்கி நிர்வாகம், பொது மக்கள் மற்றும் வங்கி ஊழியர்களிடம் எதிர்ப்பு அலை ஓங்கி வீசுவதைக் கண்டு அஞ்சி, அந்த யோசனையைக் கைவிட்டுள்ளது.

இருப்பினும் வெங்கட்ராமன் கும்பல் தனது அடாவடித்தனத்தை நிறுத்திவிடவில்லை. மோசடிகளை மூடிமறைத்து விசாரணையிலிருந்து தப்பிக்கவும், கொள்ளையைத் தொடரவும் இக்கும்பல் புதிய முயற்சிகளில் இறங்கியுள்ளது. மைய ஆட்சியைப் பிடித்துள்ள பாரதீய ஜனதாவின் மாநிலச் செயலர்களில் ஒருவரான காரைக்குடி ஹெச். ராஜாவை வளைத்துப் போட்டு, தமது திருட்டைத் தொடர வங்கியின் தலைமைப் பொது மேலாளர் வெங்கட்ராமனும், தலைவர் நாராயணனும் கிளம்பியுள்ளனர். பல பினாமி பெயர்களில் வங்கிப் பணத்தை கடன் என்ற பெயரில் எடுத்து, நாடாளுமன்றத் தேர்தலில் சிவகங்கைத் தொகுதியில் போட்டியிட்ட ஹெச். ராஜாவுக்கு இருபது இலட்ச ரூபாயை நன்கொடையாகக் கொடுத்துள்ளனர். இத்தொகையை வங்கித் தலைவர் நாராயணன் நேரடியாக ராஜாவின் வீட்டிலேயே கொடுத்துள்ளார். சிட்டி யூனியன் வங்கியின் மும்பய், பெங்களூர் கிளைகளின் வரவு - செலவு கணக்குகளை மேலோட்டமாகச் சோதித்தாலே இந்த மோசடி பளிச்செனத் தெரியும். ஊழல் எதிர்ப்பு நாடகமாடி உத்தமர் வேடம் போடும் பாரதீய ஜனதா கும்பலின் யோக்கியதையும் மக்களுக்குப் புரியும்.

தகவல்: ம.க.இ.க., தஞ்சை.



படிப்பகம்

www.padippakam.com


புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 14

இதழ்: 24

&

தொகுதி: 15

இதழ்: 1-3

1 நவ.'99 - 31 டிச.'99

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 4.00
ஆண்டு சந்தா: ரூ. 96.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18



படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


# பொருளாதாரம் தனியார்மயம் அரசியல் சாதிமயம்

**"தாழ்த்தப்பட்டோர் குடும்பத்தில் சம்பந்தம் செய்துள்ள நானா தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக இருப்பேன்?" என்று உருக்கமாக வசனம் பேசும் கருணாநிதியின் கட்சியும் ஆட்சியும் இன்று தாழ்த்தப்பட்டோரை ஒடுக்கி மேல்சாதி வெறியர்களுடன் கூட்டணி சேர்வதில் முனைப்பாக நிற்கிறது.**

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், தாழ்த்தப்பட்ட மக்களை வாக்களிக்க விடாமல் சிதம்பரம் தொகுதியில் வன்னிய சாதிவெறியர்கள் கட்டவிழ்த்துவிட்ட வன்முறைக்குப் பின்னர், பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறவோ, அத்தொகுதியில் போட்டியிட்ட வேட்பாளர் என்ற முறையில் வாக்காளர்களுக்கு நன்றி கூறவோ கூட அனுமதிக்கப்படாமல் விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத் தலைவர் திருமாவளவனுக்கு கடலூர் மாவட்டத்தில் நுழையத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இவரோடு, கிருஷ்ணசாமி உள்ளிட்ட 7 தாழ்த்தப்பட்ட கட்சிகள் - இயக்கங்களின் தலைவர்களுக்கும் இம்மாவட்டத்தில் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நெல்லையில் மாஞ்சோலைத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர் போராட்டத்தின் போது, போலீசால் 17-க்கும் மேற்பட்டோர் தாமிரபரணி ஆற்றில் தள்ளப்பட்டுக் கொல்லப்பட்ட அவலத்தை விளக்கும் "ஒரு நதியின் மரணம்" என்ற குறும்படத்தை சென்னையில் திரையிட்டவர்களையும் ஏற்பாடு செய்தவர்களையும் கைது செய்து அச்சுறுத்துகிறது தி.மு.க். அரசு. இக்குறும்படம், மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்களின் உரிமைக்காகப் போராடிய கிருஷ்ணசாமிக்குச் சாதகமாக அமைந்துவிடும் என்பதாலும் அதைவிட முக்கியமாக, போலீசின் கொலை வெறியாட்டத்தை அம்பலப்படுத்திவிடும் என்பதாலும், இக்குறும்படம் அரசுக்கு எதிரான வன்முறையைத் தூண்டுவதாகக் குற்றம் சாட்டி கருத்துரிமையைக் காலில் போட்டு மிதிக்கிறது.

"புதிய தமிழகம் ஒரு கட்சியே அல்ல; வன்முறைக் கும்பல்" என்று பார்ப்பனத் திமிரோடு பாசிச ஜெயா பேசியதைக் கண்டித்து அவர் செல்லுமிடமெல்லாம் கருப்புக் கொடி காட்டிப் போராடுவோம் என கிருஷ்ணசாமியின் புதிய தமிழகம் கட்சி எச்சரித்ததும், தேவர் ஜெயந்தியில் ஜெயா பங்கேற்கச் சென்றபோது, முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்ற பெயரில் புதிய தமிழகம் கட்சியின் முன்னணியாளர்கள் கைது செய்யப்பட்டனர். அக்கட்சியினர் மதுரையில் ஜெயாவின் கொடும்பாவியை எரிக்க முயற்சித்ததை எதிர்த்து, சென்னையில் கிருஷ்ணசாமியின் கொடும்பாவியை அ.தி.மு.க.வினர் எரித்துக் கொட்டமடித்தனர். பார்ப்பன ஜெயாவின் திமிர்ப் பேச்சைக் கண்டிக்க முன்வராத தி.மு.க. அரசு, கொடும்பாவி எரிப்புப் போராட்டத்துக்கே தடைவிதித்து, கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கிறது.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தென்மாவட்டங்களில் தோல்வியடைந்துள்ள தி.மு.க., இப்பகுதியில் பெரும்பான்மையாக உள்ள தேவர்சாதி ஓட்டு வங்கியை தம் பக்கம் கவர்ந்திழுக்கும் நோக்கத்தோடு, இவ்வாண்டு தேவர் ஜெயந்தியை அரசு விழாவாக நடத்தியுள்ளது. இதுதவிர, சென்னையில் மருதுபாண்டியருக்குச் சிலை; அவர் பெயரால் ஒரு விவசாய பாலிடெக்னிக் மற்றும் அஞ்சல் தலை வெளியிடவும் தீர்மானித்துள்ளது. கடந்த சில ஆண்டுகளில் நடந்த சாதி மோதல்களை ஒட்டிக் கைதான, சாதிய ஆதிக்கத்துக்கும் ஒடுக்குமுறைக்கும் காரணமான தேவர் சாதிவெறியர்களையும் விடுதலை செய்து, வழக்குகளையும் திரும்பப் பெற்றுள்ளது. இப்படி தேவர் சாதியினரைத் தம் பக்கம் திரட்ட தி.மு.க. முயற்சிப்பதை முறியடிக்க, இம்முறை தேவர் ஜெயந்தியில் தனது தோழியுடன் கலந்து கொண்டு, ஏற்கனவே தமது வலுவான ஓட்டு வங்கியாக உள்ள இச்சாதியினரை தம் பக்கம் உறுதியாக தக்க வைத்துக் கொள்ள ஜெயா கும்பல் கிளம்பியுள்ளது. ஜெயா - சசி கும்பலுக்கு பக்கபலமாக நிற்கும் தேவர் சாதிவெறியர்களும் தேவர் ஜெயந்தி நிகழ்ச்சியை கோயில் திருவிழாவைப் போல நடத்தியுள்ளனர்.

தென் மாவட்டங்களில் தேவர் சாதி ஓட்டு வங்கியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக தாழ்த்தப்பட்டோரையும் கிருஷ்ணசாமியின் புதிய தமிழகம் கட்சியினரையும் தாக்குவதில் ஜெயா கும்பலும் தி.மு.க.வும் போட்டி போடுகின்றன. வடமாவட்டங்களில் வன்னிய சாதி ஓட்டு வங்கிக்காக தாழ்த்தப்பட்டோரையும் திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தினரையும் ஒடுக்குவதில் பா.ம.க.வும் தி.மு.க.வும் கூட்டுச் சேர்ந்துள்ளன. பா.ம.க. இப்போது கூட்டணி மாறிவிட்ட நிலையில், வடமாவட்டங்களில் தாழ்த்தப்பட்டோரின் ஓட்டு வங்கியைக் கைப்பற்ற திருமாவளவனை ஜெயா கும்பல் நைச்சியமாக ஆதரிக்கிறது.

**சுருக்கமாகச் சொன்னால், அடுத்து வரப்போகும் சட்டமன்றத் தேர்தலைக் குறிவைத்து சாதி ரீதியான ஓட்டு வங்கிகளைக் கைப்பற்றும் நோக்கத்துடன் தி.மு.க. கூட்டணியும் எதிர்த்தரப்பான அ.தி.மு.க. கூட்டணியும் முனைப்பாகக் களமிறங்கி**

**தொடர்ச்சி 11-ஆம் பக்கம்**

### டீசல் - பேருந்துக் கட்டண உயர்வு:

# வயிறு எரிகிறது நாடு 'முன்னேறுகிறது'

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பிறகு, நாடெங்கும் பங்குச் சந்தை வியாபாரம் சூடுபிடிக்கத் தொடங்கியது. அக்டோபர் 8-ந் தேதி மும்பை பங்குச் சந்தையில், பங்கு வியாபாரம் கிர்ரென உயர்ந்து 5,000 புள்ளிகளைத் தொட்டது. முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்கள், இதனை வரலாறு காணாத சாதனை எனப் புகழ்ந்து தள்ளினார்கள். பா.ஜ.க. கூட்டணி பெரும்பான்மை பெற்று, நிலையான ஆட்சி அமையும் சூழ்நிலை உருவாகிவிட்டதால், தொழிற்துறை முடக்கம் கூட நீங்கிவிடும் என ஆருடம் கூறினார்கள்.

இப்படி, பங்குச்சந்தை தரகர்களும், இந்தியத் தரகு முதலாளிகளும், பன்னாட்டு நிறுவனங்களின் அதிபர்களும் நிலையான ஆட்சி குறித்தும், பங்குச் சந்தை வியாபாரம் சூடுபிடிக்கத் தொடங்கியது குறித்தும் குதூகலித்துக் கொண்டிருந்த பொழுது, கோடிக்கணக்கான இந்திய மக்களோ டீசல் விலையேற்றம் குறித்துப் புலம்பிக் கொண்டிருந்தனர்.

டீசல் விலையேற்றமானது அரிசி, கோதுமை, காய்கறிகள் போன்ற அத்தியாவசியமான உணவுப் பொருட்களின் விலையேற்றத்திற்கும், போக்குவரத்துக் கட்டண உயர்விற்கும் வழியைத் திறந்துவிடும் என்பது பாமரனுக்குக் கூடப் புரியக் கூடிய விசயம். பங்குச் சந்தை வியாபாரம் சூடு பிடிக்கிறதா என்பதைவிட, விலைவாசி மலிவாக இருக்கிறதா என்பதுதான் பொதுமக்களின் அக்கறைக்குரியது. இன்னும் சொல்லப்போனால், மக்களுக்குத் தேவைப்படும் பொருட்களும், போக்குவரத்து போன்ற சேவைகளும் மலிவாக அவர்களுக்குக் கிடைப்பதுதான் ஆரோக்கியமான பொருளாதாரம்.

ஆனால், இந்து மதவெறியர்களுக்கு நெருக்கமானவரும், "சி.ஐ.ஐ" எனப்படும் தரகு முதலாளிகள் சங்கத்தின் தலைவருமான ராகுல் பஜாஜ், இந்த விலையேற்றம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் எனக் கூறுகிறார். "அசோசெம்" என்ற மற்றொரு தரகு முதலாளிகள் சங்கம், "இது சரியான தருணத்தில் வந்துள்ள விலையேற்றம்" என வரவேற்கிறது. பா.ஜ.கவும், "நமக்குக் கடினமான தினங்கள் காத்திருக்கின்றன," "மானியங்களை வெட்டுவது போன்ற வேதனைமிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்," "மக்கள் தியாகம் செய்ய முன் வர வேண்டும்" எனக் கூறி, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்த விலையேற்றம் தவிர்க்க முடியாதது என நியாயப்படுத்தி வருகிறது.

டீசல் விலையை உயர்த்தியிருக்காவிடில் 6,000 கோடி ரூபாய்க்கு மேல் அரசுக்கு நட்டமேற்பட்டிருக்கும் என்பது பா.ஜ.க.வும், தரகு முதலாளிகளும் கூறும் நியாயம். டீசல் விலையை உயர்த்தாமல், தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் பெட்ரோலியப் பொருட்களின் விலைகளை உயர்த்தி இந்த நட்டத்தை ஈடுகட்டியிருக்க முடியும். ஆனால், பா.ஜ.க., தரகு முதலாளிகள் மீது பொருளாதாரச் சுமையை ஏற்றி வைக்கத் தயாராக இல்லை; தரகு முதலாளிகளும் இந்தச் சுமையைப் பகிர்ந்து கொள்ள முன்வரவில்லை.

அதேசமயம், பா.ஜ.க. கூட்டணி அரசு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக உடனடியாக என்னென்ன பொருளாதாரச் சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்பதை வாஜ்பாயி பதவியேற்பதற்கு முன்பே, பல்வேறு தரகு முதலாளிகளும் பட்டியல் போட்டுக் கொடுத்தார்கள். பஜாஜ் நிறுவனத்தின் முதலாளியும் தரகு முதலாளிகள் சங்கம் சி.ஐ.ஐ. இன் தலைவருமான ராகுல் பஜாஜ், "மானியங்களைக் குறைக்க வேண்டும்" என்பதை தனது முதல் ஆலோசனையாகக் கூறினார். முதலாளித்துவப் பொருளாதார நிபுணரான அசோக் கோஸ்லா," எல்லாவிதமான மானியங்களையும் ஒழித்துக் கட்டுங்கள்" என்றார். பிர்லா நிறுவனத்தின் முதலாளியான குமாரமங்கலம் பிர்லா, "காப்பீடு, வங்கித் துறைகளைத் தனியாருக்குத் திறந்துவிடுமாறு" ஆலோசனை வழங்கினார்.

தேர்தல் முடிவுகள் வெளிவந்து கொண்டிருந்த பொழுது, காபந்து அரசின் சார்பாக அமெரிக்காவுக்குச் சென்ற நிதியமைச்சர் யஷ்வந்த் சின்கா, நியூயார்க் நகரில் நடந்த இந்திய - அமெரிக்க முதலாளிகள் சங்கக் கூட்டத்தில், "நாங்கள் ஆட்சியைப் பிடித்தால் மூன்றே நாட்களுக்குள் காப்பீடு துறையைத் தனியாருக்குத் திறந்துவிடுவோம்" என்றும், "அரசு மானியங்களைக் குறைப்பதற்கு அரசியல்ரீதியாக வேதனைமிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என்றும் வாக்குறுதி கொடுத்துவிட்டுத் திரும்பினார்.

ஆட்சியைப் பிடித்த பிறகு, "எஃப், ஐ.சி.சி.ஐ" என்ற தரகு முதலாளிகள் சங்கக் கூட்டத்தில் பேசிய சின்கா, "இப்பொழுதுள்ள தொழிலாளர் நலச் சட்டங்கள், உற்பத்திக்குப் பாதகமாகவும், தொழிலாளர் நலனைப் பாதுகாப்பதாகவும் உள்ளன. இதற்கு மாறாக, தொழிலாளர்களுக்குப் பணி பாதுகாப்பு இருக்கக் கூடாது; அவர்களை கறிவேப்பிலை போல பயன்படுத்திக் கொள்ளும் தொழிலாளர் கொள்கைதான் (hire and fire Policy) வேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளார். பா.ஜ.க., தரகு முதலாளிகளிடமும், ஏகாதிபத்தியங்களிடமும் கொண்டிருக்கும் விசுவாசத்தை இதைவிடப் பச்சையாகச் சொல்லிவிட முடியாது!

காப்பீடு துறையைத் தனியாருக்குத் திறந்துவிடப் போவதை நியூயார்க் நகரில் நடந்த அமெரிக்க — இந்திய முதலாளிகள் சங்கக் கூட்டத்

**பங்குச் சந்தை வியாபாரம் சூடு பிடித்ததைக் கொண்டாடும் தரகர்கள்**





படிப்பகம்

www.padippakam.com

தில் அறிவித்ததைப் போல, அரசு வங்கிகளைத் தனியாருக்குத் திறந்துவிடப் போவதையும் ''பி.எச்.டி. வர்த்தகக் கழகம்'' என்ற முதலாளிகள் சங்கம் நடத்திய கூட்டத்தில்தான் அறிவித்தது, பா.ஜ.க. அரசு. இதன் மூலம், தாராளமயமாக்கத்தின் பின் நாடாளுமன்றம் என்பது வெறும் ''பொம்மை''தான் என்பதை பா.ஜ.க சொல்லாமல் சொல்லிவிட்டது. எல்லாம் வல்ல நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொள்ளுமாறு மக்களுக்கு உபதேசிக்கும் அறிவாளிகள் கூட்டம், இனியாவது நாடாளுமன்றம் குறித்த தங்களின் மோசடி - பசப்பல்களை நிறுத்திக் கொள்ளட்டும்.

★☆★

பெட்ரோலுக்கு மைய அரசு மானியம் தருவதில்லை. டீசலுக்குக் கொடுத்து வந்த மானியத்தையும் 1997-க்குப் பின் மைய அரசு விலக்கிக் கொண்டு விட்டது. விசைப்படகு வைத்திருக்கும் மீனவர்களுக்கு மட்டும்தான் டீசல் மானியம் வழங்கப்படுகிறது. இதனையும், சமையல் எரிவாயுவுக்கும், மண்ணெண்ணெய்க்கும் வழங்கப்படும் மானியத்தையும் படிப்படியாகக் குறைத்து, 2001-க்குள் பெட்ரோலியப் பொருட்களுக்கு மானியம் வழங்குவதை முற்றிலுமாக நிறுத்திவிட வேண்டும் என்பதுதான் பா.ஜ.க கூட்டணி அரசின் நோக்கம்.

சர்வதேச விலையேற்றத்தைக் காட்டி டீசல் விலை உயர்வை நியாயப்படுத்தி வரும் பா.ஜ.க., ''மண்ணெண்ணெய்க்கும், சமையல் எரிவாயுவுக்கும் வழங்கப்படும் மானியம் 12,000 கோடி ரூபாயை எட்டிவிட்டது. இதனை உடனடியாகக் குறைப்பதுதான் நாட்டின் பொருளாதாரத்துக்கு நல்லது'' எனப் பிரச்சாரம் செய்யத் தொடங்கிவிட்டது. மண்ணெண்ணெயின் விலையை லிட்டர் ஒன்றுக்கு மூன்று ரூபாயும், சமையல் எரிவாயுவின் விலையை சிலிண்டர் ஒன்றுக்கு நாற்பது ரூபாயும் கூட்டுவதற்கு பா.ஜ.க., தருணம் பார்த்துக் கொண்டுள்ளது.

மண்ணெண்ணெய்க்கும், சமையல் எரிவாயுவுக்கும் வழங்கப்படும் 12,000 கோடி ரூபாய் மானியத்தையும் அரசு தன் மடியில் இருந்து கொடுப்பது போல் கூறுவதே மோசடித்தனமானது. பெட்ரோல், டீசல் விற்பனையில் அரசிற்கு இருக்கும் ஏகபோகத்தைப் பயன்படுத்திக் கொண்டு, பெட்ரோலையும், டீசலையும் சர்வதேச விலையைவிடக் கூடுதலாக உள்நாட்டில் விற்று, அந்த வருவாயில் ஒரு பகுதியைத் தான் மண்ணெண்ணெய்க்கும், சமையல் எரிவாயுவுக்கும் மானியமாக வழங்கி வருகிறது மைய அரசு. இப்படி வழங்குவதை குறுக்கு மானியம் (Cross Subsidy) என்கிறார்கள். இந்தக் குறுக்கு மானியத்தையும் முற்றிலுமாக ஒழித்து, பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய் விற்பனையில் கிடைக்கும் மொத்த இலாபத்தையும் அரசே சுருட்டிக் கொள்ள வேண்டும் என்பதுதான் தரகு முதலாளிகளின் விருப்பம்; ஏகாதிபத்தியங்களின் கட்டளை; பா.ஜ.க.வின் நோக்கம்.

இவர்கள் கூறுகிறபடி, மானியக் குறைப்பால் - விலையேற்றத்தால் நாட்டின் பொருளாதாரம் முன்னேறுகிறது என்பது உண்மையென்றால், மறுபுறம், இந்த மானியக் குறைப்பால் - விலையேற்றத்தால் கோடிக்கணக்கான இந்திய மக்களின் மாத பட்ஜெட்டில் துண்டு விழுவதையும் மறுக்க முடியாது. விலையேற்றத்தால் நாட்டின் பொருளாதாரம் முன்னேறுகிறது. அதே சமயம், கோடிக்கணக்கான இந்திய மக்களின் வாழ்க்கையோ சரிந்து கீழே விழுகிறது. நாட்டின் பொருளாதார முன்னேற்றமும், கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கை முன்னேற்றமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு நிற்கும் பொழுது, இந்தப் பொருளாதார முன்னேற்றத்தால் யார் ஆதாயம் அடைகிறார்கள்?

டீசல் விலை உயர்வை எடுத்துக் கொள்வோம். டீசல் விலை உயர்த்தப்பட்டவுடனேயே, தில்லி, தமிழ்நாடு, ஆந்திரா, மேற்கு வங்க மாநில அரசுகள், தங்கள் மாநிலங்களின் பொருளாதாரம் நட்டமடைந்துவிடக் கூடாது, இலாபகரமாக முன்னேற வேண்டும் என்பதற்காக பேருந்து கட்டணத்தை உயர்த்தின. இந்தக் கட்டண உயர்வு, நகரப் பேருந்துகளில் பயணம் செய்து, தினசரி அலுவலகம் சென்று திரும்பும் ஒரு நடுத்தரவர்க்க ஊழியனை / தொழிலாளியை, ''கால்கடுக்க பேருந்துக்கு காத்து நின்று, காசையும் கூட கொடுத்து பேருந்தில் தொங்கிக் கொண்டு, சட்டினியாகி அலுவலகத்திற்குப் போவதைவிட, கடன்பட்டாவது ஒரு ''டூ வீலர்'' வாங்கி விடலாம்; அலுங்காமல் குலுங்காமல் ஆபீசுக்குப் போய் வரலாம். மாதா மாதம் குடும்பத்திற்கு ஆகும் போக்குவரத்துச் செலவோடு ஒப்பிடும்பொழுது, பெட்ரோலுக்குச் செலவாகும் தொகை அதிகமாகிவிடாது'' எனச் சிந்திக்கத் தூண்டுகிறது.

பொதுப் பேருந்தில் பயணம் செய்ய ஆகும் செலவிற்கும், இரு சக்கர வண்டியில் பயணம் செய்ய ஆகும் செலவிற்கும் உள்ள இடைவெளியை பேருந்துக் கட்டண உயர்வு வெகுவாகக் குறைத்து, வண்டி வாங்குவதை பல வழிகளில் இலாபகரமானதாகவும், புத்திசாலித்தனமானதாகவும் ஆக்கிவிட்டது. இறுதியாக, டீசல் விலை உயர்வு, இரு சக்கர வாகனங்களின் விற்பனைக்கு வழிவகுத்துவிட்டது. அதனால்தான் ''பஜாஜ் ஸ்கூட்டர்'' நிறுவனத்தின் முதலாளி, ராகுல் பஜாஜ், டீசல் விலை உயர்வை ஆதரிக்கிறார்.

எனவே, பா.ஜ.க கூறும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது தரகு முதலாளிகளின் இலாபத்தோடு சம்பந்தப்

# கருணாநிதியின் வாய்க்கொழுப்பு

டீசல் விலையேற்றத்தால் தமிழகப் போக்குவரத்துத்துறைக்கு ஏற்படக் கூடிய கூடுதல் செலவினம் கிட்டதட்ட 232 கோடி ரூபாய் என தமிழக அரசு கூறுகிறது. அரசு பேருந்துகள் அனைத்திலும், பெரும்பாலான நேரங்களில், பொதுமக்கள் நின்று கொண்டும், பிதுங்கி வழிந்து கொண்டு தான் பயணம் செய்கின்றனர். எனவே, அரசு பேருந்துகள் போதிய வருவாய் இன்றி நட்டத்தில் ஓடுவதாகக் கூற முடியாது. டீசலை விட மூன்று மடங்கு விலை கூடுதலான பெட்ரோலில் ஓடும் இரு சக்கர நான்கு சக்கர வாகனங்களை நடுத்தர வர்க்கத்தினரே தமது சொந்த உபயோகத்திற்காக வாங்கி, ஓட்டிச் சமாளிக்கும் பொழுது, தமிழகமெங்கும் பத்தாயிரக்கணக்கான பேருந்துகளை வர்த்தக ரீதியாக இயக்கும் தமிழக அரசு, பேருந்து கட்டணத்தை உயர்த்தாமல், டீசல் விலையைச் சமாளித்திருக்க முடியும்.

ஆனால், கருணாநிதியோ 600 கோடி ரூபாய் அளவிற்கு பேருந்து கட்டணத்தை உயர்த்தி தமிழக மக்களின் வயிற்றில் அடித்துள்ளார். போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த அதிகார வர்க்கத்தின் ஊதாரித்தனத்தாலும், ஊழலாலும் 500 கோடி ரூபாய் அளவிற்கு நட்டமேற்பட்டுள்ளது. இந்த நட்டத்தையும் பொது மக்களின் தலையில் கட்டி விட்டது தி.மு.க. அரசு.

இந்த அநியாய கட்டண உயர்வுக்கு எதிராக பொதுமக்களின் மத்தியில் ஆத்திரமும், வெறுப்பும் வெடித்து எழுந்தபோது, ''பஸ் கட்டணம் ஏறிவிட்டதைப் பற்றி யாரும் கவலைப்படவில்லை; இன்னும் கொஞ்சம் ஏற்றியிருக்காலாமே என்று கருதுகிறார்கள்'' என வக்கிரத்தோடு பேசி, பொது மக்களின் நியாயமான கோபத்தைக் கிண்டலடித்தார், கருணாநிதி. மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில் சிமெண்ட் விலை கூடுதலாக இருப்பது பற்றி கேட்டபொழுது, 'தரமான சிமெண்டின் விலை கூடுதலாகத்தான் இருக்கும்'' என சிமெண்ட் ஆலை முதலாளிகளின் கொள்ளைக்கு வக்காலத்து வாங்கினார்.

ரேஷன் அரிசி விலையை கமுக்கமாக உயர்த்திய தி.மு.க அரசு, தனது கஜானாவை நிரப்பிக்கொள்ள பாலின் விலையையும், மின் கட்டணத்தையும் உயர்த்த சமயம் பார்த்துக் கொண்டுள்ளது.

இது ஒருபுறமிருக்க, ஏற்கனவே லாட்டரி மோகத்தால் சீரழிந்து கிடக்கும் தமிழகத்தை, தன் பங்குக்கு சுரண்டுவதற்காக தினசரி லாட்டரி நடத்தும் உரிமையை தனியார் முதலாளிக்குத் தாரை வார்த்துள்ளது, தி.மு.க அரசு. இராமதாசோ, தமிழக அரசு நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்கு பாக்கெட் சாராயம் விற்கலாம் என ஆலோசனை வழங்குகிறார். தமிழக மக்களை குடிகாரர்களாகவும், சூதாடிகளாகவும் சீரழிக்கும் இவர்களுக்கு ''தமிழனத் தலைவர்கள்'' என்ற பட்டம் வேறு!


படிப்பகம்

www.padippakam.com




பட்டது; அதற்கும், கோடிக்கணக்கான இந்திய மக்களின் நல்வாழ்விற்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது.

நாட்டின் பொருளாதாரம் நட்டமடைந்துவிடக் கூடாது என்பதற்காகவே டீசல் விலையை உயர்த்தியதாக 'வேதனை'யுடன் கூறும் பா.ஜ.க அரசு, இந்திய எரிவாயு ஆணையம் (Gas Authority of India Ltd.,) என்ற பொதுத்துறை நிறுவனத்தின் பங்குகளை, ''பிரிட்டிஷ் கேஸ்,'' ''என்ரான்,'' ''டெம்ப்லேடான்,'' போன்ற பன்னாட்டு நிறுவனங்களுக்கு அடிமாட்டு விலைக்கு விற்று, 550 கோடி ரூபாய் நட்டமேற்படுத்தியுள்ளது; 18 தனியார் மின் நிறுவனங்கள், 30 இலட்சம் டன் இரும்பை எவ்விதச் சுங்க வரியும் இன்றி அமெரிக்காவில் இருந்தும், மெக்சிகோவில் இருந்தும் இறக்குமதி செய்து கொள்ள சலுகை அளித்து, அரசின் கஜானாவைப் போண்டியாக்கியுள்ளது. இந்தியாவில் இயங்கி வரும் அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனங்கள், கடந்த ஓராண்டில் மட்டும் 1000 கோடி ரூபாய்க்கு மேல் வருமான வரி கட்டாமல் ஏய்த்துள்ளன. இப்படி நாட்டின் பொருளாதாரத்தைச் சுரண்டித் தின்னும் பன்னாட்டு நிறுவனங்களும், தரகு முதலாளிகளும், அவர்களை நத்திப் பிழைக்கும் பா.ஜ.க.வும், நாட்டின் நலனுக்காக மக்களைத் தியாகம் செய்ய உபதேசிப்பது எத்தகைய அயோக்கியத்தனம்?

★☆★

டீசல் விலையேற்றம், வங்கி - காப்பீடு துறையில் தனியார்மயம், தொழிற்சங்க உரிமைகளைப் பறிப்பது, பொதுத்துறை நிறுவனங்களை ஏகாதிபத்தியங்களுக்கும், தரகு முதலாளிகளுக்கும் தாரை வார்ப்பது இவையனைத்தும் தாராளமய மாக்கத்தின் இரண்டாம் கட்டம் என வருணிக்கிறது, பா.ஜ.க.

ஆந்திர விவசாயிகள் தற்கொலை; கோவை பஞ்சாலைகள் நசிந்து போனது; டன்லப், அரக்கோணம் இரும்பு உருக்காலை போன்று பல தொழிற்சாலைகள் இழுத்து மூடப்பட்டு, தொழிலாளர்களின் வேலை பறிபோனது; பங்கு - பத்திர ஊழல்; பைனான்சு கம்பெனிகளின் மோசடி - இவைதான் தாராளமயத்தின் முதல் கட்ட சாதனைகள்! இதிலிருந்தே, இரண்டாம் கட்டம் எத்துணை அபாயம் நிறைந்ததாக இருக்கும் என்பதைப் புரிந்து கொண்டுவிட முடியும்.

அவசர நிலைக் காலத்தின் பொழுது, பாசிச இந்திரா, ''கடின உழைப்புக்கு ஈடு இணை ஏதுமில்லை; ''பேச்சைக்குறை; உழைப்பைப் பெருக்கு'' எனக் கூப்பாடு போட்டு, இந்திய மக்களின் அரசியல் பொருளாதார உரிமைகளைப் பறித்தார். அதற்கும், இப்பொழுது பா.ஜ.க., ''மக்கள் தியாகம் செய்ய முன் வர வேண்டும்,'' ''கடினமான தினங்கள் நமக்குக் காத்திருக்கின்றன'' எனக் கூப்பாடு போடுவதற்கும் நிச்சயமாக வேறுபாடு எதுவும் கிடையாது.

இப்பொருளாதாரத் தாக்குதல்களால் மக்கள் மத்தியில் எழுந்துள்ள ஆத்திரத்தையும், வெறுப்பையும் அறுவடை செய்து கொள்ள எதிர்க்கட்சிகள் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு காத்துக் கிடக்கின்றன. அ.தி.மு.க. ஆட்சியின் பொழுது பேருந்து கட்டண உயர்வை எதிர்த்துப் போராடிய மாணவர்களை போலீசை ஏவிவிட்டு அடித்து நொறுக்கிய ஜெயா, இன்று பேருந்து கட்டண உயர்வை எதிர்த்து தெருவில் இறங்கி முழக்கம் போடுகிறார். சர்வ தேச விலைக்கு நிகராக டீசல் விலையை

# இந்தியாவினுள் நுழையும் அமெரிக்க கடற் கொள்ளைக்காரர்கள்

**யஷ்வந்த்** சின்கா அமெரிக்காவில் போட்ட சபதத்தின்படி, காப்பீடு துறையில் தனியார் தரகு முதலாளிகளும், பன்னாட்டு மூலதனமும் நுழைவதை அனுமதிக்கும் சட்ட திருத்தத்தை நாடாளுமன்ற ஒப்புதலுக்கு முன் வைத்துள்ளது, பா.ஜ.க கூட்டணி அரசு.

நியூயார்க் லைஃப் இன்டர்நேஷனல், ஏ.ஐ.ஜி., அலையன்ஸ் அண்ட் ப்ருடன்ஷியல் ஆகிய மூன்று பன்னாட்டு காப்பீட்டு நிறுவனங்கள் விரைவில் இந்தியாவில் நுழையவுள்ளன.

காப்பீடு துறையில் தனியார் நுழைவதால் இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சி அடையும் என்பது கொக்கு தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிக்கும் கதைதான். ''தொழில்நுட்ப உதவி,'' ''அந்நியக் கடன்,'' ''பங்குச் சந்தை மூலதனம்'' என்ற பெயரில் இந்தியாவில் இருந்து இலாபத்தைக் கடத்திச் செல்லும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு, காப்பீடு துறையைத் திறந்து விட்டிருப்பது ''ஜாக்பாட்'' அடித்ததைப் போன்றது.

''பிரைவேட் கம்பெனி... அதுவும் ஃபாரின் கம்பெனி என்றால் எல்லாம் ஒழுங்காக நடக்கும்'' என்று அசட்டுத்தனமாக நம்பிக் கொண்டிருக்கும் நடுத்தர வர்க்கம்தான் இவ்விசயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தமிழ்நாட்டில் புற்றீசல் போல் முளைத்த ஃபைனான்சு கம்பெனிகளை விட, அமெரிக்க காப்பீடு நிறுவனங்கள் அயோக்கியத்தனமானவை என்பதுதான் உண்மை.

அமெரிக்காவில் 1982 தொடங்கி இது நாள் வரை கிட்டதட்ட 370 தனியார் காப்பீடு நிறுவனங்கள் திவாலாகிப் போய்விட்டன. இது குறித்து ஆராய்வதற்காக அமெரிக்காவின் மேல் சபை(செனட்)யால் நியமிக்கப்பட்ட குழு, ''மிகப் பெரிய ஐம்பது தனியார் நிறுவனங்கள் போண்டியாகிப் போனதற்கு, அந்நிறுவனங்களில் நடந்த மோசடிகளும், கடற்கொள்ளைக்காரர்களைப் போல பொதுமக்களின் சேமிப்பைச் சூறையாடிய களவாணித்தனமும், ஒழுங்கற்ற நிர்வாகமும், திறமையின்மையும்தான் காரணம்'' எனத் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவின் ''கடற்கொள்ளைக் காரர்கள்,'' இந்தியாவில் காலடி எடுத்து வைத்ததும் நாணயமிக்கவர்களாக மாறிவிடுவார்கள் என நம்புவதைவிட ஏமாளித்தனம் வேறெதுவும் இருக்க முடியாது.


படிப்பகம்

www.padippakam.com

உயர்த்திய பா.ஜ.க.வை எதிர்த்து வரும் இடது - வலது கம்யூனிஸ்டுகள், அவர்களின் ஆதரவில் நடந்த ஐக்கிய முன்னணி ஆட்சியின் பொழுதுதான், டீசலுக்குக் கொடுத்து வந்த மானியம் விலக்கிக் கொள்ளப்பட்டு, சர்வதேச விலைக்கு நிகராக உள்நாட்டில் டீசல் விலையை உயர்த்திக் கொள்ளும் முடிவு அறிவிக்கப்பட்டது என்பதை வசதியாக மறந்துவிட்டார்கள். பேருந்து கட்டண உயர்வைக் காட்டி கருணாநிதியை எதிர்க்கும் தமிழக இடது - வலது கம்யூனிஸ்டுகள், அவர்கள் கூட்டணி ஆளும் மேற்கு வங்கத்தில், டீசல் விலையேறிய மறுநாளே பேருந்து கட்டணத்தை உயர்த்திய ஜோதிபாசுவைக் கண்டிப்பதில்லை.

கம்யூனிஸ்டுகளின் இலட்சணமே இதுதான் என்றால், காங்கிரசைப் பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை. இங்கே, தமிழகத்தில், பேருந்து கட்டண உயர்வைச் சொல்லி, கருணாநிதியை எதிர்த்துப் போராடுகிறது காங்கிரசு; தில்லியிலோ, பேருந்து கட்டணத்தைக் குறைக்கக் கோரி, காங்கிரசை எதிர்த்துப் போராடுகிறார்கள் பொதுமக்கள். தி.மு.க. அரசு பேருந்து கட்டணத்தை உயர்த்துவதற்கு முன்பாகவே, ''டீசல் லிட்டருக்கு நான்கு ரூபாய் உயர்த்தப்பட்டுவிட்டது; இதனால் போக்குவரத்துக் கழகங்கள் பெரும் நஷ்டத்துக்கு ஆளாக நேரிடும். இந்த நிலையைப் போக்க உடனடியாக பஸ் கட்டணத்தைக் கண்டிப்பாக உயர்த்த வேண்டும்'' என கருணாநிதிக்கு ஆலோசனை வழங்கியதே காங்கிரசின், தொழிற்சங்கத் (ஐ.என்.டி.யு.சி)தலைவர் வி.சௌந்தர்ராஜன் தான்!

எதிர்க்கட்சிகளின் இந்த இரட்டை வேடம் ஒருபுறமிருக்க, பா.ஜ.க.வும், தி.மு.க.வும் நடைமுறைப்படுத்தி வரும் தாராளமயப் பொருளாதாரக் கொள்கைகளுக்கு மாற்றாக, காங்கிரசிடமும், அ.தி.மு.க. விடமும், இடது - வலது கம்யூனிஸ்டுகளிடமும் என்ன பொருளாதாரக் கொள்கை உள்ளது என்பதுதான் கேள்விக்குரிய முக்கிய விசயம்.

தாராளமயத்தை அறிமுகப்படுத்தியதே காங்கிரசு கட்சிதான்; ''ஸ்பிக்''-இன் பங்குகளை தரகுமுதலாளி ஏ.சி. முத்தையாவுக்கு விற்ற ஜெயாவிற்கு, டியு - பாண்டையும், ஸ்டெர்லைட்டையும் தமிழகத்திற்கு அழைத்துவந்த ஜெயாவிற்கு, தாராளமயத்தை எதிர்ப்பதற்கான அருகதையே கிடையாது. தாராளமயத்தை எதிர்ப்பதாகக் கூறும் இடது - வலது கம்யூனிஸ்டுகளின் யோக்கியதை, மேற்கு வங்கத்தில் சந்தி சிரிக்கிறது. எனவே, தாராளமயம் - தனியார்மயத்தை முறியடிப்பதற்கு, ஓட்டுக் கட்சிகளைப் புறக்கணிப்பதும், புரட்சிகர அமைப்புகளில் அணி திரளுவதும்தான் இந்திய மக்களின் முன்னுள்ள ஒரே மாற்று வழி!

● ரஹீம்

## அரசு வங்கிகளில் தனியார்மயம் - திருடன் கையில் பெட்டிச்சாவி

காப்பீடு துறைக்கு அடுத்து, பணப்புழக்கம் நிறைந்த அரசுடைமையாக்கப்பட்ட இந்திய வங்கிகளை, தனியார் முதலாளிகள் கைப்பற்றிக் கொள்ளுவதற்கு வசதியாக, இவ்வங்கிகளில் மைய அரசிற்கு இருக்கும் பங்கை 51 சதவீதமாகக் குறைந்துக் கொள்ளப் போவதாக அறிவித்துள்ளது, பா.ஜ.க அரசு.

"தேசிய" வங்கிகள் அரசின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்தபொழுதே, அரசியல் செல்வாக்குமிக்க முதலாளிகள், தொழில் தொடங்குகிறோம் என்ற பெயரில், இவ்வங்கிகளிடமிருந்து 45,000 கோடி ரூபாய் கடனாகப் பெற்று மோசடி செய்துள்ளனர். இந்த நிலையில், "தேசிய" வங்கிகளைத் தனியாருக்குத் திறந்துவிடுவது, திருடன் கையிலேயே பெட்டிச் சாவியைக் கொடுப்பது போலத்தான்!

இம்மோசடி முதலாளிகளின் பெயர்களைக்கூட வெளியேவிட மறுத்து, அவர்களைப் பாதுகாக்கும் பா.ஜ.க கூட்டணி அரசு, "தேசிய" வங்கிகளின் நட்டத்தை ஈடுகட்ட வங்கி ஊழியர்களைப் பலியிடத் துடிக்கிறது. தனியார் முதலாளிகளுக்குக் கடன் கொடுத்துப் போண்டியான "இந்தியன் வங்கி," "யுகோ வங்கி," "ஐக்கிய இந்திய வங்கி" — இம்மூன்று வங்கிகளிலும், ஊழியர்களை "தங்கக் கை குலுக்கல்" மூலம் வேலையில் இருந்து துரத்தியடிப்பது, ஊதிய உயர்வு வெட்டு, ஊதியக் குறைப்பு மூலம் நட்டத்தை ஈடுகட்டும் திட்டத்தை வர்மா கமிட்டி அறிவித்துள்ளது.

## செந்தண்ணீர்புரம் சுற்றுச்சூழல் பிரச்சினை போராட்டம் வெற்றி

திருச்சி சங்கிலியாண்டபுரம் அண்ணா நகரில் அரசியல் ரவுடி மரியம் பிச்சைக்குச் சொந்தமான இடத்தில் சிமெண்ட் தயாரிப்பதற்கான நச்சுத் தன்மை கொண்ட இரசாயனப் பொருள் கொட்டப்பட்டு வந்தது. இந்த இரசாயனப் பொருளால் பகுதி மக்களுக்கு கண் எரிச்சல், தோல் நோய் போன்ற இனம் புரியாத நோய்கள் ஏற்பட்டன. இதை அகற்றும்படி அரசுக்கும், சுற்றுச்சூழல் துறைக்கும் காவல் துறைக்கும் பலமுறை மனுக் கொடுத்தும் பலனில்லை. இதன்பின், பு.மா.இ.மு. தோழர்கள் நச்சுப் பொருள் ஏற்றி வந்த லாரிகளைத் தடுத்தனர்.

ஆயிரக் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டு, புகார் செய்த போதும் எட்டிப் பார்க்காத போலீசு, மரியம்பிச்சையின் லாரி மறிக்கப்பட்டதும் தடியுடன் பாய்ந்து ஓடி வந்தது. அப்போதும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பதில் 'புறம்போக்கில் குடியிருக்கும் நாய்களுக்குப் போராட்டமா?' எனக் கூறி, போராடியவர்களில் 11 பேரைக் கைது செய்து பொன்மலை போலீசு நிலையம் கொண்டு சென்றது.

சட்டவிரோதமாக 11 தோழர்களும் காவல் நிலையத்தில் அடைக்கப்பட்டு மிருகத்தனமாகத் தாக்கப்பட்டனர். ஆய்வாளர் காதர் பாட்சா, உதவி ஆய்வாளர்கள் தேவராஜ், ஜோதி மகாலிங்கம் மற்றும் பிற போலீசார் மரியம் பிச்சையின் எடுபிடிகளாக, கைக்கூலிகளாக நடந்து கொண்டனர். காயம்பட்ட தோழர்களை மருத்துவமனைக்கு அனுப்பாமல் சிறைக்கு அனுப்பினார் நீதிபதி.

போலீசின் மிருகவெறித் தாக்குதலைக் கண்டித்து சுவரொட்டிகள் ஒட்டிய ம.க.இ.க. தோழர்கள் இருவரைத் தாக்கி, சிறையிலடைத்தது அதே பொன்மலை போலீசு. தோழர்களைக் குண்டர் சட்டத்தில் போடுவேன் என மிரட்டிய போலீசு, தேவையின்றி சாதி கேட்டும் இழிவுபடுத்தியது.

போலீசார் அடக்குமுறையை ஏவிய போதிலும் போராட்டம் தொடர்ந்ததால், பிரச்சினை மேலும் பெரிதாகும் எனப் புரிந்து கொண்டு, இரசாயனப் பொருளை மக்கள் வசிக்கும் பகுதியில் கொட்டப்படுவது இப்போது தடைசெய்யப்பட்டுவிட்டது.

தோழர்கள் மீதான பொய் வழக்குகள் மட்டும் நீடிக்கின்றன. சுமார் ஒரு மாதச் சிறைவாசத்திற்குப் பின், 11 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். பு.மா.இ.மு. செயலர் தோழர் சேகர் முழங்கால் எலும்பு முறிந்து நடக்க முடியாத நிலையில் இருக்கிறார். ஆனால் போலீசு - ரவுடி கள்ளக்கூட்டு ஓர் இடத்தில் முறிக்கப்படுவதும் நடந்துள்ளது.

தகவல்:
பு.மா.இ.மு., திருச்சி.


படிப்பகம்

www.padippakam.com

# இவனோடும் சண்டை நமக்கு இயற்கையோடும் சண்டை

“ஐயோ! எங்களைக் காப்பாத்துங்க! என்று ஊரே அலறியது. சுழன்று வீசிய புயல்காற்றிலும் அந்த மரண ஓலம் எனக்குத் துல்லியமாகக் கேட்டது. நாங்கள் கைகளைக் கோர்த்தபடி கடும்புயல் வெள்ளத்தின் நடுவே உயிர்பிழைக்க நீந்திச் சென்றோம். வெள்ளம் இழுத்த வேகத்தில் நாங்கள் பிய்த்தெறியப்பட்டோம். புயலும் வெள்ளமும் என்னைப் புரட்டி எடுத்தது. ஒருபெரிய மரக்கிளையில் நான் மோதப்பட்டபோது, அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன். மர உச்சியில் கொட்டும் மழையிலும் கொலைகாரப் புயலிலும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இருந்தேன். புயல் ஓய்ந்த பிறகு நீந்தி வந்து கரையேறினேன். எங்கு இருக்கிறேன் என்றே தெரியவில்லை. வெள்ளம் சற்றே வடிந்த பிறகு, திசையறிந்து எனது கிராமத்தை நோக்கிச் சென்றேன். அங்கு நான் பிறந்து வளர்ந்த கிராமத்தையே காணவில்லை. எனது ஊராரும் உறவினர்களும் என்ன ஆனார்கள் என்றே தெரியவில்லை'' என்று பீதியுடன் விம்முகிறார் ஜதிபாரி கிராமத்தைச் சேர்ந்த துரியோதனதாஸ் எனும் விவசாயி. புயல் பயங்கரத்தைப் பற்றிச் சொல்லும்போதே அவரது உடல் பயத்தால் நடுங்குகிறது.

''நான் நாலு ஏக்கர் நிலத்துடன் வசதியாகவே வாழ்ந்தேன். கொலைகாரப் புயல் தாக்கி ஓய்ந்த பிறகு எனக்கு உடமையாக எதுவுமில்லை. எனது நிலத்தில் கடல்நீர் புகுந்து பாழாகிவிட்டது. எனது மாடுகள் இறந்துவிட்டன. எனது வீடு நொறுங்கிக் கிடக்கிறது. எனது குடும்பத்தாரையும் இழந்துவிட்டேன். பட்டினியை இதுவரை அறிந்திராத நான் 15 நாட்களாகப் பட்டினியால் பரிதவிக்கிறேன்'' எனத் தனது அவல நிலையைக் கண்ணீரோடு கூறுகிறார், மிச்சு மகரா என்ற விவசாயி. மிச்சுமகரா, இன்று எர்சமா நகரிலுள்ள மருத்துவமனை அருகே கையில் தட்டுடன் பிச்சை எடுக்கிறார்.

ஒரிசாவில் கடந்த அக்டோபர் மாதம் 29,30 தேதிகளில் வீசிய கொடிய புயலால் அம்மாநிலத்தின் கடற்கரையை ஒட்டிய 12 மாவட்டங்கள் இன்று சிதைந்து நிற்கிறது. உலகப் போர்களில் மட்டுமே காணக்கூடிய அளவுக்கு பிணக்குவியல்கள். 12 லட்சம் ஹெக்டேர் பாசன நிலங்கள் பாழாகிவிட்டன. 30 லட்சம் கால்நடைகள் மாண்டு விட்டன. 2 கோடி பேர் வீடு - வாசல் இழந்து பரிதவிக்கிறார்கள். இதுவரை 10,000 - பேருக்குமேல் மாண்டு விட்டதாகச் செய்திகள் வருகின்றன. ஆனால், 50,000 பேருக்கு மேல் இறந்திருக்கலாம் என்று தொண்டு நிறுவனங்கள் மதிப்பிடுகின்றன.

பிணங்கள் குவியல்குவியலாக மண்வாரி எந்திரங்கள் மூலம் அள்ளப்பட்டு பெரிய அளவில் குழிதோண்டிப் புதைக்கப்படுகின்றன. அங்கு உறவினர்களோ, நண்பர்களோ, சுற்றத்தாரோ இல்லாததால், அழுவதற்குக்கூட நாதியில்லாத அவலம் தொடர்கிறது.

மணிக்கு 250 கி.மீ வேகத்தில் வீசிய கோரமான புயலால் இருநாட்களில் ஒரிசாவின் முதுகெலும்பான கடற்கரையோர விவசாய விளைநிலங்கள் பாழாகிப் பரிதவிக்கும் விவசாயிகள்; படகுகள் - வலைகளை இழந்து நிற்கும் மீனவர்கள்; ஆடு மாடு - வீடுகளை இழந்ததோடு, உற்றார் - உறவினர்களை இழந்து தவிப்பவர்கள், பெற்றோரையும் உடன்பிறந்தாரையும் பறிகொடுத்து. அனாதைகளாகி நிற்கும் சிறுவர் - சிறுமிகள் என அம்மாநிலமே மாளாத்துயரத்தில் தவிக்கிறது. சில்லிட வைக்கும் வாடைக் காற்றில் பிணநாற்றம் வீசுகிறது.

இந்த நூற்றாண்டில் இதுவரை கண்டிராத கோரமான புயல் தாக்குதலாலும், கற்பனை செய்ய முடியாத பேரழிவாலும், உற்றார் உறவினர்களையும் உடமைகளையும் இழந்து பட்டினியில் பரிதவிக்கும் வேதனையாலும், உயிர் பிழைத்த பலர் இன்று விரக்தியில் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளனர். ''எல்லோரையும் எல்லாவற்றையும் இழந்துவிட்ட பிறகு நான் மட்டும் ஏன் உயிர்வாழ வேண்டும்'' என்று பல பெண்கள் துக்கம் தாளாமல் தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

இயற்கையின் சீற்றத்தால் இன்று ஒரிசா துயர வெள்ளத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. இருப்பினும், இந்த அளவுக்குப் பேரழிவுகளும் மனித உயிரிழப்புகளும் ஏற்பட்டிருப்பதை நிச்சயம் தவிர்த்திருக்க முடியும். வானிலை ஆராய்ச்சி நிலையம் புயல் அபாயம் பற்றி எச்சரித்ததும், கடற்கரை மாவட்ட மக்களையும் கால்நடைகளையும் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றியிருந்தால், இவ்வளவு பேரழிவு நிச்சயம் ஏற்பட்டிருக்காது. ஆனால், அதிகாரிகளோ மக்கள் நலனில் கடுகளவும் அக்கறை

**மரணப் புயலின் கோரத் தாண்டவத்தால், உருக்குலைந்து போன கடற்கரையோர கிராமம்**




**பாலிதீன் கூடாரம் அமைத்துத் தரக்கூட வக்கற்ற அதிகார வர்க்கம். சாலை ஓரத்தில் துணிகளால் கூடாரம் அமைத்து பசியிலும் குளிரிலும் பரிதவிக்கும் மக்கள்**




படிப்பகம்

www.padippakam.com



எர்சமா நகரில் விநியோகிக்கப்படாமல் கெட்டழுகிக் கிடக்கும் உணவு தானிய மூட்டைகள்: அதிகார வர்க்க அலட்சியம்.

யின்றி, எந்தவொரு பாதுகாப்பு நடவடிக்கையும் மேற்கொள்ள வில்லை. புயல் அபாயம் பற்றி மீனவர்களுக்குக்கூட அறிவிக்க வில்லை. இதனால் அஸ்டராங் பகுதியில் ஆயிரத்துக்கும் மேற் பட்ட மீனவர்கள் நடுக்கடலில் புயலில் சிக்கிப் பரிதாபமாக மாண்டு போயுள்ளனர்.

ஒரிசாவை இக்கொலைகாரப் புயல் தாக்கியதற்கு சில நாட்கள் முன்னதாக - அக்டோபர் 17-ந் தேதியன்று ஒரு குறும்புயல் தாக்கியது. அதில் 200 பேர் மாண்டனர். ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்து பரிதவித்தனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளும் கிடைக்கவில்லை. பட்டினியால் பரிதவித்த மக்கள் அரசு உணவுக் கிடங்குகளையும் ரேஷன் கடைகளையும் சூறையாடினர். அண்மையில் திருச்சியில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் திருவரங்கம் எம்.எல்.ஏ. மாயவனைச் சிறைபிடித்து எச்சரித்ததைப் போல, ஒரிசா மக்களும் தமது எம்.எல்.ஏ.க்களையும் அதிகாரிகளையம் சிறைபிடித்து "கெரோ" செய்து விரட்டியடித்தனர். ஆனாலும், அதன் பிறகாவது அதிகார வர்க்கம் பொறுப்பாகச் செயல்பட்டதா? ஒருபோதும் இல்லை.

அக்டோபர் 29,30 தேதிகளில் ஒரிசாவின் கடற்கரையோர மாவட்டங்களை கொடும்புயல் தாக்கிப் பேரழிவுகளை ஏற்படுத்தி விட்டு ஓய்ந்த பின்னர், பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடவோ, மீட்புப் பணிகளை, நிவாரண உதவிகளைச் செய்யவோ அதிகார வர்க்கம் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

புயலுக்குப் பின்னே வெள்ளத்தில் சிக்கி மாண்டவர்கள், மழையாலும் குளிராலும் விறைத்துப் போய் இறந்தவர்கள், பல நாட்கள் உணவின்றிப் பட்டினியால் செத்தவர்கள், குடிநீர் கிடைக்காமல் மாசுபடிந்த வெள்ள நீரைக் குடித்து காலரா - வயிற்றுப் போக்கினால் மாண்டவர்கள், அரசு மருத்துவமனைகளில் மருந்து தட்டுப்பாட்டினால் சிகிச்சை கிடைக்காமல் இறந்தவர்கள் - எனப் புயலுக்குப் பின்னரும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அதிகார வர்க்கத்தின் அலட்சியத்தால் கொத்துக்கொத்தாக மடிந்து போயுள்ளனர்.

மைய அரசிடமிருந்தும், பிற மாநிலங்களிடமிருந்தும் நிவாரண உணவுப் பொருட்களும், மருந்துகளும், துணிமணிகளும் ஒரிசாவுக்கு வந்திறங்கிய போதிலும், அவற்றை முறைப்படுத்தி விநியோகிக்கக்கூட அதிகாரவர்க்கம் இலாயக்கற்று கிடக்கிறது. கடந்த நவம்பர் முதல் வாரத்தில் மைய அரசு அனுப்பிய உணவுப் பொருட்களில் 13,000 டன் அளவுக்கு விநியோகிக்கப்படாமலேயே அழுகிக் கெட்டுப்போயிற்று. அவசர கால உதவித்தொகையில் ரூ. 52 கோடி நிவாரணத் தொகையை பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னமும் விநியோகிக்காமல் அதிகார வர்க்கம் தனது சிவப்பு நாடாத்தனத்தால் முடக்கி வைத்துள்ளது.

தமிழக அரசு சிறப்பு ரயில் மூலம் அனுப்பி வைத்த நிவாரண உணவுப் பொருட்கள்கூட, இன்னமும் விநியோகிக்கப்படவில்லை. நிவாரண உதவிக்காக பல மாநிலங்களிலிருந்து அனுப்பப்பட்ட துணிமணிகள், போர்வைகளில் 30% மட்டுமே பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. மீதியுள்ள 60,000 வேட்டி - சேலைகள் அப்படியே முடங்கிக் கிடக்கின்றன. குடிநீர் இல்லாத நிலையில், மாசு படிந்த வெள்ள நீரைச் சுத்திகரிக்க வழங்கப்பட்ட குளோரின் மாத்திரைகளைக்கூட, பாதிக்கப்பட்ட மக்களிடம் விநியோகிக்காமல், அதிகார வர்க்கம் அலட்சியமாகச் சொரணையின்றிக் கிடக்கிறது. புயல் ஓய்ந்து ஒரு மாதமாகியும் மாவட்டத் தலைமை நிவாரண மையத்துக்குக்கூடத் தொலைபேசி இணைப்புச் சீரமைக்கப்படவில்லை. வெள்ளம் வடியும்போது அன்றாடம் கண்டறியப்படும் பிணங்களை அகற்றக்கூட எந்த நடவடிக்கையும் இல்லை.

மாவட்ட ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களின் அருகே நிவாரணப் பொருட்களுடன் நீண்ட வரிசையில் லாரிகள் பல நாட்களாகக் காத்து நிற்கின்றன. அவற்றை எந்தெந்த கிராமங்களுக்குக் கொண்டு செல்வது என்று அதிகாரிகளுக்கே தெரியவில்லை. அதற்கான உத்தரவோ, வழிகாட்டலோ மாநிலத் தலைமைச் செயலகத்திடமும் இல்லை. அதேசமயம், நகரங்களின் நெடுஞ்சாலைகளில் பட்டினியால் பரிதவிக்கும் மக்கள் கையில்



ஜகத்சிங்பூர் அருகே, நெடுஞ்சாலையில் நிவாரண உணவுக்காகக் காத்திருக்கும் அனாதையாகிவிட்ட சிறுமி

ஆறுதல் நாடகம் நடத்த வந்த ஒரிஸ்ஸா மாநிலத்தைச் சேர்ந்த மைய அமைச்சர் நவீன் பட்நாயக்கை, தாளமுடியாத ஆத்திரத்தோடு சுற்றி வளைத்துக் கொண்ட கிராம மக்கள்




படிப்பகம்

www.padippakam.com



பட்டினியால் வெள்ளநீரைக் குடித்து, காலரா நோய் தாக்கி மருத்துவமனையில் உயிருக்குப் போராடும் குழந்தை

தட்டோடு நிவாரண உணவுக்காக காத்துக் கிடக்கின்றனர்.

நவம்பர் முதல் வாரத்தில் நிவாரணப் பணிகளைச் செய்வதற்கான திட்டமோ, வழிகாட்டலோ தராமல் பூரி மாவட்ட ஆட்சியாளர் விடுப்பில் ஓய்வெடுக்கப் போய்விட்டார். பத்ராக் மாவட்ட ஆட்சியாளர், தனது பூர்வீக சொத்து இருக்கிறதா, புயல் - வெள்ளத்தில் நாசமாகிவிட்டதா என்று தேடிப் போய்விட்டார். முதல்வர் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது ஜாஜ்பூர் மாவட்ட ஆட்சியாளர் கிடைக்கவில்லை. 'உழைத்த' களைப்பு நீங்க அவர் இரவு 7 மணிக்கே குடித்துவிட்டு படுக்கைக்குச் சென்றுவிட்டதாக முதல்வருக்குத் தகவல் வந்தது.

வீடிழந்து, நெடுஞ்சாலை ஓரங்களில் தங்கியுள்ள மக்களுக்கு பாலிதீன் பாய்கள் கிடைத்தால், கூடாரம் அமைத்து மழை - குளிரிலிருந்து தப்பிக்க உதவியாக இருக்கும். இந்தத் தற்காலிக உடனடி உதவியைக்கூட அதிகார வர்க்கம் செய்ய முன்வரவில்லை. புயல் ஓய்ந்து ஏறத்தாழ ஒரு மாதத்துக்குப் பின்னரே பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாலிதீன் பாய்கள் தரப்பட்டன. வெளி மாநிலங்களிலிருந்து அதிக விலைக்கு அவசரமாக வாங்கியதாகக் கணக்குக்காட்டி, இதிலேயும் அதிகாரவர்க்கம் கோடி கோடியாய்ச் சுருட்டியுள்ளது. இது தவிர, பல இடங்களில் போலீசாரே நிவாரண உணவுப் பொருட்களைச் சூறையாடிச் செல்லும் கொடுமையும் நடந்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு இரு நாட்களுக்கு ஒருமுறை அரைகிலோ அரிசியும் ஒரு லிட்டர் மண்ணெண்ணெய்யும் வழங்கப்படுவதாக அதிகார வர்க்கம் அறிவித்தது. ஆனால், முதற்கட்டமாக வழங்கப்பட்ட பிறகு அதிகாரிகள் எட்டிக் கூடப் பார்க்கவில்லை. இன்னமும் பல்லாயிரக் கணக்கான மக்கள் பட்டினியால் பரிதவிக்கின்றனர். புளிய இலைகளைக் கொதிக்க வைத்துக் குடித்தும், புயலில் விழுந்து வெள்ளத்தில் ஒதுங்கும் அழுகிய தேங்காய்களைத் தின்றும், நாய்க்குடைக் காளான்களை வேகவைத்து உண்டும் பசியுடன் போராடுகின்றனர்.

''லாரிகளில் உணவுப் பொருட்கள் போலீசு பாதுகாப்புடன் எங்கோ செல்கின்றன. ஹெலிகாப்டர்கள் வட்டமிடுகின்றன. ஆனால், எங்களுக்கு உணவு கிடைப்பதில்லை. பசியால் அழும் எங்கள் குழந்தைகள் இறந்துவிடுமோ என்று அச்சமாக இருக்கிறது. அரசாங்கம் எங்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை'' என்று குமுறுகிறார் ஒரு தாய்.

மக்களின் வரிப்பணத்தில் தின்று கொழுக்கும் இந்த ஒட்டுண்ணி வர்க்கம் மக்களுக்குச் சேவை செய்யுமா? மக்களை மேய்ப்பதற்கென்றே பயிற்றுவிக்கப்பட்ட இந்தச் சுரண்டல் வர்க்கம் ஒருக்காலும் மக்களுக்கு உதவி செய்யாது. மக்களை ஒடுக்கிச் சுரண்டி நிர்வகிப்பதற்கு என்றே உருவாக்கப்பட்டுள்ள இந்தப் புல்லுருவிக் கூட்டத்திடம் அதை எதிர்பார்க்கவும் முடியாது. அதனால்தான் நிவாரணப் பொருட்களைச் சூறையாடி கடத்திச் செல்வோரைக் கட்டிவைத்துத் தண்டிக்கும் உழைக்கும் மக்கள், உரிய நிவாரண உதவிகளைக் கோரி அதிகாரிகளை முற்றுகையிட்டு ''கெரோ'' செய்யும் போராட்டங்களை பட்டினியோடு தன்னெழுச்சியாக நடத்துகின்றனர்.

## அவலத்தின் நடுவே அமெரிக்க நிறுவனத்தின் பகற்கொள்ளை


கடந்த மூன்றாண்டுகளாக, ஒரிசாவின் கடற்கரையோர மாவட்டங்களில் மின்சார விநியோகம், மைய மின் விநியோக கம்பெனி என்ற தனியார் நிறுவனத்திடம் தாரைவார்க்கப்பட்டுள்ளது. இதில் மிகப்பெரிய பங்குதாரராக அமெரிக்காவின் ஏ.ஈ.எஸ். கார்ப்பரேஷன் என்ற பன்னாட்டு நிறுவனம் உள்ளது. புயல் தாக்கி ஓய்ந்ததும், இந்நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஒரிசாவுக்கு ஓடி வந்து, தமது நிறுவனத்துக்கு ரூ. 300 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறினார். நட்டஈட்டை மாநில அரசு தற்போதைய நிலையில் கொடுக்க முடியாவிட்டால், மின்கட்டணத்தை குறைந்தபட்சம் 3 மடங்கு உயர்த்தி மக்களிடம் வசூலிக்கப் போவதாக எச்சரித்துள்ளார். ''யார் எக்கேடு கெட்டால் எனக்கென்ன? எனக்கு இலாபம் தான் வேண்டும்!'' என்று புயலால் பாதிக்கப்பட்டு பரிதவிக்கும் மக்களை ஒட்டச் சுரண்டக் கிளம்பியுள்ளது இந்நிறுவனம். மயிரளவும் மனிதாபிமானற்ற கொடூர கொள்ளைக்காரர்கள்தான் ஏகாதிபத்தியவாதிகள் என்பதை என்பதை இது மீண்டும் நிரூபித்துக் காட்டுகிறது.

ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கு முன்பு மதுரையில் வைகையாற்றில் பெருவெள்ளம் வந்து குடிசைவாசிகள் தத்தளித்த அவலத்தை, மக்களின் குமுறலை, ''இவனோடும் சண்டை; நமக்கு இயற்கையோடும் சண்டை'' என்று ''வெள்ளம் வந்து அரிக்குதடா!'' எனும் பாடலில் குறிப்பிட்டார் கவிஞர் செவ்வண்ணன். இன்று அத்தகைய நிலைதான் ஒரிசாவில் நீடிக்கிறது.

இயற்கைகூட எப்போதாவதுதான் சீறுகிறது. பெரும்பாலான காலங்களில் அது மனித குலத்துக்கு உதவும் நண்பனாகவே இருந்து வருகிறது. ஆனால், மக்களிடமிருந்து அந்நியப்பட்டு, மக்களுக்கே எதிராக உள்ள அதிகார வர்க்கம் என்றுமே மக்களுக்கு உதவியதாக, சேவை செய்ததாக வரலாறே கிடையாது.

● சுப்பு

## தோழர். ஜார்ஜ் டிமிட்ரோவ் 50-ஆவது நினைவு நாள் 2.7.1999



இது, தோழர். டிமிட்ரோவின் 50-ஆவது நினைவு ஆண்டு. பல்கேரியாவில் ஒரு கூலி விவசாயப் பெண்ணின் மகனாகப் பிறந்து, வெறும் இரண்டாம் வகுப்புக் கல்வித் தகுதியுடன் அச்சுத் தொழிலாளியாகப் பணியாற்றி, கம்யூனிஸ்டு போராளியாக, பொதுவுடைமை அகிலத்தின் பொதுச் செயலராகப் பொறுப்பேற்று வழி நடத்தியவர் தோழர். டிமிட்ரோவ்.

பாசிசத்தின் வாய்ச்சவடால்களில் உலகம் மயங்கியபோது, ''பாசிசம் என்பது நிதிமூலதனத்தின் ஆகப் பிற்போக்கான பிரிவின் அப்பட்டமான பயங்கரவாத சர்வாதிகாரம்'' என்று அதனைத் திரைகிழித்தார். பாசிசத்திற்கெதிரான அய்க்கிய முன்னணி எனும் கோட்பாட்டையும் வகுத்து, உலகத் தொழிலாளி வர்க்கத்திற்கு அளித்தார். நாஜி நீதிமன்றத்தில் கைதியாக நின்று கொண்டே பாசிஸ்டுகளைக் குற்றம் சாட்டிய வீர உரை, அவரது போர்க் குணத்திற்கோர் சான்று.

மறுகாலனியாக்கம், இந்துமதவெறிப் பாசிசம் எனும் இரட்டை எதிரிகளை நாம் சந்திக்கும் இன்றைய தருணத்தில் டிமிட்ரோவின் நினைவை நெஞ்சிலேந்துவோம்!


படிப்பகம்

www.padippakam.com

தலையங்கம் தொடர்ச்சி

விட்டன. தென் மாவட்டங்களில் தேவர்கள், வட மாவட்டங்களில் வன்னியர்கள், மேற்கு மாவட்டங்களில் கவுண்டர்கள் எனச் சாதி ரீதியாகக் கணக்கு போட்டு இவை காய்களை நகர்த்துகின்றன. கொள்கை - இலட்சியம் எல்லாம் கிழிந்து கந்தலாகிவிட்ட நிலையில், சாதிவெறியையும் பிளவையும் மோதலையும் பகைமையையும் நிரந்தரமாக்கிக் கெட்டிப்படுத்தி ஓட்டுப் பொறுக்கும் திசையிலேயே அவை செயல்படுகின்றன.

சாதிய முரண்பாட்டை ஊதிவிடுவதில் வேறு வேறு அணியில் நிற்பதாகத் தோற்றம் தரும் இப்பிழைப்புவாதக் கட்சிகள், தனியார்மயம் - தாராளமயம் என்னும் நாட்டை மறுகாலனியாக்கும் கொள்கையில் ஓரணியில் ஒன்றுபட்டு நிற்கின்றன. தனியார்மயம், விலையேற்றத்தால் பரிதவிக்கும் மக்களின் அதிருப்தியையும் ஆத்திரத்தையும் ஆதாயமாக்கிக் கொள்வதைத் தவிர, மாற்றுக் கொள்கையோ - திட்டங்களோ எதிர்க்கட்சிகளிடம் கிடையாது.

கட்டண உயர்வு, ரேஷன் அரிசி உள்ளிட்டு அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், ஆலைமூடல், ஊதியவெட்டு ஆட்குறைப்பு, வேலையிழப்பு, விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு உரியவிலை இல்லாமை என தனியார்மய - தாராளமயப் பொருளாதாரத் தாக்குதல்களால் உழைக்கும் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வீதிக்கு வந்து போராடும் இன்றைய நிலையில், அவற்றை ஒருங்கிணைத்து அரசியல் போராட்டங்களை - வர்க்கப் போராட்டங்களை நடத்த வேண்டிய இத்தருணத்தில், ஓட்டுக் கட்சிகள் சாதிவெறியர்களிடம் சரணடைந்து சாதிய ஓட்டு வங்கியைக் கைப்பற்ற ஆலவட்டம் போடுகின்றன.

உழைக்கும் மக்களின் அரசியல் - பொருளாதாரப் போராட்டங்களைத் திசை திருப்பி, பின்னுக்குத் தள்ளிவிடும் மிக அபாயகரமான, மக்களுக்கே எதிரான கூட்டணியே இது. நாடும் மக்களும் எக்கேடு கெட்டால் என்ன? நம்ம சாதிக்காரனுக்கு எத்தனை சீட்டு, எத்தனை அமைச்சர் - அதிகாரிகள் பதவி என்று குறுகிய சாதிவெறியில் மக்களை ஆழ்த்தி ஆதாயமடையும் அரசியல் கழிசடைத்தனத்தின் இழிந்த இறுதிநிலையே இது. பீகார், உ.பி. மாநிலங்களின் வழியில், தமிழக மக்களை சாதி ரீதியாகப் பிளவுபடுத்தி மோதவிட்டு ஓட்டுப் பொறுக்க எத்தனிக்கும் இந்த அபாயகரமான அரசியல் போக்கை அம்பலப்படுத்தி முறியடிப்பதும், தனியார்மய - தாராளமயத்துக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வதுமே உழைக்கும் மக்களை எதிர்கொண்டுள்ள இன்றைய முக்கிய கடமைகளாகும்.

# தீபாவளி வேட்டுச் சத்தத்தை விஞ்சிய நவம்பர் புரட்சி விழா!

மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து, தமிழகத்தில், தாம் இயங்கி வரும் பகுதிகளில் எங்கும் நவம்பர் 7 அன்று ரசிய சோசலிசப் புரட்சியின் 83 ஆம் ஆண்டு துவக்கத்தை நினைவு கூர்ந்து விழா எடுத்தன. பல்வேறு மதங்களைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் மத்தியில் நவம்பர் புரட்சி நாளை, "மாற்று கலாச்சார விழாவாக" அறிமுகப்படுத்தும் நோக்கோடு, இவ்வமைப்புகள் நவம்பர் புரட்சி விழாவை ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடி வருகின்றன. இந்த ஆண்டு நவம்பர் 7 இல் நடந்த விழா, சீனப் புரட்சியின் ஐம்பதாம் ஆண்டு நிறைவடைந்ததையும் இணைத்துக் கொண்டாடப் பட்டது.

இந்த ஆண்டு அதே நாளில் தீபாவளியும் வந்துவிட, வேட்டுச் சத்தத்தையும் மீறி, "உழைக்கும் மக்கள் கொண்டாட வேண்டியது நவம்பர் புரட்சி விழா" தான் என்பதை அவர்களின் மனதில் நச்சென்று பதியும் வண்ணம், பகுதி மக்கள் அனைவரும் பங்கெடுத்துக் கொள்ளும் வண்ணம், மக்கள் விழாவாகக் கொண்டாடப்பட்டது.

சோவியத் யூனியன் இருந்த சுவடுகூடத் தெரியாமல் ஏகாதிபத்தியவாதிகளாலும், கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்த ஐந்தாம் படைகளாலும் அழிக்கப்பட்டுவிட்டது. சீனாவிலோ, "சோசலிசம்" என்ற போர்வையில் முதலாளித்துவத்துக்கு முழு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. சீனாவின் ஆட்சியில் உள்ள திருத்தல்வாத டெங் கும்பலின் வாரிசுகள், இதனை "சந்தை சோசலிசம்" எனப் பீற்றிக் கொள்கின்றனர். இதையெல்லாம் காட்டி, "கம்யூனிசத்திற்குச் சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டது" எனப் பிற்போக்கு சக்திகள் எக்காளமிடுகின்றன.

எனினும், தமிழகத்திலும், நமது நாட்டின் ஏனைய மாநிலங்களிலும், ரசியா உள்ளிட்டு உலகின் பல்வேறு நாடுகளிலும் நவம்பர் புரட்சி தினத்தை நினைவு கூர்ந்து புரட்சிகர சக்திகளால் நடத்தப்பட்ட பேரணிகளும், விழாக்களும் இந்தப் பின்னடைவுகளைக் கடந்து கம்யூனிசமே வெல்லும் என்ற நம்பிக்கையை உழைக்கும் மக்கள் மத்தியில் ஆழ ஊன்றுவதாக அமைந்தன.

● விழுப்புரம் அருகிலுள்ள பனையபுரத்தில் பு.மா.இ.மு. சார்பில் நவம்பர் புரட்சிவிழா சிறப்பாக நடைபெற்றது. 200-க்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்றனர். நாள் முழுக்க புரட்சிகரப் பாடல்கள் மக்களை எழுச்சியூட்ட, காலையில் கம்யூனிச ஆசான்களின் படங்கள் திறக்கப்பட்டன. மதியம் மாணவர்களுக்கான கபடிப் போட்டி நடந்தது. மாலையில் தியாகிகளுக்கு வீரவணக்கத்துடன் தொடங்கிய நிகழ்ச்சியில் தோழர் பூங்கான் சிறப்புரையாற்றினார்.

● திருவாரூர் பகுதியிலுள்ள மணக்கால் கிராமத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு, தோழர்கள் கூடி நவம்பர் புரட்சி பற்றி உரை நிகழ்த்தி, புரட்சிகரப் பாடல்கள் பாடினர்.

● சென்னை சேத்துப்பட்டு பகுதியில் நவம்பர் புரட்சி விழா மற்றும் சீனப்புரட்சி பொன்விழா இரண்டையும் ம.க.இ.க. மற்றும் பு.ஜ.தொ.மு. தோழர்கள் சிறப்பாக நடத்தினர். ஓவியப்போட்டி, விளையாட்டுப் போட்டிகள், பேச்சுப்போட்டி நடத்திப் பரிசுகள் வழங்கினர். மாலையில் பகுதியில் பேரணி, கொடியேற்றம், இசை முழக்கம், என விழா நடந்தது. பு.ஜ.தொ.மு. பொதுச் செயலர் சுப. தங்கராசு சிறப்புரையாற்றினார்.

● திருவெண்ணெய்நல்லூர் வட்டம் பொய்கை அரசூரில் நவம்பர் புரட்சிவிழா எழுச்சிமிக்க முறையில் கொண்டாடப்பட்டது. பெருவாரியான மேற்பட்ட கிராம மக்கள் கலந்து கொண்ட இவ்விழாவில், தோழர் நாராயணன் சிறப்புரையாற்றினார்.

நவம்பர் புரட்சி தின விழாவையொட்டி பொய்கை அரசூரில் நடத்தப்பட்ட கபடிப் போட்டி





படிப்பகம்

www.padippakam.com

## டாட்டா - பிர்லா கூட்டாளி பாட்டாளிக்குப் பகையாளி

# கோயங்காவின் கூட்டாளி?

சென்ற பொதுத் தேர்தலில் ஊழலா - மதவாதமா என்ற மயிர்பிளக்கும் வாதம் தமிழகத்தில் அரங்கேறியபோது, ''பா.ஜ.க மதவாதக் கட்சி மட்டுமல்ல; ஊழல் கட்சியும் தான்'' என்று ஆதார பூர்வமாக மடக்கினார்கள் 'மார்க்சிஸ்டு'கள்.

பா.ஜ.க.வின் ஊழலுக்கு முக்கிய ஆதாரமாக அவர்கள் முன்வைத்தது, தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் ஜெக்மோகனின் பதவி விலகல் விவகாரம்.

பன்னாட்டு மற்றும் தனியார் செல்போன் கம்பெனிகள் மைய அரசுக்குக் கட்டுவதாக ஏற்றுக் கொண்ட லைசன்ஸ் கட்டணம் பலகோடி ரூபாயைக் கட்டவில்லை; தொழிலில் லாபமில்லையென்று அதைத் தள்ளுபடி செய்யக் கோரினார்கள். அமைச்சர் ஜக்மோகன் மறுத்து விட்டார். உடனே ஜெக்மோகனை மாற்றிவிட்டுத் தானே அந்த இலாகாவை எடுத்துக்கொண்டார் வாஜ்பாயி. செல்போன் கம்பெனிகள் கோரிய சலுகைகளையும் வழங்கினார்.

''ஜெக்மோகனை மாற்றியது ஏன்? ஊழல் நடந்திருக்கிறது என்பதற்கு இதைவிட என்ன ஆதாரம் வேண்டும்?'' என்று வாஜ்பாயியை நெத்தியடியாக அடித்தார்கள் 'மார்க்சிஸ்டு'கள். ஜெயலலிதாவும் சேர்ந்து தாக்கினார்.

இது தேர்தலுக்கு முந்தைய கதை. பிந்தைய கதைக்கு வருவோம்.

மேற்கு வங்காளத்தின் மின்சாரத் துறை அமைச்சர் சங்கர் சென் கடந்த அக்டோபர் 4-ம் தேதி தனது பதவியிலிருந்து விலகியிருக்கிறார்.

''மரியாதையாக பதவி விலகிவிடு. இல்லையேல் உன் மகளைக் கொன்று விடுவோம்'' என்று அவருக்குத் தொலைபேசியில் மிரட்டல் வந்திருக்கிறது. சங்கர் சென்னின் மனைவி இறந்து ஓராண்டுதான் ஆகிறது. ஒரே மகளான அனுசுயா ஒரு பள்ளி ஆசிரியை. வயதான காலத்தில் தனது ஒரே ஆதரவான மகளையும் இழக்க அஞ்சிய சென், அமைச்சர் பதவியிலிருந்து விலகிவிட்டார்.

அமைச்சரையே மிரட்டக்கூடிய ஆள் யாராக இருக்கும்? கேவலம்,தொலைபேசி மிரட்டலுக்கெல்லாம் ஒரு அமைச்சர் பயப்படலாமா... என்று வாசகர்கள் சிந்திக்கக்கூடும்.

ஆளும் கட்சி ரவுடிகளின் மிரட்டலுக்கு அஞ்சாமல் போராடி 'மார்க்சிஸ்டு' கட்சியின் பெண் கவுன்சிலர் லீலாவதி உயிரையே துறந்திருக்கிறார்; கள்ளச்சாராய வியாபாரிகளுக்கு எதிராகப் போராடி கடலூரில் ஒரு ஜனநாயக வாலிபர் சங்கத் தொண்டர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்; சாதாரணத் தொண்டர்களுக்கே அவ்வளவு தைரியம் இருக்கும் போது, அரசு அதிகாரத்தையும் போலீசையும் கையில் வைத்திருக்கும் அமைச்சர், ஒரு அநாமதேய தொலைபேசி மிரட்டலுக்குப் பயந்திருப்பாரா என்று 'மார்க்சிஸ்டு' தொண்டர்கள் சந்தேகப்படலாம்.

முதலாளிகள் மிரட்டினால் முதல்வரிடம் முறையிடலாம்; ரவுடிகள் மிரட்டினால் போலீசைக் கூப்பிடலாம்; கட்சித் தலைமையிலிருந்தே கொலை மிரட்டல் வரும் போது வேறென்ன செய்ய முடியும்?

சரி, பிரச்சினையை உடைத்துப் பேசுவோம்.

சங்கர் சென் 'மார்க்சிஸ்டு' கட்சியின் நீண்டநாள் உறுப்பினர் அல்ல; பொறியியல் கல்லூரிப் பேராசிரியராகவும், பிறகு யாதவ்பூர் பல்கலைக் கழகத் துணை வேந்தராகவும் இருந்தவர். சிறந்த பொறியியல் வல்லுனர், அர்ப்பணிப்பு உணர்வு கொண்ட ஆசிரியர் என்று பெயரெடுத்தவர்.

''1991-இல் என்னை வலுக்கட்டாயமாக அரசியலுக்குள் இழுத்து வந்தார்கள்'' என்று சொல்கிறார் சென்.

முதல்வர் ஜோதிபாசு, 'மார்க்சிஸ்டு' கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் பிமன் போஸ், மாநிலச் செயலர் அனில் பிஸ்வாஸ் ஆகிய மூவரும் வற்புறுத்திய போதும் அரசியலில் ஈடுபட சென் சம்மதிக்கவில்லை.

''மேற்கு வங்கத்தை மின் தட்டுப்பாட்டிலிருந்து மீட்க உங்கள் திறமையை நீங்கள் பயன்படுத்த வேண்டும்'' என்று மேற்கு வங்க ஆளுநர் நூருல் ஹசன் மூலம் வற்புறுத்தினார்கள் 'மார்க்சிஸ்டு'கள். உங்களுக்கு முழு சுதந்திரம் அளிக்கப்படும்'' என்று உத்திரவாதம் தந்தார்கள்.

இதற்கு மேலும் மறுக்க முடியாமல் 1991 சட்டமன்றத் தேர்தலில் ''மார்க்சிஸ்டு'' ஆதரவு பெற்ற சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டு வென்றார் சங்கர் சென். உடனே மின்சாரத்துறை அமைச்சராகவும் ஆக்கப்பட்டார்.

மின் உற்பத்தி மற்றும் விநியோகத்தைத் தனியாருக்குத் திறந்து விடுவது என்ற புதிய பொருளாதாரக் கொள்கையை மே.வங்க அரசும் அமல்படுத்தத் துவங்கியது. தரகுப் பெருமுதலாளியான ஆர்.பி. கோயங்காவின் ''கல்கத்தா எலக்டிரிக் சப்ளை கம்பெனி'' என்ற நிறுவனம், 500 மெகாவாட் மின் நிலையம் ஒன்றை கல்கத்தாவில் அமைக்க 1991-இல் அனுமதி வழங்கியது 'மார்க்சிஸ்டு' அரசு. அப்போது இதன் திட்ட மதிப்பீடு 1253 கோடி ரூபாய்.

நான்கு ஆண்டுகளாக வேலையை இழுத்தடித்த கோயங்கா 1995-இல் திட்ட மதிப்பீட்டை உயர்த்தி ரூ. 2300 கோடி செலவாகியுள்ளது என்று கணக்குக் காட்டியது.

ஏற்கனவே ஒப்புக் கொள்ளப்பட்ட காண்டிராக்டைப் போல இது இரண்டு மடங்கு தொகையாகும். அமைச்சர் சென் இதை ஏற்க மறுத்தார். இதற்குப் பின்னால் துவங்கப்பட்ட 1050 மெகாவாட் திறன்கொண்ட அரசுத் துறையின் பக்ரேசுவர் அனல் மின் திட்டம், உரிய காலத்திற்குள்ளும், திட்டமிட்ட தொகையிலும் முடிக்கப்பட்டுள்ளபோது கோயங்காவுக்கு மட்டும் ஏன் தாமதமானது என்று கேள்வி எழுப்பினார். ஆனால் மேற்குவங்க அரசு சங்கர் சென்னுடைய ஆட்சேபத்தை நிராகரித்தது.

''திட்ட முதலீட்டுத் தொகை அதிகரித்தால் அதற்கேற்ப மின்சாரத்தின் விலையைக் கூட்டிக் கொள்ளலாம்'' என்பதுதான் ஒப்பந்தம். எனவே ஒப்பந்தத்தில் உள்ளதைப் போல இரண்டு பங்கு தொகையை மக்களிடம் வசூலிக்கத் தொடங்கியது கோயங்கா நிறுவனம்.

இது ஒருபுறமிருக்க, இன்

**தரகு முதலாளி ஆர்.பி. கோயங்காவுக்குச் சலுகை காட்டும்படி 'மார்க்சிஸ்டு' கட்சித் தலைமையால் மிரட்டப்பட்ட மே. வங்க முன்னாள் மின்துறை அமைச்சர் சங்கர் சென்**





படிப்பகம்

www.padippakam.com

னொரு மோசடியிலும் அந்நிறுவனம் ஈடு பட்டது. ஒவ்வொரு யூனிட் மின்சாரத்தின் மீதும் மாநில அரசுக்கு செலுத்த வேண்டிய வரி என்று சொல்லி ஒரு தொகையை மக்களிடம் வசூலித்தது. ஆனால் அப்படி வசூலித்த தொகை ரூ.450 கோடியை அரசுக்குச் செலுத்தவுமில்லை. சங்கர் சென் இந்த விவகாரத்தைக் கிளப்பிய போது இதையும் 'மார்க்சிஸ்டு' அரசு கண்டு கொள்ளவில்லை.

இந்த மோசடிகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல கோயங்கா நிறுவனம் சென்ற ஆண்டு ஒரு வேலை செய்தது. தனது கணக்குகளைத் திருத்தி நட்டக் கணக்கு காட்டி, நட்டத்தைச் சமாளிக்க மின் கட்டணத்தை மீண்டும் உயர்த்த வேண்டும் என்று கோரியது. ஒரு தணிக்கை அதிகாரியை நியமித்து கணக்குகளைச் சோதனையிட்டு அவை கள்ளக் கணக்குகள் என்று நிரூபித்தார் அமைச்சர் சென்.

உடனே ஜோதிபாசுவைப் பிடித்தார் கோயங்கா. புதிதாக ஒரு தணிக்கை அதிகாரியை நியமித்தார் பாசு. "உண்மைதான். பெருத்த நட்டம்தான் ஏற்பட்டிருக்கிறது" என்று கோயங்காவின் கள்ளக்கணக்குக்கு சான்றிதழ் கொடுத்தார் முதல்வர் நியமித்த அந்த தணிக்கை அதிகாரி.

இந்த அவமானத்தைப் பொறுக்க முடியாமல் சென்ற ஆண்டே தனது பதவி விலகல் கடிதத்தைக் கொடுத்தார் சங்கர் சென். ஆனால் ஜோதிபாசு அவரை எப்படியோ சமரசப்படுத்தி பதவி விலகலை திரும்பப் பெறச் செய்துவிட்டார்.

ஆனால் இப்போது, அக்டோபர் - 4ம் தேதி சங்கர் சென் கொடுத்த பதவி விலகல் கடிதத்தை ஜோதிபாசு ஏற்றுக் கொண்டு விட்டார். தனது மகளைக் கொலை செய்வதாக மிரட்டிய கட்சித் தலைவர் யாரென்பதைச் சமயம் வரும்போது வெளியிடுவேனென்று அறிவித்திருக்கிறார் சங்கர் சென்.

இது 'மார்க்சிஸ்டு' கட்சியினர் மீது "புதிய ஜனநாயகம்" வேண்டுமென்றே செய்யும் அவதூறு அல்ல; "தி வீக்" எனும் ஆங்கில வார ஏட்டில் வெளிவந்துள்ள விவரம் இது. மேற்கு வங்கம் முழுவதும் சிரிப்பாய்ச் சிரிக்கும் விவகாரம் இது.

"கொலை மிரட்டல் எல்லாம் பொய்" என்று வேண்டுமானால் 'மார்க்சிஸ்டு' கட்சித் தலைமை சமாளிக்கலாம். மிரட்டியது யாரென்று சங்கர் சென் அடையாளம் காட்டினால் அதையும் மறுக்கலாம்.

ஆனால் சென் எழுப்பியுள்ள பிரச்சினைகளுக்கு என்ன பதில்? திட்ட மதிப்பீடு இரண்டு பங்காக உயர்த்தியதற்கு என்ன விளக்கம்? 450 கோடி ரூபாய் அரசின் வரிப்பணத்தை கோயங்கா ஏப்பம் விட்டதற்கு என்ன பதில்?

"தனியார் முதலாளிகள் அப்படித்தான் செய்வார்கள். ஒரு அளவுக்கு மேல் நாம் கெடுபிடி செய்ய முடியாது தோழரே" என்று சமாதானம் சொல்வார்கள் 'மார்க்சிஸ்டு' தலைவர்கள்.

"அப்படியானால் மின்திட்டத்தை அரசுத் துறையில் துவங்க வேண்டியது தானே, ஏன் தனியாருக்குத் தர வேண்டும்?" என்று கேட்டால் "உலக வங்கிக்காரன் நிர்ப்பந்திக்கிறான், டில்லி அரசுடைய பொருளாதாரக் கொள்கை அப்படி இருக்கிறது, மேற்கு வங்கம் தனிநாடா என்ன?" - என்று கேட்பார் ஜோதிபாசு.

அப்படியானால் தனியார் மயத்துக்கெதிராக மின்சார வாரியத்தின் சி.ஐ.டி.யு சங்கம் பிரச்சாரம் செய்கிறதே, அது மோசடியல்லவா?

"தால்ச்சார் மின் நிலையக் கட்டுமானத்தை தனியாருக்குக் கொடுக்காதே" என்று பாரத மிகுமின் நிறுவனத்தின் (பெல்) சி.ஐ.டி.யு முழங்குவது இரட்டை வேடமல்லவா?

மகாராஷ்டிரத்தில் என்ரான் செய்யும் மோசடிக்கும், கல்கத்தாவில் கோயங்கா செய்யும் மோசடிக்கும் என்ன வேறுபாடு?

செல்போன் நிறுவன விவகாரத்தில் வாஜ்பாயி செய்ததற்கும், சங்கர் சென் விவகாரத்தில் ஜோதிபாசு செய்திருப்பதற்கும் என்ன வேறுபாடு? அதில் ஊழல் நடந்திருப்பதற்கான சாத்தியக்கூறுகளை பிட்டு வைக்கும் 'மார்க்சிஸ்டு' தலைவர்கள், சங்கர் சென் பிட்டு வைக்கும் உண்மைகளுக்கு ஏன் பதில் சொல்ல மறுக்கிறார்கள்?

கம்யூனிஸ்டு அல்லாத ஒரு மனிதருக்கு இருக்கும் நேர்மை, அவருக்கு மக்கள் நலனில் இருக்கும் அக்கறை, முதலாளிகளின் கொள்ளை மீது அவருக்கிருக்கும் வெறுப்பு - கம்யூனிஸ்டுகள் என்று தங்களை அழைத்துக் கொள்பவர்களுக்கு இல்லையே!

ஊழலை எதிர்த்துப் போராடி உயிர் துறக்கிறார்கள் லீலாவதியைப் போன்ற நேர்மையான தொண்டர்கள். ஊழலை ஆதரிப்பதற்காக நேர்மையான அமைச்சரை வேண்டாமென்று துறக்கிறார் 'மார்க்சிஸ்டு' முதல்வர் ஜோதிபாசு. அவர் தலைமையிலான மே.வங்க 'இடது முன்னணி' அரசை "இது ஒப்பந்தக்காரர்களின் பையில் உள்ள ஊழல் அரசு" என்று வெளிப்படையாகவே சாடினார், 'மார்க்சிஸ்டு' கட்சியின் மூத்த தலைவரும், முன்னாள் திரிபுரா முதல்வருமான நிருபன் சக்ரவர்த்தி. அவரை "பைத்தியக்காரன்" என்று அவதூறு செய்து கட்சியிலிருந்தே வெளியேற்றியது 'மார்க்சிஸ்டு' தலைமை.

இன்னமும் கொடியின் நிறத்தைக் கண்டு ஏமாந்து 'மார்க்சிஸ்டு' கட்சியில் இருக்கும் உண்மையான இளம் தொண்டர்களும், "திருந்திவிடுவார்கள்" என்று மூட நம்பிக்கையில் கட்சியிலிருக்கின்ற பழைய தொண்டர்களும் வெளியேறி புரட்சிகர இயக்கங்களில் அணி சேருங்கள்.

பைத்தியக்காரன் பட்டமும் கொலை மிரட்டலும் வரும்வரை காத்திருக்க வேண்டாம்!

● அஜித்

# உழைப்பவனுக்கு சுடுகாட்டுத் திடல் மேட்டுக்குடியினருக்கு நீச்சல்குளம்

திருச்சி தில்லைநகர் பகுதி கோட்டை நிலையம் சாலையில் கடந்த 28 ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து வந்த நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் குடும்பத்தோடு இன்று வீதியில் வீசியெறியப்பட்டுள்ளனர். இதற்கு முதன்மையான காரணம், விரல் விட்டு எண்ணக்கூடிய மேட்டுக்குடி கும்பல் குடித்து கும்மாளமிடவும், தின்றது செரிக்க சிறிது நேரம் நீச்சலடிக்கவும் ஒரு பெரிய நீச்சல்குளம் கட்ட மாநகராட்சி முடிவெடுத்திருப்பதுதான். இதுதவிர, மேட்டுக்குடியினர் தமது பங்களா மாடியிலிருந்து பார்க்கும்போது இந்த உழைப்பாளிகளின் மண்குடிசைகள் கண்ணை உறுத்தியதும் ஒரு காரணம். கட்டிடம் கட்டுவது, சாலை போடுவது என நிரந்தரமற்ற வேலைகளைச் செய்து வந்த இக்கூலி உழைப்பாளர்களை நகருக்கு வெளியே 10 கி.மீ. தொலைவில் தள்ளி வைத்து, உழைப்புக்கான இடத்தில் குடியிருக்கும் அடிப்படை உரிமையையே திருச்சி மாநகராட்சி பறித்துள்ளது. இதன் விளைவாக, கிடைக்கும் அற்பக் கூலியில் ஒரு பங்கை பேருந்துக்காக செலவிட வேண்டிய அவலத்திற்கு இவர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

நகருக்கு வெளியே ஒதுக்கப்பட்ட இடத்தில் எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி, சாக்கடை ஓரத்தில் சிறுசிறு துணிக் கூடாரங்களில் தமது குழந்தைகளுடன் இவர்கள் பரிதவிக்கிறார்கள். மாநகராட்சி மேயரிடம் முறையிடச் சென்றபோது, அவரைப் பார்க்கக்கூட அனுமதிக்கப்படாமல், இம்மக்கள் விரட்டப்பட்டனர். இன்று இவர்கள் தங்கியுள்ள இடத்தைச் சுற்றியுள்ள பார்ப்பனர்கள், இந்த உழைப்பாளர்களைத் திருடர்கள், விபச்சாரிகள் என வாய் கூசாமல் வசைபாடுகின்றனர். மழைக்கு குழந்தைகளுடன் தொடர்வண்டி நிலையத்தில் ஒதுங்கினால் அங்கிருந்தும் விரட்டப்படுகின்றனர். ரயில்வே போலீசு வெறியர்கள் பெண்களிடம் தவறாக நடக்க முனைகின்றனர்.

சர்வகட்சி ஆதரவுடன் திருச்சி நகரை அழகுபடுத்த மாநகராட்சி முனைப்புடன் கிளம்பியுள்ளது. ஆனால், அந்த அழகின் பின்னே குடிசை இடிப்பும், வாழ்வுரிமை பறிப்புமான அவலங்கள்தான் நிறைந்துள்ளன.

தகவல்:
மையக் கலைக் குழு, ம.க.இ.க., திருச்சி.



படிப்பகம்

www.padippakam.com

## தமிழகப் பெருவிழா:

# ஒரு ஆலமரம், ஒரு வெடிகுண்டு மற்றும் சில பறவைகள்

"சந்தர்ப்பவாதமே நந்தன் வழியாம்!" என்ற தலைப்பில் சென்ற இதழில் வெளி வந்த கட்டுரை இவ்விதழில் தொடரும் என்று அறிவித்திருந்தோம். பல்வேறு இதழ்களில் முன்னுக்குப் பின் முரணாகவும், நேர்மையற்ற முறையிலும் எழுதியதையெல்லாம் எடுத்து மேற்கோள் காட்டி "நந்தன் வழி"யின் சந்தர்ப்பவாதத்தை நிருபித்திருந்தோம்.

"ஏன் இவ்வளவு சிரமப்படுகிறீர்கள், இதோ பார்த்துக் கொள்ளுங்கள் எங்கள் முக விலாசத்தை" என்று சம்பந்தப்பட்ட நந்தன் வழிச் சான்றோர் அனைவரும் மேடையேறித் தம்மைத் தாமே வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டார்கள் தஞ்சையில்.

தமிழகப் பெருவிழாதான் நந்தன் வழியின் குறுக்கு வெட்டுத் தோற்றம். இந்த இதழில் சந்தர்ப்பவாதிகள், பிழைப்புவாதிகளை நேரில் சந்தியுங்கள். கட்டுரையை அடுத்த இதழில் தொடர்வோம்.

தமிழை ஆட்சி மொழியாக்குவது, இராஜீவ் கொலைவழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நால்வருக்கும் தூக்கு தண்டனையை ரத்து செய்வது என்ற இரண்டு கோரிக்கைகளை வலியுறுத்தும் போக்கில், சாக்கில்,

வீரர் வை.கோ., வள்ளல் அருணாசலம் இருவருக்கும் தமிழ்ச் சான்றோர் பேரவை தஞ்சையில் நவ. 1, 2 தேதிகளில் நடத்திய பாராட்டு விழாவிற்குத் 'தமிழகப் பெருவிழா' என்று இலக்கிய நயத்துடன் பெயரிட்டிருந்தார்கள். "தமிழே, தமிழகமே" என்று தலைவர்களை அழைப்பதல்லவோ திராவிட இயக்க மரபு!

இரண்டு நாள் நிகழ்ச்சிகளும் எப்படி அமையவிருக்கின்றன என்பதைச் சூசகமாக முன்னறிவித்தது பெ. மணியரசனின் தொடக்கவுரை. "தூக்கு தண்டனையை ரத்து செய்யக்கூடாது என்று சொல்லும் வெங்கையா நாயுடு வெறும் வெங்காய வெடி; இதோ நம் பக்கத்திலிருப்பவர் - வை.கோ., சிவகாசி வெடிகுண்டு. நேரம் பார்த்து வெடிக்கும்" என்று எச்சரித்தார் மணியரசன்.

காஞ்சிபுரம் மாநில சுயாட்சி மாநாட்டில் வெங்காய வெடியை மேடையில் அமரவைத்து சிவகாசி வெடிகள், "பாரத் மாதா கி ஜெய், ஜெய்" என்று சரம் சரமாக வெடித்துச் சென்ற காட்சியை நந்தன் இதழ் விரித்திருந்தது நம் நினைவுக்கு வந்தபோதிலும், அவருடைய எச்சரிக்கையையும் அலட்சியப்படுத்த முடியவில்லை.

ஓட்டுக் கூட்டணியின் முரண்பாடுகளைத் தாண்டிய தமிழ்க் கூட்டணி இது என்றும், "நம்மையெல்லாம் இணைக்கின்ற மனிதக் கண்ணி" வள்ளல் அருணாசலம்தான் என்ற உண்மையையும் மணியரசன் குறிப்பிடத் தவறவில்லை. அவர் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் செயலர் என்பதை நாம் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

அடுத்துத் தலைமையுரையாற்றிய பேரா. தமிழண்ணல், "வை.கோ. கலைஞர், இராமதாசு மூன்று பேரும் சேர்ந்துள்ள இந்த முக்கூட்டு நீடிக்க வேண்டும்; பிரிந்தால் தமிழுக்கும் தமிழனுக்கும் ஆபத்து" என்றார்.

"இக்கூட்டணி பிரிந்தால் பா.ஜ.க. ஆட்சிக்குத்தான் ஆபத்து" என்று பாமரத்தனமாகப் புரிந்து வைத்திருந்த நமக்குச் சான்றோரின் இக்கருத்து புதிய தெளிவைத் தந்ததுடன், முடியுடை மூவேந்தரும் இணையக் கனவு கண்ட தமிழ்ப் புலவர்களின் நினைவும் வந்து புல்லரிக்க வைத்தது.

இந்த மூவேந்தர்களுடன் வாழப்பாடி, திருநாவுக்கரசு, வீரப்பாழ்வார் போன்ற இதர குறுநில மன்னர்களையும் தமிழால் ஒன்றுபடுத்தச் சான்றோர்கள் முயன்றிருக்கலாமே என்றொரு ஆதங்கமும் ஏற்பட்டது.

உடனே, அதற்கு விடை சொன்னார் தமிழண்ணல், "எதிர்காலத்தில் தமிழகத்தை வழிநடத்தப் போகிற சக்தி வை.கோ. தான். தமிழகம் வீறுநடை போட வேண்டுமானால், வை.கோ. தான் தலைமை தாங்க வேண்டும். வை.கோ. அவர்களே நீங்கள் இன்னும் சாதுரியமாக நடந்து கொள்ள வேண்டும்" என்றார்.

வை.கோ.வின் முகத்தில் சிந்தனையின் ரேகைகள் படர்வது தூரத்திலிருந்து பார்க்கும்போதே தெளிவாகத் தெரிந்தது. "ஊழலுடன் சேர்ந்து வாரிசு அரசியலை எதிர்த்தோம்; ஊழல், மதவெறியுடன் இணைந்து வாரிசை எதிர்த்தோம்; இப்போது வாரிசு, மதவெறியுடன் இணைந்து ஊழலை எதிர்க்கிறோம். வாரிசு, ஊழல்,




வாழ்கின்ற போதே
வரலாறு படைத்துக் கொண்டிருக்கும்
ஐயா அருணாசலம் அவர்களே

எங்கும் தமிழ், எதிலும் தமிழ்,
நீ செய்யும் அரும்சாதனை;
ஐயா,
நீ இருக்கும் வரை
எப்படி வரும் தமிழுக்குச் சோதனை?

"சொமாசா மைதானத்தில், சொமாசா சிலையை, சொமாசா திறந்து வைத்தார்" என்று நிகராகுவாவின் சர்வாதிகாரியாக இருந்த சொமாசாவைப் பற்றி ஒரு கவிதை உண்டு.

அருணாசலம் அவர்களை நிறுவனராகக் கொண்ட சான்றோர் பேரவை சார்பில்,
அருணாசலம் தன் கைக்காசைப் போட்டு நடத்திய தமிழகப் பெருவிழா வெற்றிபெற,
ஐயா அருணாசலத்தை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும்,
அருணாசலத்திற்குச் சொந்தமான நந்தன் இதழில்,
ஐயா அருணாசலத்தைப் பாராட்டும் இக்கவிதையை
விளம்பரமாக வெளியிட்டுள்ளார் அருணாசலம்.
சொமாசா கவிதையைவிட கொஞ்சம் நீளமாக இருக்கிறதோ?



படிப்பகம்

## ஒரு மலர் குடம் - இரண்டு தலைகள்!

நிகழ்ச்சி நிரல் எதுவானாலும் அய்யா வின் புகழ் பாடித்தான் துவங்கினார்கள் பேச் சாளர்கள். "மார்க்சியம் வெற்றி பெற மார்க் சுக்கு ஒரு லெனின் கிடைத்தார். தமிழர் நலம் வெற்றிபெற நமக்கு அருணாசலம் கிடைத்துள்ளார்" என்றார் ஒருவர்.

"எத்தனை இலட்சம் செலவானாலும் சரி, புரட்சி நடத்துகிறேன்; மார்க்சின் கொள் கையை ஜெயிக்க வைத்துக் காட்டுகிறேன்" என்று கைக்காசைப் போட்டு லெனின் ரசி யப் புரட்சியை நடத்தி முடித்ததாக நமக்குத் தெரியவில்லை. எனவே, லெனினுடன்ஒப் பிட்டு அய்யாவைச் சிறுமைப்படுத்துவது சரியல்ல.

மேலும், 'தமிழ்நாட்டின் லெனின்' என்ற 'பதவி' ஏற்கனவே நிரப்பப்பட்டுவிட் டது. "துரோகி வை.கோ" தலைவரைக் கொல்லச் சதி செய்த அந்த இக்கட்டான தருணத்தில் கலைஞருக்குப் பாதுகாப்பாக அறிவாலயத்தில் இருந்தார் இளவேனில். (இப்போது அடையாறு ஆலமரத்தடியில் தங்கியிருக்கும் அதே இளவேனில்தான்).

அப்போது அவர் எழுதிய "புயலுக்கு இசை தந்த பேரியக்கம்" எனும் நூலில் "நீங் கள்தான் இந்த நாட்டின் லெனின்" என்று கலைஞரைப் புகழ்ந்திருந்தார். தனது பொது வாழ்வில் பல மலர்க் கிரீடங்களைச் சுமந்தி ருக்கும் கலைஞர், இவ்வளவு 'வெயிட்டா ன' கிரீடத்தைச் சுமந்ததில்லையாதலால், "*சீச்சீ...* அதுக்காக இப்படியா... ரொம்பக் கூச் சமாக இருக்கு" என்று அந்த நூலுக்கு எழு திய முன்னுரையிலேயே அக்கிரீடத்தை உதறிவிட்டார் கலைஞர். குடிக் கழற்றிய மகுடத்தையா வள்ளலுக்குச் சூட்ட வேண் டும்?

மதவெறி என்ற மூன்றிலக்க எண்ணை இன் னும் எத்தனை விதமாகத் திருப்பிப் போட முடியும்? இன்னும் சாமர்த்தியமாக நடப் பது எப்படி?" என்று சிந்தனையில் ஆழ்ந் தார் வை.கோ.

அவர் கவலையைப் போக்கி உற்சாக மூட்டினார் தமிழண்ணல். "தமிழ்ச் சான் றோர் பேரவைக்கு உடனே 100 கிளைகள் துவங்கி, கிளைக்கு 100 பேர் உறுப்பினரா கச் சேர்த்து, 10,000 பேரும் வை.கோ. வுக்கு ஆதரவு தர வேண்டும். எங்களது தமிழ் வழிக்கல்வி கோரிக்கைக்கு மட்டும் ஒத்துழைப்பு தாருங்கள். உங்களுக்காக ஓட்டுக் கேட்க நான் தெருத் தெருவாக வருகிறேன்" என்றார்.

மூணு வேளை சோறு, ராத்திரி குவார்ட்டர், செலவுக்கு நூறு ரூபாய் தரா மல் தேர்தல் வேலை செய்ய 10,000 பேர் என்றால், சும்மாவா?

"தமிழர் தலைவர் எங்கள் கோ - வை.கோ., வை.கோ." - என்று முரச றைந்து முழங்கியபடி தெருத் தெருவாக தமிழ்ச் சான்றோர்கள் வாக்குக் கேட்கும் காட்சி ஒருபுறமும், "டிவிங்கிள் டிவிங்கிள் லிட்டில் ஸ்டார் - அண்ணன் வை.கோ... சூப்பர் ஸ்டார்" என்று குவார்ட்டர்கள் ஓட் டுக் கேட்கும் காட்சி இன்னொரு புறமும் வை.கோ.வின் மனக் கண்ணில் விரிந்தி ருக்க வேண்டும். புன்னகைத்தபடி அமர்ந் திருந்தார்.

அடுத்தடுத்து வந்த பேச்சாளர்கள் சிவகாசி வெடிகுண்டுக்கு மென்மேலும் சூடேற்றியபடி இருந்தனர். இறுதியில் அறி விப்பாளர் வந்தார். "இதயநோய், இரத்தக் கொதிப்பு உள்ளவர்கள் அதற்குரிய மாத்தி ரைகளை விழுங்கிக் கொள்ளுங்கள். வை.கோ. உரையாற்றப் போகிறார்" என்று அறிவித்து, வெடிகுண்டின் திரி யைப் பற்ற வைத்தார். வயது முதிர்ந்த சான் றோர்கள் பலர் திகிலுடன் நெஞ்சைப் பிடித் துக் கொண்டதைப் பார்க்க முடிந்தது.

"எங்களைப் போன்ற அரசியல்வாதி கள் உங்களைப் போன்ற சான்றோர்கள் மத் தியில் வந்து எமது குறைகளை இனங் கண்டு சரி செய்து கொள்ள வேண்டும். அதற்குத்தான் நான் இங்கு வந்தேன்" என்று அவையடக்கத்துடன் துவங்கினார் வை.கோ. ஒலிவாங்கியின் முன் நிற்பது யார், தமிழ்ச் சங்கத்தில் கைகட்டி நின்ற பாண்டியனோ என்றொரு ஐயம் தோன்றி யது.

"சான்றோரே, என்னை இடித்துரை யுங்கள். சும்மனாச்சுக்குமாவது எதுனா விமரிசனம் செய்யுங்கள்" என்று வை.கோ. எவ்வளவோ மன்றாடிப் பார்த் தும் சான்றோர்கள் யாரும் விமரிசிப்பதா கவே தெரியவில்லை. அவருக்கே கூச்ச மாக இருந்தது போலும்! இலேசாக சுயவிம ரிசனம் செய்து கொண்டார்.

"அரசியல் களத்திலே நாங்கள் சில சமரசங்கள் கண்டிருக்கலாம். நடைமாறிய வர்கள் போலத் தோற்றமளிக்கலாம். ஆனால், எங்கள் இதயத்தில் எரியும் தமிழ், தமிழன் எனும் இனவுணர்வு ஒரு நாளும் அணையாது" என்றார். "எரியத் தொடங்கி விட்டது, வெடிக்கப் போகிறது" என்று நினைத்தோம்.

"அணைந்து விட்டதாக நினைத்துக் கை வைத்தால் வெடித்துவிடும் - அதுதான் சிவகாசி வெடி" என்று எச்சரித்தார் அருகி லிருந்த நண்பர். "அட்டவணை மொழி யெல்லாம் ஆட்சிமொழி; முடியாவிட் டால், முதலில் தமிழ் ஆட்சி மொழி, கச்சத் தீவு" என்று சிறிது நேரம் சடுகுடு விளையாடினார்.

## அய்யா - சாமி அருகுபோல் வேரோடிய நட்பு!

சுப்பிரமணிய சாமி. அரசியல்வாதி என்ற சொல்லுக்கே தகுதியற்ற அரண்ம னைச் சதிகாரன்; அமெரிக்க உளவாளி; சந் திராசாமி, கசோகி உள்ளிட்ட சர்வதேச மபி யாக் கும்பல்களிடம் உறவு வைத்துள்ள சந் தேகத்துக்கிடமான பேர்வழி; கேட்டால், "நான் பிராமணன் - யாரிடம் வேண்டுமா னாலும் காசு வாங்குவேன்" என்று திமிரா கப் பேசும் நபர். ஓட்டுச்சீட்டு அரசியல்வாதி களாலேயே காததூரம் ஒதுக்கப்படும் கிருமி.

அனைத்துக்கும் மேலாக, ஈழத்தமிழர் போராட்டத்தின் முதன்மையான எதிரி. இராஜீவ் கொலைக்காக பிரபாகரனைப் பிடித்து வந்து தூக்கில் போட வேண்டும் என்று தொடர்ந்து பேசிவரும் ஒரே இந்திய 'அரசியல்வாதி'.

இத்தகைய சுப்பிரமணியசாமியைப் பேச்சாளர்கள் ஒருபிடி பிடித்தார்கள்; பாச றைப் பாணர், தேனிசை செல்லப்பா சாமி யைத் தாக்கி ஒரு பாட்டு வேறு பாடினார்.

தமிழகப் பெருவிழாவில் எதிரியாகத் தாக்கப்படும் சாமி, 'அய்யா'வின் இல்லத் திருமண விழாவில் முக்கிய விருந்தினராக இருந்தாரே அது எப்படி?

சு. சுவாமியின் தளபதியான சந்திர லேகா அம்மையார் அய்யாவின் நிறுவனத் துக்கு அவ்வப்போது வருகை தருவதையும், கற்றறிந்த சான்றோர்கள் அறியாமல் இருக்க மாட்டார்கள். "அய்யாதான் சு. சாமிக்கு என் னிடம் ஒரு சிபாரிசுக் கடிதம் கொடுத்தார்; டெல்லிக்குப் போய் சாமியைப் பார்த்து நான் மாற்றல் உத்தரவு வாங்க ஏற்பாடு செய் தார்" என்று சமீபத்தில் 'கல்கி'யில் தனது நன்றியைப் பதிவு செய்துள்ளார் எழுத்தாளர் சு. சமுத்திரம்.

கருணாநிதியையோ, இராமதா சையோ சு. சாமி சந்தித்திருந்தால், அந்த 'மர்ம' சந்திப்பு தினசரிகளில் முதல் பக்கச் செய்தியாகியிருக்கும். அதற்கு அவர்கள் விளக்கமும் தர வேண்டியிருக்கும். அய்யா - சாமியின் இந்த அருகுபோல் வேரோடிய நட்பை யார் புலனாய்வு செய்வது?

"கருணாநிதியின் மஞ்சள் துண்டு மர் மம், பதவியில் நீடிப்பதற்காக ஜோசியம் பார்த்து இளம்பெண் ஒருத்தியை கருணா நிதி மணந்த மர்மம்" போன்ற மஞ்சளான விசயங்களையெல்லாம் ஆய்வு செய்கிறது நந்தன். இந்த அய்யா - சாமி உறவு அதை யெல்லாம்விட மஞ்சளாக இருக்கிறதே!

இந்த உண்மைகளையெல்லாம் பார்க்க விரும்பாமல், தமிழ் இன உணர்வா ளர்கள் கண்ணை மூடிக் கொண்டு 'நந்தன் வழி'யிலேயே நடக்க விரும்பினால், அந்த தில்லை நந்தனைப் போலவே நாயன்மா ராக வேண்டியதுதான்!

www.padippakam.com

# வள்ளலுக்கு வள்ளல்!

மேடையேறியவர்களெல்லாம் வள்ளலைப் புகழ்ந்தார்கள். ஆனால், வள்ளலுக்கு வள்ளல் ஒருவர் அங்கே இருந்தார். அவர் பேரைச் சொல்லி ஒரு ஊது ஊதத்தான் ஆளேயில்லை.

'நெஞ்சின் அலைகள்' நந்தன் இதழில் வெளிவரத் துவங்கியபோது இளவேனிலின் அந்தக் காலத்து கார்க்கி இதழ்கள் நினைவுக்கு வந்தன. இளவேனில், ஏன் புதிய புனைப் பெயரில் எழுதுகிறார் என்று குழப்பமாக இருந்தது. அப்படியில்லை, ஆனாருனா என்பவரின் பேனாவிற்குள் இளவேனிலின் ஆவி புகுந்து கொண்டிருக்கிறது என்றார்கள் சிலர்.

பிறகு அது நூலாக வெளிவந்தபோது, ''உணர்ச்சி என்னுடையது - வடிவம் இளவேனிலுடையது'' என்று அய்யா தெளிவுபடுத்தியிருந்தாராம். அதை நாம் படிக்க முடியவில்லை. எப்படியோ, திரைக்கதையையும் வசனத்தையும் இருவேறு நபர்கள் எழுதும் திரையுலக உத்தியை, எழுத்துலகிலும் புகுத்திய புது முயற்சி வியப்பளித்தது. இந்தப் புது முயற்சியைப் பழம்பெரும் சான்றோர்களும் 'திறந்த' மனதுடன் வரவேற்றது மேலும் வியப்பளித்தது.

புலமை, ரசனை, கண்ணோட்டம் போன்ற பலவற்றிலும் ஒத்திசைவு கொண்ட நெஞ்சங்கள்தான், இப்படி, செம்புலப் பெயல் நீர் போல ஒன்று கலந்து, ஒரே எழுத்தோவியம் தீட்ட முடியும்.

அது கிடக்கட்டும்; இந்நூல் வெளியீட்டுக்குப் பின் தொடர்ந்து நந்தன் இதழில் வெளிவரும் நெஞ்சின் அலைகளில் இந்தக் 'கூட்டு' முயற்சி பற்றிக் குறிப்பிடாமல், ''ஆனா ருனா'' என்ற பெயரிலேயே இத்தொடர் வெளிவருவதைக் காணும்போது, இளவேனிலின் வள்ளன்மையை எண்ணி ஒருவித நெகிழ்ச்சி ஏற்பட்டது.

கம்பனுக்கு இல்லையே இந்த வள்ளன்மை! 'உணர்ச்சி என்னுடையது, எழுத்து கம்பனுடையது' என்று தெளிவுபடுத்தும் அறிவாற்றல் சடையப்ப வள்ளலுக்கு இருந்திருந்தால், நாமும் சடையப்ப இராமாயணம் படித்திருக்கலாமே!

இதோ கச்சத்தீவு வந்துவிட்டார். கொஞ்சம் வடக்கே நகர்ந்தால் ஈழம்தான் என்று எல்லோரும் எதிர்பார்த்திருந்த நேரத்தில், திடீரென்று தென்கிழக்கில் திரும்பி கிழக்கு திமோர் போனார்; அங்கிருந்து குபீரென்று கொசாவாவுக்குப் பாய்ந்தார்; அப்படியே ஜெனிவா.

''பன்னாட்டுப் படைகளே, ஈழத்தில் நடக்கும் கொடுமைகளைக் காணத் தவறுவது ஏன் என்று இங்கல்ல, ஐ.நா. மன்றச் செயலர் கோபி அன்னானிடம் கேட்டவன் நான். 1984-இல் மரண தண்டனையை ஒழிக்க மசோதா தாக்கல் செய்தேன். சர்வ தேசச் சட்டத்தின் வழியில் கேட்கிறேன்... மரண தண்டனை தேவையா? தனிப்பட்ட யாதொரு வழக்குக்கும் நான் வக்காலத்து வாங்கவில்லை... பத்திரிகையாளர்களே குறித்துக் கொள்ளுங்கள்...''

சிவகாசி வெடிகுண்டு வெடித்து அடங்கியவுடனே, அரங்குக்கு வெளியே இருந்த ஆங்கில மருந்துக் கடையில் ஒரே கூட்டம். இரத்த அழுத்தம் குறைந்துபோன சான்றோர் பலர் மாத்திரை வாங்கிக் கொண்டிருந்தனர். எப்படியோ அறிவிப்பாளர் வாக்குப் பொய்க்கவில்லை.

மறுநாள் தமிழ்வழிக் கல்விக்கான செயல் திட்டம் பற்றிப் பேசவந்த அரங்க. சுப்பையா, வை.கோ. கேட்டுக் கொண்டபடி, அவரது தவறுகளை இடித்துரைக்க முற்பட்டார்.

''ஓட்டுக் கட்சிகளை நம்பி இனவுணர்வு பேசுவது ஏமாளித்தனம். இந்தோனேசியா கிழக்கு திமோர் கதையெல்லாம் வேண்டாம். நேரடியாகச் சொல்லுங்கள்.. நால்வரின் மரண தண்டனையை ரத்து செய்யச் சொல்கிறீர்களா இல்லையா?'' என்று முழங்கிவிட்டு இரண்டு நொடிகள் இடைவெளி விட்டார். அரங்கில் மயான அமைதி.

அரங்கில் அமர்ந்திருப்போர் ஆன்றோர்களா, மாறுவேடத்தில் வந்திருக்கும் ம.தி.மு.க. தொண்டர்களா என்ற ஐயம் அவருக்கு வந்திருக்க வேண்டும். உடனே பேச்சை முடித்துக் கொண்டார்.

''யார் அந்த ஆளு, ம.க.இ.க.-வா?'' என்று பரபரப்பும் கோபமும் கலந்த குரலில் பேசிக் கொண்டார்கள் சான்றோர்கள். கழுதையைக் கழுதை என்று சொல்பவன்கூட ம.க.இ.க. ஆளாகத்தானிருக்க வேண்டும் என்பது தமிழக போலீசாரின் மதிப்பீடு. ''போலீசே போல்வரோ சான்றோர்?'' என்று நொந்து கொண்டார் ஒரு ம.க.இ.க. தோழர்.

அடுத்துப் பேசவந்தார் ம.தி.மு.க.வின் கொ.ப.செ. நாஞ்சில் சம்பத். ''சான்றோர் நிறைந்த அவையில் தலைவனைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன் '' என்று சுப்பையாவை ஒரு பிடி பிடித்தார்.

''இங்கே அரங்கு தெரியாமல் பேசினார் அரங்க. சுப்பையா. பொது வாழ்விற்கு வந்தபின் விமரிசனத்தைத் தாங்கும் உள்ளத்தை, உரத்தைக் கற்றுத் தந்திருக்கிறார் எங்கள் தலைவர்.'' இருந்தாலும், இதுவே வேற எடமா இருந்தா நடக்கிறதே வேற என்ற பாணியில் பெருந்தன்மையுடன் எச்சரித்துவிட்டு, ''உலகம் உருண்டை என்பதை முதலில் கண்டு பிடித்தவன் தமிழன்தான்'' போன்ற சில வரலாற்று உண்மைகளைக் கடாசிவிட்டுச் சென்றார்.

சிவகாசி வெடிகுண்டு எதிர்பார்த்தபடி வெடிக்கவில்லை என்பதால், விழாவில் வாண வேடிக்கையே இல்லை என்று சொல்லிவிட முடியாது. சரவெடிகள், மத்தாப்பூ, ஒத்தை வெடி போன்றவை இடையிடையே மேடையில் வெடித்துக் கொண்டுதானிருந்தன.

திருவிழா முடிந்து விடையாற்றி போல அமைந்தது பழ. நெடுமாறனின் பேச்சு. கருணாநிதி, ஜெயலலிதா, சு. சுவாமி, ஜூனியர் விகடன், சோ போன்றோரை சிலர் விமரிசித்ததைக் குறிப்பிட்ட நெடுமாறன், ''யாரையும் விமரிசிப்பது நம் வேலை அல்ல. காரியம் முடிவதுதான் நமக்கு முக்கியம்'' என்றார்.

நிகழ்ச்சிச் செலவுக்காக யாரிடமும் ஒரு காசுகூட நன்கொடை வாங்கக் கூடாது என்று கண்டிப்பாக உத்தரவிட்டிருந்தாராம் வள்ளல் அருணாசலம். அது மட்டுமா? நிகழ்ச்சிகள் துவங்குமுன் காலை ஏழு மணிக்கே அரங்கத்தைக் கூட்டுவது, நாற்காலிகளை ஒழுங்குபடுத்துவது போன்ற பணிகள் முதல் மேடையேறும் பேச்சாளர்களுக்கு எல்லாம் பொன்னாடை போர்த்துவது வரை அனைத்துப் பணிகளையும் அவரே செய்ய வேண்டியிருந்தது.

திருவள்ளுவர் முதல் இன்று வரை, சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளில் தமிழ்த்தாய் ஈன்றெடுத்த சான்றோர்களின் ஓவியங்கள் வரிசையாக தொங்கவிடப்பட்டிருந்தன. கண்ணெதிரில் நடமாடும் சான்றோர் பலர் ஓவியமாகவும் தொங்குவதைக் கண்டு உள்ளக் கிளர்ச்சியுற்ற சில முதியவர்கள், தாமும் அவ்வாறு தொங்கவிடப்படுவதற்கு யாரிடம் விண்ணப்பிக்க வேண்டும் என்று பணிவுடன் விசாரித்துக் கொண்டிருந்தனர். அய்யாவின் ஓவியத்தின் கீழ் 'அருணாசல வள்ளல்' என்று பொறிக்கப்பட்டிருந்தது.

''அடையாறில் ஒரு ஆலமரம். அது அருணாசல ஆலமரம்'' என்று ஒரு கவிதை சொன்னார் இளவேனில். எத்தகைய பொருட்செறிவுள்ள உவமானம்! சான்றோர் பேரவையின் நிறுவனரை ஆலமரத்துக்கு ஒப்பிட்டவர், சான்றோரைப் பறவைகள் என்று சொல்லவில்லை. சொல்லாத சொல்லில் அல்லவோ ஒளிந்திருக்கிறது அவரது கவிதை!

என்னென்ன பறவைகள் என்று கேட்கிறீர்களா? ஒரே பறவைதான், அதன் பெயரைச் சொல்வது நயமும் அல்ல, 'நாகரிகமும்' அல்ல.

● தொரட்டி

இந்த இதழ் தொடங்கி, ''புதிய ஜனநாயகம்'' 15 ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. பத்திரிகையைத் தாமதமின்றியும், தொடர்ச்சியாகவும் கொண்டுவர அனைத்து முயற்சிகளையும் செய்து வருகிறோம்.

சமீபத்தில் மைய அரசு அறிவித்த அஞ்சல் கட்டண உயர்வு உள்ளிட்ட பல்வேறு விலைவாசி ஏற்றத்தினால், புதிய ஜனநாயகத்தின் தயாரிப்புச் செலவு கணிசமாக உயர்ந்து விட்டது. எனவே, அடுத்த இதழ் தொடங்கி, தனி இதழின் விலை ரூ. 4.00 லிருந்து ரூ. 5.00 ஆக உயர்த்தப்படுகிறது.

ஆசிரியர் குழு.



படிப்பகம்

www.padippakam.com

# சுயமரியாதை கேட்டால் போலீசுக்கு அவமரியாதையாம்!

போலீசுத்துறை என்பது உழைக்கும் மக்களை அடக்கி ஒடுக்குவதற்கென்றே உருவாக்கப்பட்ட அமைப்பு. அதிலும் கூலித் தொழிலாளிகள், நடைபாதை வியாபாரிகள், ரிக்ஷாக்காரர், ஆட்டோ ஓட்டுநர்கள் என்றால் நாயினும் கேவலமாக வசைபாடுவதும் கேள்வி முறையின்றி வதைப்பதும் போலீசின் வாடிக்கை. போலீசு வெறியர்களின் இந்தத் திமிர்த்தனத்துக்கும் அடக்குமுறைக்கும் எல்லோரும் எப்போதும் பணிந்து போய்விடுவதில்லை. பதிலடி கொடுத்துக் கொட்டத்தை அடக்கியதும் உண்டு. சமீபத்தில் திருச்சியில் நடந்த நிகழ்ச்சி இதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

திருச்சியில் இயங்கி வரும் ''ஆட்டோ ஓட்டுநர்'' பாதுகாப்பு சங்கத்தின் பொதுச் செயலர் தோழர். முருகேசன். இவர் 10.10.'99 அன்று காலை மையப் பேருந்து நிலையத்திலுள்ள ஆட்டோ நிறுத்தத்திற்கு வழக்கம் போல தனது ஆட்டோவை நிறுத்தச் சென்றார்.

அங்கு போக்குவரத்தை ஒழுங்குபடுத்திவந்த ஏட்டு சிங்காரவேலு, தேவையின்றி, காதுகூசும் ஆபாச வார்த்தைகளால் முருகேசனைத் திட்டி, ஆட்டோவையும் லத்தியால் அடித்தார். மீண்டும் மிக ஆபாசமாக, ஏகவசனத்தில் பேசவே, தோழர் முருகேசன் மரியாதைக் குறைவாகப் பேசுவதை எதிர்த்துக் கேட்டார்.

சாதாரண ஆட்டோ ஓட்டுநர், போலீசை எதிர்த்தா பேசுவது எனச் சட்டையைப் பிடித்து அடிக்க ஆரம்பித்தார் ஏட்டு சிங்காரவேலு. தோழர். முருகேசன், அத்துமீறலைக் கண்டித்தும், ஏட்டு அடிப்பதை நிறுத்ததால், பதிலுக்கு அவரது சட்டையைப் பிடித்து இழுத்து உலுக்கி விடுவிக்க வேண்டியதாயிற்று. அருகிலிருந்த ஆட்டோ நிறுத்தத்திலிருந்து மூன்று ஓட்டுநர்கள் முருகேசனுக்கு ஆதரவாக வந்ததைக் கண்டு வெறிகொண்ட ஏட்டும், அங்கு திரண்ட போலீசும் ஆட்டோவையும், 4 ஓட்டுநர்களையும் 'கன்டோன்மென்ட்' போலீசு நிலையத்திற்கு இழுத்துச் சென்றனர்.

உடனடியாகவே இதைக் கண்டித்து நூற்றுக் கணக்கான ஆட்டோ ஓட்டுனர்கள் போலீசு நிலையத்தில் குவிந்தனர். செய்தியறிந்த சங்கத்தின் சட்ட ஆலோசகரான வழக்கறிஞர் போஜகுமாரும் போலீசு நிலையம் சென்று ஆய்வாளர் ஞானசேகருடன் பேசிக் கொண்டிருந்தார்.

அப்போது நீதிமன்றத்திற்கு நேரமாகிறதே என வழக்குகள் பற்றி கேட்டுச் செல்ல போஜகுமாரின் உதவியாளர் இராமதாசு போலீசு நிலையத்திற்குள் செல்ல முயன்றார்.

வாயில் காவலர் ராமதாசை உள்ளே விட மறுக்கவே, தான் போஜகுமாருடன் வந்த உதவியாளர் எனக் கூறி, அவரைச் சந்திக்க வேண்டியதன் அவசியத்தை விளக்க முயன்றார் ராமதாசு. இவர் பேசிக் கொண்டிருந்த போதே துணை ஆய்வாளர் காமராஜ் மற்றும் சில காவலர்களும் சேர்ந்து ராமதாசைப் பந்தாடத் தொடங்கினார்.

கூச்சல் கேட்டு வெளியே வந்த போஜகுமார் ''எனது உதவியாளரை அடிக்காதீர்கள்'' என்று பலமுறை கூறியும் அடி, உதையை நிறுத்தாததோடு, ''உன் பல்லை உடைப்பேன்'' என்று வழக்கறிஞரையும் மிரட்டவே, போஜகுமார் தரையில் அமர்ந்து நியாயம் கேட்டுப் போராடினார்.

தமது சங்கச் செயலாளரை அடித்து இழுத்து வந்ததோடு, அதைக் கேட்டு வந்த வழக்கறிஞரை மிரட்டியதையும், அவரது உதவியாளரையும் காரணமின்றி அடித்ததையும் கண்டித்து 100-க்கும் மேற்பட்ட ஆட்டோ ஓட்டுநர்கள் போலீசு நிலையம் முன் திரண்டனர். போலீசு நிலையத்திற்கு எதிரே உள்ள நீதிமன்றத்திலிருந்த வழக்கறிஞர்கள் விவரமறிந்ததும் திரண்டு வந்து கண்டனம் செய்தனர். தகவலறிந்த ம.க.இ.க. மற்றும் பு.மா.இ.மு. செயலாளர்களும் தோழர்களும் போலீசு நிலையம் சென்றனர்.


பல முனைகளிலிருந்தும் நெருக்கடி வரவே, பிரச்சினை பெரிதாகாமல் தடுக்க போலீசு துறை முனைந்தது. முதலில் நீதிமன்றத்திற்கு உதவி ஆணையரை அனுப்பியது. பிரச்சினையைப் பெரிதாக்க வேண்டாம் எனவும், காவல் துறையின் தவறான செயலுக்குத் தான் மன்னிப்புக் கேட்பதாகவும், காவல் துறை உதவி ஆணையர் கூறினார். இதை ஏற்க மறுத்த வழக்கறிஞர்கள், தமது சங்கக் கூட்டத்தை அவசரமாகக் கூட்டி, உதவி ஆய்வாளர் காமராஜைப் பணி நீக்கம் செய்து, தமது தவறுக்கு மன்னிப்பும் கோர வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றியதோடு, நீதிமன்றத்தைப் புறக்கணித்துப் போராட்டத்தைத் தொடர்ந்தனர். காமராஜ் மற்றும் காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி ம.க.இ.க. சுவரொட்டிகளை ஒட்டியது. ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்புச் சங்கம் தொடர் ஆர்ப்பாட்டத்திற்குத் திட்டமிட்டது. மணப்பாறை, முசிறி, லால்குடி ஆகிய ஊர்களிலும் நீதிமன்றப் புறக்கணிப்பு நடந்தது. திருச்சி வக்கீல் குமாஸ்தா சங்கமும் நீதிமன்றப் புறக்கணிப்பு செய்தது. அன்று மாலையும் மறுநாள் காலையும் தினசரிப் பத்திரிக்கைகளில் இது பரபரப்பான தலைப்புச் செய்தியாகியது.

இப்படி பிரச்சினை பெரிதான பின்பே உதவி ஆணையர், சம்பந்தப்பட்ட காமராஜை வேறு காவல் நிலையத்திற்கு மாற்றி உத்திரவிட்டார். 13.10.'99 அன்று வழக்கறிஞர்கள் மத்தியில் காமராஜைப் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்க வைத்தார். இனிமேல் இப்படிப்பட்ட அத்துமீறல்கள் இருக்காதென உறுதி கூறி, ஆட்டோ ஓட்டுனர் பாதுகாப்புச் சங்கத்தினரது தொடர் ஆர்ப்பாட்டத்தைக் கைவிடும்படி காவல் துறை கெஞ்சிக் கூத்தாடி, சங்கத்தினரை ஏற்க வைத்தது.

உதவி ஆய்வாளர் காமராஜ் இப்போது பயிற்சியில்தான் உள்ளார். பயிற்சி முடியுமுன்னே இவ்வளவு வெறித்தனமாகச் செயல்பட்ட இவர், வழக்கறிஞர்கள் மத்தியில் மன்னிப்பு கேட்ட 'அவமான'த்திற்கு தற்கொலை செய்து கொள்ளப்

தொடர்ச்சி 21-ஆம் பக்கம்

**திருச்சி நகரப் போலீசை சந்தி சிரிக்க வைத்த ம.க.இ.க.வின் சுவரொட்டி**





படிப்பகம்

www.padippakam.com

### பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி

# இந்துமத வெறியர்களின் வாய்க்குக் கிடைத்த அவல்!

பாகிஸ்தானின் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கும், தலைமை இராணுவத் தளபதி பெர்வேஷ் முஷாரஃப்புக்கும் இடையே, கார்கில் சண்டைக்குப் பிறகு, அதிகாரப் போட்டி உருவாகி, அதன் உச்சகட்டமாக, பாக். இராணுவம், கடந்த அக்டோபர் மாதம் அதிரடி இராணுவப் புரட்சி நடத்தி, ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டுவிட்டது. தலைமை இராணுவத் தளபதி பெர்வேஷ் முஷாரஃப், பாகிஸ்தானின் ''தலைமைச் செயல் அதிகாரி''யாகத் தன்னை அறிவித்துக் கொண்டு, நேரடியான இராணுவ சர்வாதிகார ஆட்சியை நடத்தி வருகிறார். பிரதமர் பதவியில் இருந்து தூக்கியெறியப்பட்ட நவாஸ் ஷெரீப் இராணுவக் காவலில் வைக்கப்பட்டுள்ளதோடு, அவர் மீது கொலை முயற்சி கிரிமினல் குற்ற வழக்குகளும் தொடரப்பட்டுள்ளன.

''பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் புட்டோவுக்கு நேர்ந்த கதிதான் நவாஸ் ஷெரீப்புக்கும் நேருமோ?'' என இந்தியாவும், அமெரிக்காவும், 'காமன் வெல்த்' நாடுகளும் கவலைப்பட்டுக் கொண்டிருக்க, பாகிஸ்தானிலோ நவாஸ் ஷெரீப்புக்காக ஒரு சொட்டு கண்ணீர் வடிக்கக் கூட யாரும் தயாராக இல்லை. 1997-ஆம் ஆண்டு நடந்த தேர்தலில், மூன்றில் இரண்டு பங்கு தொகுதிகளை வென்று, ஆட்சியைப் பிடித்தவர், நவாஸ் ஷெரீப். இரண்டு ஆண்டுகள் கழித்து, கடந்த அக்டோபர் மாதம் அவரது ஆட்சி இராணுவத்தால் தூக்கியெறியப்பட்ட பொழுது, பாகிஸ்தானில் பலரும் அதனைக் கொண்டாடினார்கள்.

லாகூர், ராவல்பிண்டி, கராச்சி நகரங்களைச் சேர்ந்த பொதுமக்கள் பலரும், ''பொய்யும் புரட்டும் மோசடித்தனமும், கொள்ளைக்காரர்களும் நிறைந்த அரசாங்கத்தைவிட, இராணுவத்தினர் தங்கமானவர்கள்'' என்கிறார்கள். ''தி ஃபிரைடே டைம்ஸ்'' என்ற ஆங்கில வார இதழின் ஆசிரியர் நஜம் சேத்தி, ''ஏற்கனவே அழுகி நாறிக் கொண்டிருந்த ஒரு பிணம் புதைக்கப்படுவது அக்கறைக்குரிய செய்தியல்ல'' என்கிறார். ஐக்கிய நாடுகள் சபையிலும், புட்டோவின் ஆட்சியிலும் தொழில்நுட்ப அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வுபெற்ற குலாம் கிப்ரியா, ''ஷெரீப், தேர்ந்தெடுக்கப்பட்ட சர்வாதிகாரி'' என்கிறார்.

ஆனால், பா.ஜ.க. அரசோ, ''நவாஸ் ஷெரீபைதான் சட்டபூர்வ தலைமையாக ஏற்றுக் கொள்வோம்'' என்ற ''காமன் வெல்த்'' தீர்மானத்தைக் காட்டி, முஷாரஃப்பின் இராணுவ ஆட்சியை அங்கீகரிக்க மறுக்கிறது. ''நவாஸ் ஷெரீபை விடுதலை செய்ய வேண்டும்'' என இந்தியப் பிரதமர் வாஜ்பாயியும், ''நவாஸ் ஷெரீப் சட்டப்படி விசாரிக்கப்பட வேண்டும்'' என மேற்கத்திய நாடுகளும் முஷாரஃபை வற்புறுத்துகின்றனர்.

பாகிஸ்தானிய மக்கள் நவாஸை எதிர்த்து முஷாரஃபை ஆதரிக்கும்பொழுது, இந்திய அரசோ முஷாரஃபை எதிர்த்துக் கொண்டு, ஷெரீபை ஆதரிக்கிறது. ''நவாஸ் ஷெரீப்புக்கு எதிராக புரட்சி எதுவும் செய்யக் கூடாது'' என்று பாக். இராணுவத்தை எச்சரித்த அமெரிக்கா, இன்று, நவாஸ் ஷெரீப்புக்கு உயிர்ப் பிச்சையாவது அளித்துத் தொலைக்குமாறு முஷாரஃபை நெருக்குகிறது. நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மீதும், நவாஸ் ஷெரீப்பின் மீதும் பாகிஸ்தானிய மக்களுக்கே இல்லாத அக்கறை, இவர்களுக்கு ஏன், எதனால் பொத்துக் கொண்டு வருகிறது?

★☆★

1988-இல் பாகிஸ்தானில் நேரடியான இராணுவ சர்வாதிகார ஆட்சி முடிவுக்கு வந்து, மீண்டும் நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறை நடைமுறைக்கு வந்தது. ஆனாலும், கடந்த பத்தாண்டுகளில், தேர்தலின் மூலம் ஆட்சியைப் பிடித்த பெனாசிர் புட்டோவோ, நவாஸ் ஷெரீபோ முழுமையாக ஐந்தாண்டுகள் ஆட்சி நடத்தியது கிடையாது. பெனாசிர் புட்டோவின் ஆட்சி இரண்டு முறையும், நவாஸ் ஷெரீபின் ஆட்சி ஒரு முறையும் சட்டபூர்வமாகவே கவிழ்க்கப்பட்டது; தற்பொழுது நவாஸ் ஷெரீபின் ஆட்சி, இரண்டாம் முறையாக இராணுவப் புரட்சி மூலம் தூக்கியெறியப்பட்டுள்ளது.

பெனாசிர் புட்டோவின், நவாஸ் ஷெரீபின் ஆட்சிகள் தூக்கியெறியப்பட்டதற்கு, அச்சமயத்தில் அவர்கள் இராணுவத்தின் நம்பிக்கையை இழந்து விட்டிருந்தனர் என்பது ஒருபுறமிருக்க, ஊழல் நிறைந்த அவர்கள் ஆட்சியின் மீது மக்கள் மத்தியில் எழுந்த ஆத்திரமும், வெறுப்பும், அவர்களது ஆட்சியை மக்களின் எதிர்ப்பின்றி இராணுவம் தூக்கியெறியவதற்கு வசதியாக அமைந்தன. 1998-இல் நடந்த தேர்தலில் நவாஸ் ஷெரீப் தோல்வியடைந்து, பெனாசிர் புட்டோ வெற்றியடைந்ததற்கும்; 1997-இல் நடந்த தேர்தலில் பெனாசிரின் கட்சி ஓரங்கட்டப்பட்டு, நவாஸ் ஷெரீப் மிருக பலத்தோடு ஆட்சியைப் பிடித்ததற்கும் பாகிஸ்தான் மக்களின் ஊழல் எதிர்ப்புதான் முக்கிய காரணம்.

1993-இல் நடந்த தேர்தலில் இரண்டாம் முறையாக ஆட்சியைப் பிடித்த பெனாசிர் புட்டோ அடித்த கொள்ளையை, தமிழகத்தை ஜெயா - சசி கும்பல் மொட்டையடித்தற்கு ஒப்பிடலாம்; பெனாசிரின் ஊழலைக் காட்டி, 1997-இல் ஆட்சியைப் பிடித்த தரகு முதலாளி ஷெரீபோ, ஊழலில் உலக சாதனையே படைத்தார். அதேசமயம், இந்த பத்தாண்டுகளில், நவாஸ் ஷெரீப்பும், பெனாசிர் புட்டோவும், இடைக்கால அரசுகளும் தீவிரமாக நடைமுறைப்படுத்திய தாராளமயம் - தனியார்மயத்தால், பாகிஸ்தானிய மக்களின்






படிப்பகம்

www.padippakam.com

வாழ்க்கை சீரழிந்து, சின்னாபின்னமாகிப் போனது. நவாஸ் ஷெரீப்பின் குடும்பமும், தரகு முதலாளிகளும், வியாபாரிகளும் வரி ஏய்ப்பில் ஈடுபட்டு, அரசின் கஜானாவை மொட்டையடித்தனர்; வங்கிகளில் இருந்த பொதுமக்களின் சேமிப்பை ''கடன்'' என்ற பெயரில் வாங்கி, தங்களின் சொத்துக்களைப் பெருக்கிக் கொண்டனர்.

இரண்டு ஆண்டுகளாக சம்பளமே தராமல் இழுத்தடிக்கப்பட்ட ஹைதராபாத் நகரைச் சேர்ந்த ஒரு போக்குவரத்து தொழிலாளி, ''எனது குடும்பம் பட்டினி கிடக்கிறது; சண்டைகளால் நான் விரக்தி அடைந்துவிட்டேன். எனக்கு உயிர் வாழ்வதற்கான உரிமை இல்லை. எனது உடலில் எரியும் தீயின் சுவாலைகள் ஒரு நாள் பணக்காரர்களின் வீடுகளுக்கும் பரவும் என நான் நம்புகிறேன்'' என கடிதம் எழுதி வைத்துவிட்டு, கடந்த சனவரி மாதம் பத்திரிகையாளர் விடுதி முன்பு பெட்ரோலை ஊற்றி கொளுத்திக் கொண்டு தற்கொலை செய்து கொண்டார். இந்தக் ''கலகம்'', நவாஸ் ஷெரீப் ஆட்சியின் மீது சாதாரண மக்களுக்கு இருந்த ஆத்திரத்தின், வெறுப்பின் வெளிப்பாடு.

நவாஸ் ஷெரீப் ஊழலில் ஊறித் திளைத்தார் என்பதோடு, பாகிஸ்தானின் தேசிய சபையில் தனக்கு இருந்த மிருக பலத்தைச் சாதகமாக்கிக் கொண்டு, தன்னை பாகிஸ்தானின் நிரந்தர பிரதமராக முடிசூட்டிக் கொள்ள முயன்றார். தேர்ந்தெடுக்கப்படும் மைய ஆட்சியைக் கலைக்க பாக். அதிபருக்கு இருந்த உரிமையை நீக்கிய ஷெரீப், பின்னர் தனது குடும்ப வழக்கறிஞரான ரபீக் தாரரை அதிபராக உட்கார வைத்தார்.

அடிக்கடி ஆட்சிக் கவிழ்ப்பில் ஈடுபடும் பஞ்சாபியர்கள் நிறைந்த பாக். இராணுவத்தின் தலைமைப் பதவியை, பஞ்சாப் அல்லாத, இந்தியாவில் இருந்து வெளியேறி பாகிஸ்தானில் குடியேறிய மொஜாஹிர் இனத்தைச் சேர்ந்த முஷாரஃபுக்கு விதிமுறைகளை மீறிக் கொடுத்தார் ஷெரீப். மொஜாஹிர் - பஞ்சாபி என்ற இன வேறுபாட்டால், முஷாரஃப் பாக். இராணுவத்தின் முழு நம்பிக்கையைப் பெற முடியாது; அதனால், பதவியைக் கொடுத்த தனக்கே விசுவாசமாக நடந்து கொள்வார் என எதிர்பார்த்தார். தனது கட்சியில் இருந்த எதிர்ப்புக் குழுக்களை ஒடுக்க கட்சித் தாவல் தடைச் சட்டம் கொண்டு வந்தார். இறுதியாக, தனக்கு எதிராக சிறு முணுமுணுப்புகூட எழுந்து விடாமல் தடுப்பதற்காக, ஷாரியத் சட்டத்தைக் கொண்டு வந்து, இஸ்லாமிய மத சர்வாதிகார ஆட்சியை நிறுவிட முயன்றார். ஆனால், பெரும்பான்மையான பாகிஸ்தான் முசுலீம் மக்கள் மத்தியில் ஷாரியத் சட்டத்திற்கு எதிராக வெடித்த எதிர்ப்பின் காரணமாகவும், பாகிஸ்தானின் மேல் சபையில் ஷெரீபுக்கு பெரும்பான்மை பலம் இல்லாததாலும், ஷாரியத் சட்டத்தைக் கொண்டு



தாய், தந்தை, மனைவி, பேத்தியுடன் முஷாரஃப்: முசுலீம் பழமைவாதப் பிடியில் தானோ, தனது குடும்பமோ இல்லை எனக் காட்டிக் கொள்ளும் விளம்பரம்

வர ஷெரீப் செய்த முயற்சி தோல்வியில் முடிந்தது.

இதனால்தான், ஊழலும், பாசிச ஒடுக்குமுறையும் நிறைந்த நவாஸ் ஷெரீப் ஆட்சி தூக்கியெறியப்பட்டதைக் கண்டிக்கவோ, மீண்டும் ஷெரீப் பதவியில் அமர்த்தப்பட வேண்டும் என்று கோரவோ எந்தவொரு பாகிஸ்தானியனும் முன்வவில்லை. அரசியல்வாதிகளின், அதிகார வர்க்கத்தின் ஊழல் ஒழிய வேண்டும் என்றால், இராணுவ ஆட்சி / சர்வாதிகார ஆட்சி வர வேண்டும் என்று பெரும்பாலான இந்திய மக்கள் ஏக்கப் பெருமூச்சு விடுகின்றனரே, அந்த மனநிலையில்தான், பாகிஸ்தான் மக்கள் இராணுவ ஆட்சியை வரவேற்கிறார்கள்.

ஜியாவின் இராணுவ சர்வாதிகாரத்தைத் துரத்தியடித்த பாகிஸ்தான் மக்கள், ஓட்டுக் கட்சிகள் நாணயமான ஆட்சியைத் தருவார்கள் என்று எதிர்பார்த்தார்கள்; குறைந்தபட்ச வாழ்க்கை உத்திரவாதத்தை ஏற்படுத்திக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால், நவாஸ் ஷெரீப் / பெனாசிரின் தலைமையில் உள்ள ஓட்டுக் கட்சிகள் மக்களின் நம்பிக்கையில் மண்ணை அள்ளிப் போட்டு, அம்பலப்பட்டுப் போய்விட்டன. ஜமாத்-இ-இஸ்லாமி போன்ற மத அடிப்படைவாத கட்சிகளை பெரும்பான்மையான பாகிஸ்தான் முசுலீம் மக்களே, அரசியல் தலைமையாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. புரட்சிகர ஜனநாயக சக்திகளும் அரசியல் அரங்கில் வலுவாக இல்லாத நிலையில், பாகிஸ்தான் மக்கள், ஒன்று ஓட்டுக் கட்சிகள் தலைமையில் நடக்கும் நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்; அல்லது இராணுவ சர்வாதிகாரத்துக்கு ஆதரவளிக்க வேண்டும் என்பதுதான் அவர்களின் முன்னுள்ள அரசியல் சூழல். இந்நிலையில் நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறையின் சீரழிவும், அரசியல் ஓட்டாண்டித்தனமும்தான் அவர்களை மீண்டும் இராணுவ சர்வாதிகாரத்துக்கு ஆதரவு அளிக்க வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளியுள்ளது.

பாகிஸ்தானிய மக்கள் இஸ்லாமிய ஹுதூத் சட்டப்படி சர்வாதிகார ஆட்சி நடத்திய ஜியாவையும், நவாஸ் ஷெரீப் ஷாரியத் சட்டப்படி இஸ்லாமிய மதசர்வாதிகார அரசு அமைக்க முயன்றதையும் எதிர்த்துப் போராடியவர்கள்; நவாஸ் ஷெரீப்பின் ஊழலையும், பாசிச ஒடுக்குமுறையையும் சகிக்க முடியாததால்தான், முஷாரஃபை ஆதரிக்கின்றனர். இதனால்தான், முஷாரஃப் ஆட்சியைப் பிடித்த பிறகு, தன்னை மதச்சார்பற்றவாதி போலக் காட்டிக் கொள்கிறார். துருக்கியில், முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை தலைமை தாங்கி நடத்தியவரும் மதச்சார்பற்ற அரசை அமைத்தவருமான ''துருக்கியின் தந்தை'' கமால் பாட்சாவை, தனது வழிகாட்டியாகக் கூறிக் கொள்கிறார்.

முசுலீம் மத அடிப்படைவாத அரசியல் சக்திகள், பெரும்பான்மையான பாகிஸ்தான் முசுலீம் மக்களிடம் செல்வாக்குப் பெறாமல் தூர ஒதுக்கப்பட்டிருப்பதால்தான், இந்தியாவில் இருந்து வெளியேறி பாகிஸ்தானில் குடியேறிய மொஜாஹிரான முஷாரஃபால், கமால் பாட்சாவை வழிகாட்டியாகக் கூறிக் கொண்டு, ஆட்சி நடத்த முடிகிறது.

முஷாரஃப் தனது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக பாகிஸ்தானின் அரசியல் சாசனத்தை ரத்து செய்தார்; பாகிஸ்தானின் நாடாளுமன்றமான தேசிய சபையையும், மாநில சட்டசபைகளையும் கலைத்துவிட்டார். நீதிமன்ற அதிகாரங்கள் பறிக்கப்பட்டுவிட்டன. அதேசமயம், பாகிஸ்தான் மக்களின் அடிப்படை உரிமைகளும், பத்திரிகை சுதந்திரமும் தொடரும் என வாக்கு கொடுக்கிறார். ஊழல் ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டுவந்து, சில தரகு

www.padippakam.com

முதலாளிகளையும், அரசியல்வாதிகளையும் கைது செய்தும், பெனாசிர் புட்டோவைத் தப்பியோடிவிட்ட குற்றவாளியாக அறிவித்தும் பரபரப்பு ஊட்டுகிறார். பாகிஸ்தான் மக்களிடமுள்ள சகிப்புத் தன்மை, ஊழல் எதிர்ப்பு, உரிமைகளுக்கான வேட்கையின் மீது அக்கறை கொண்டுள்ளதாகக் காட்டிக் கொள்வதன் மூலம், உள்நாட்டில் தனது ஆட்சிக்கு மக்களின் ஆதரவைத் திரட்டி, தக்க வைத்துக் கொள்ள முயலுகிறார், முஷாரஃப். இந்து மதவெறி பாசிஸ்டுகள், அதிகாரத்தில் உட்காருவதற்காகவே, தங்கள் மதவெறித் திட்டங்களை ஒத்தி வைத்துவிட்டதாகக் கூறி பரந்துபட்ட ஆதரவைத் தேடிக் கொண்டிருப்பது போன்றதுதான், முஷாரஃபின் இராணுவ சர்வாதிகாரமும்!

இந்த உண்மைகளை மூடிமறைத்துவிட்ட, இந்திய 'தேசிய' பத்திரிகைகள் அனைத்தும் பாகிஸ்தானுக்கும் ஜனநாயகத்துக்கும் ஒத்துவராது என்றும், ஜனநாயகத்தைவிட சர்வாதிகாரத்தை ஆதரிப்பதுதான் முசுலீம் மக்களின் குணம் என்றும் விஷத்தைக் கக்குகின்றன. வாஜ்பாயி பிரதமராகப் பதவியேற்ற நாளன்று பாகிஸ்தானில் நான்காவது முறையாக இராணுவப் புரட்சி நடந்ததை ஒப்பிட்டு, இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்தைச் சிலாகித்து எழுதுகின்றன இந்திய 'தேசிய'ப் பத்திரிகைகள்.

ஊழல், கட்சி தாவல், குதிரை வியாபாரம், அரசியல் கிரிமினல்மயமாவது, ஓட்டுக் கட்சிகளின் மீதான மக்களின் வெறுப்பு போன்றவைகளால் இந்திய நாடாளுமன்ற ஜனநாயகமும் ஏற்கனவே அரசியல் நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டுவிட்டது. இந்த அரசியல் நெருக்கடியை மாறிமாறி கூட்டணி வைப்பதன் மூலமோ, சீட்டு எண்ணிக்கை விளையாட்டின் மூலமோ தீர்த்து விட முடியாது. பாகிஸ்தானைப் போலவே, இங்கும் பாசிச சர்வாதிகார ஆட்சியைத் திணிப்பதன் மூலமே, ஆளும் வர்க்கம், இந்த அரசியல் நெருக்கடியைத் தீர்த்துக் கொள்ள முயலும். இந்துமதவெறி பாசிஸ்டுகள், நிலையான ஆட்சிக்கு அதிபராட்சி முறையைக் கொண்டு வருவதுதான் தீர்வு எனப் பேசி வருகின்றனர். அதிபராட்சி என்பதே, சட்டபூர்வ பாசிச சர்வாதிகாரம், ஜனநாயக முகமூடி தரித்து வருவதுதான்!

இந்து மதவெறி பாசிஸ்டுகளுக்கும், நவாஸ் ஷெரீப்புக்கும் இருந்த கள்ள உறவு சர்க்கரை இறக்குமதி ஊழலின் போதே அம்பலப்பட்டு போனது. அதனால்தான் என்னவோ, ஷெரீபை மீண்டும் பதவியில் உட்கார வைத்துவிடத் தீவிரமாக முயலுகிறது, பா.ஜ.க கூட்டணி அரசு. இந்து மதவெறி பாசிஸ்டுகள், பாகிஸ்தானில் மீண்டும் நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி வர வேண்டும் எனக்குரல் கொடுத்தாலும், அந்நாட்டில் எதிர்பாராதவிதமாக இராணுவ சர்வாதிகார ஆட்சி அமைந்திருப்பது ஒருவகையில் அவர்களுக்குக் கொண்டாட்டமானதுதான்.

இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையே உள்ள முறுகல் நிலைக்கு, காஷ்மீர் பிரச்சினைதான் காரணம் என முஷாரஃப் வெளிப்படையாகவே கூறிவிட்டார். ஆனால், இந்து மதவெறி பாசிஸ்டுகளோ, ''ஜனநாயக இந்தியா, இராணுவ சர்வாதிகாரியோடு பேசுவதா?'' என நரித்தனமாக காஷ்மீர் விவகாரம் குறித்த இருதரப்புப் பேச்சு வார்த்தையைக் கிடப்பில் போடுகின்றனர். ''ஜனநாயக இந்தியாவைதான் தெற்காசியாவின் போலீசாக அமெரிக்க ஜனநாயகம் ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என நச்சரித்து, பேரம் நடத்துகின்றனர்.

பா.ஜ.க வின் இந்த எதிர்ப்பைக் காட்டியே, முஷாரஃப், இந்திய எதிர்ப்பு. பாக். தேசிய வெறியை மேலும் தூண்டிவிட்டு,



**நவாஸ் ஷெரீப்பை, வாஜ்பாயி தூக்கிப் பிடிப்பதற்குக் காரணம் ஜனநாயகக் காதலா? சர்க்கரை இறக்குமதி ஊழலா?**

தனது பதவியையும், அதிகாரத்தையும் காப்பாற்றிக் கொள்ள முயலுவார். குறிப்பாக, மதச்சார்பற்றவர் போலக் காட்டிக் கொள்ளும் முஷாரஃபை எதிர்க்கும் முசுலீம் மத அடிப்படைவாதிகளின் வாயை அடைக்க, முஷாரஃப்புக்கு பா.ஜ.க.வின் எதிர்ப்பு பயன்படும்.

★☆★

பா.ஜ.க. கூட்டணி ஆட்சி முஷாரஃபின் இராணுவ சர்வாதிகார ஆட்சியை அங்கீகரிக்காவிட்டாலும், அவர்களின் எஜமானான அமெரிக்காவும், மேற்குலக ஏகாதிபத்தியங்களும் வெளிப்படையாகவே முஷாரஃப் ஆட்சியை அங்கீகரித்துவிட்டன. ''காமன் வெல்த்,'' கூட்டமைப்பு ''பாக். மீது பொருளாதாரத் தடைகளை விதிப்போம்'' என மிரட்டியுள்ளதை, இந்தியாவின் ராஜ தந்திரத்திற்குக் கிடைத்த வெற்றியாகப் பீற்றிக் கொள்கிறது; பா.ஜ.க. ஆனால், பா.ஜ.க கூட்டணி அரசின் முகத்தில் கரியைப் பூசினாற்போல, அமெரிக்கா, பாகிஸ்தான் அணுகுண்டு வெடித்ததைத் தொடர்ந்து போட்டிருந்த பெருவாரியான பொருளாதாரத் தடைகளை விலக்கிக் கொண்டுவிட்டது. பாகிஸ்தானின் போண்டியாகிப் போன பொருளாதாரத்தைக் காட்டி, ''இந்த நிலையில் பாகிஸ்தானைக் கைவிட முடியாது'' என் ஆதரவளிக்கிறார் கிளிண்டன். இராணுவப் புரட்சியைக் காட்டி பாகிஸ்தானைத் தனிமைப்படுத்த இந்தியா எடுத்த முயற்சிகள் தோல்வி அடைந்துவிட்டன என்பதே உண்மை.

அமெரிக்காவின் இந்த ஆதரவிற்கு, அமெரிக்காவிற்கும் பாகிஸ்தான் இராணுவத்திற்கும் இடையேயுள்ள நெருக்கம் மட்டும் காரணமல்ல. பாகிஸ்தான் மக்களின் ஆதரவை இழந்துவிட்ட நவாஸ் ஷெரீபைத் தாங்கிப் பிடிப்பதைவிட, பாகிஸ்தான் மக்களின் ஆதரவைப் பெற்றுள்ள முஷாரஃபை ஆதரிப்பதுதான் அமெரிக்காவிற்கு அரசியல்ரீதியில் இலாபகரமானது.

மேலும், தெற்காசியாவில், ஆப்கானிஸ்தானை மையமாகக் கொண்டு வளர்ந்து வரும் முசுலீம் தீவிரவாதத்தை ஒரு கட்டுக்குள் வைக்க விரும்புகிறது, அமெரிக்கா. இஸ்ரேலில் யூத இன வெறியும், இந்தியாவில் இந்து மதவெறியும் அமெரிக்கா / மேற்குலக ஏகாதிபத்தியங்களுக்குக் கட்டுப்பட்டு இருப்பதைப் போல, தாலிபானும் அமெரிக்காவுக்குக் கட்டுப்பட்டு இருக்க வேண்டும் என்பதுதான் ஏகாதிபத்தியங்களின் விருப்பம்.

அமெரிக்காவும், பாகிஸ்தானும் சேர்ந்து வளர்த்துவிட்ட தாலிபானும், பின்லேடனும் தனக்குக் கட்டுப்படாமல் திமிருவதைதான் அமெரிக்கா தலைவலியாகக் கருதுகிறதேயொழிய, தனக்குக் கட்டுப்பட்ட முசுலீம் மத அடிப்படைவாத அரசியலை அமெரிக்கா ஆதரிக்கத் தயங்குவதில்லை. தாலிபானை மீண்டும் தனது கட்டுக்குள் கொண்டு வருவதற்காக, முன்பு தாலிபானுக்கு ஆயுதப் பயிற்சி அளித்த முஷாரஃபைப் பயன்படுத்திக் கொள்ளும் திட்டத்தோடுதான், முஷாரஃபின் இராணுவப் புரட்சிக்கு ஆதரவளித்துள்ளது. தாலிபானுக்கும், பாகிஸ்தானின் முசுலீம் மத அடிப்படைவாத கட்சிகளுக்கும் நெருக்கமான உறவு இருந்தாலும், பாகிஸ்தானின் பொருளாதாரம் போண்டியாகிப் போய்விட்ட இன்றுள்ள நிலையில், முஷாரஃப்புக்கு அமெரிக்காவின் அரசியல் நிர்பந்தங்களுக்கு அடிபணிந்து போவதைத் தவிர வேறுவழியில்லை.

இரண்டாவதாக, இந்த இராணுவ சர்வாதிகார அரசைப் பயன்படுத்திக் கொண்டு, இம்மியும் பிசகாமல் ஐ.எம்.எஃப் - உலக வங்கியின் கட்டளைகளை நிறைவேற்றி விடலாம் என்றும் அமெரிக்கா கருதுகிறது. ஓட்டுக்கட்சிகளைப்


படிப்பகம்

www.padippakam.com

போல இராணுவ சர்வாதிகாரிகள் மக்களிடம் செல்ல வேண்டிய தேவை இல்லாததால், பாகிஸ்தானை மறுகாலனியாக்கும் ஏகாதிபத்தியங்களின் சதிக்கு முஷாரஃப் முழு ஒத்துழைப்பு கொடுப்பார். இவ்விசயத்தில் அமெரிக்காவின் முகம் கோணிவிடக் கூடாது என்பதற்காகவே "சிட்டி பாங்க்" என்ற பன்னாட்டு வங்கியில் அதிகாரியாக வேலை பார்த்து வந்த சௌகத் அஜீஸ் என்பவரையே நிதி மந்திரியாக நியமித்துள்ளார், முஷாராப்.

முஷாரஃப் - அமெரிக்காவின் இக்கூட்டுச் சதி பாகிஸ்தானின் அரசியல் - பொருளாதார நெருக்கடிகளைத் தீர்க்க உதவாது; அதை மேலும் தீவிரப்படுத்துவதாகவே அமையும். அப்பொழுது, இன்று முஷாரஃபை ஆதரிக்கும் பாகிஸ்தான் மக்கள், இராணுவ சர்வாதிகாரத்தைத் தூக்கி வீசியெறியும் கலகத்தில் இறங்குவார்கள்.

● செல்வம்.

17-ஆம் பக்கத் தொடர்ச்சி

போவதாக உயர் அதிகாரிகளிடம் புலம்பினாராம். இது தனிப்பட்ட போலீசுக்காரனுக்கு ஏற்பட்ட அவமானமல்ல; ஒட்டுமொத்த போலீசுத் துறைக்கே ஏற்பட்ட அவமானம் என்று உசுப்பிவிடும் நோக்கத்திலே அவர் நடத்திய நாடகம்தான் இது!

உழைக்கும் மக்களைக் கீழ்த்தரமாக, வாய் கூசாமல் வசைபாடும் இக்கிரிமினல் கும்பல், ஆட்டோ ஓட்டுநர்களின் எதிர்ப்பைக் கண்டு தற்காலிகமாகப் பின்வாங்கிய போதிலும், அடுத்து வந்த நாட்களில் சில ஆட்டோ நிறுத்தங்களை அப்புறப்படுத்த முனைந்தது. மாநகராட்சியும் நூற்றுக்கும் மேற்பட்ட ஆட்டோ நிறுத்தங்களுக்கான அங்கீகாரத்தை ரத்து செய்து ஆணை பிறப்பித்தது.

போலீசு, மாநகராட்சி அதிகாரிகளின் இந்த கூட்டுச் சதியை அம்பலப்படுத்தி உடனே நகரெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. 'கர்மசிரத்தை'யாக போலீசு இந்த சுவரொட்டிகளைக் கிழித்தது. அன்றே ஆட்டோ ஓட்டுநர்கள் தமது ஆட்டோக்களிலேயே சுவரொட்டிகளை ஒட்டி போலீசு முகத்தில் கரிபூசினர். தினசரிகள் மூலம் கண்டன அறிக்கை வெளியிட்டனர். இதனால் மூக்கறுபட்ட போலீசு முடங்கிப் போனது.

வெறும் பொருளாதாரக் கோரிக்கைக்கான போராட்டமாக அல்லாமல், போலீசின் அவமானப்படுத்தலுக்கும் அடாவடித்தனத்துக்கும் எதிராக நடந்த இப்போராட்டம், ஆட்டோ ஓட்டுனர்களிடம் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது. வழமையான சமரசவாத, பிழைப்புவாதச் சங்கங்களால் அச்சப்பட்டு ஒடுங்கிக் கிடந்த ஆட்டோ ஓட்டுனர்கள், இப்போது புதிய சங்கத்தில் உற்சாகத்துடன் அணிதிரளத் தொடங்கியுள்ளனர்.

தகவல்:
ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்பு சங்கம்,
திருச்சி.

## போஃபர்ஸ் வழக்கு:

# பா.ஜ.க.வின் அரசியல் ஆயுதம்



பாசிச ராஜீவ் சாவுடன் சேர்த்து போபர்ஸ் பீரங்கி பேரக் கொள்ளைக்கான ஆதாரங்களையும் எரித்துச் சாம்பலாக்கி விட்டதாக, காங்கிரசுக் கயவாளிகள் அகமகிழ்ந்திருந்த வேளையில், மீண்டும் போபர்ஸ் பூதம் கிளம்பி அவர்களைப் பீதியூட்டுகிறது. கடந்த அக்டோபர் மாத இறுதியில் மையப் புலனாய்வுத் துறை (சி.பி.ஐ.) போபர்ஸ் ஊழல் வழக்கின் முதலாவது குற்றப் பத்திரிகையை சிறப்பு நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. அதில் போபர்ஸ் நிறுவனம், அதன் அன்றைய தலைவரான மார்டின் அர்ட்போ, ஆயுத பேரத் தரகன் வின்சாடா, மற்றொரு ஆயுத பேரத் தரகனும் ராஜீவின் குடும்ப நண்பனுமாகிய குவோட்ரோச்சி, ராஜீவ் ஆட்சியில் இராணுவத் துறை செயலாளராக இருந்த பட்நாகர் மற்றும் ராஜீவ் ஆகியோரின் பெயர்கள் இம்முதலாவது குற்றப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

போபர்ஸ் குற்றப் பத்திரிகையில் ராஜீவின் பெயரைச் சேர்த்திருப்பது அரசியல் உள்நோக்கம் கொண்டது; நியாயமற்றது; பழிவாங்கும் போக்கு; நாட்டுக்காகத் தியாகம் செய்த தலைவரின் புகழுக்குக் களங்கம் ஏற்படுத்தும் செயல் என்று நாடாளுமன்றத்தில் சோனியா கும்பல் அமளி செய்து, வெளிநடப்புச் செய்து எதிர்ப்பைத் தெரிவித்தது. அதைத் தொடர்ந்து நாடெங்கும் பெரு நகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்களையும் நடத்தியது.

நாடாளுமன்ற விவாதத்தின் போது, "இறந்த ஒருவரின் பெயரைக் குற்றப் பத்திரிகையில் சேர்த்திருப்பது வரலாற்றில் இதுவே முதன் முறையாகும்" என்று காங்கிரசின் கூட்டணிக் கட்சியான அ.தி.மு.க.வின் பி.எச்.பாண்டியன் கண்டனம் தெரிவித்ததும், பா.ஜ.க. அமைச்சரான அருண் ஜெட்லி, "இந்திரா கொலை வழக்கில் முக்கிய சதிகாரன் பியாந்த் சிங்கின் பெயரும், ராஜீவ் கொலை வழக்கில் மனித வெடிகுண்டு தணுவின் பெயரும் சேர்க்கப்பட்டுள்ளது. இவர்கள் இந்திரா மற்றும் ராஜீவுடன் கொல்லப்பட்டுள்ள போதிலும் அவர்களது பெயர்கள் குற்றப் பத்திரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது" என்று விளக்கமளித்தார்.


இந்த விவகாரத்தைப் பெரிதுபடுத்தி சோனியா புலம்பத் தொடங்கினார். "பியாந்த் சிங்குடனும் தணுவுடனும் நாட்டுக்காகத் தியாகம் செய்த தலைவர் ராஜீவை ஒப்பிடுவதா? இது அநீதியானது; கொடூரமானது; கீழ்த்தரமானது" என்று தனியார் தொலைக்காட்சியின் நேர் காணலில் ஒப்பாரி வைத்து அற்பமான அனுதாப அலையை ஏற்படுத்த முயன்றார். வாழப்பாடி ராமமூர்த்தியும் ப.சிதம்பரமும் சோனியா தரப்பு நியாயவாதத்தை ஆதரித்து பத்திரிகைகளில் கண்டன அறிக்கை வெளியிட்டனர். அதைத் தொடர்ந்து பா.ஜ.க.வின் அத்வானி, சோனியாவின் உணர்வுகளைப் புரிந்து கொள்வதாகவும், பியாந்த் சிங்குடனும் தணுவுடனும் ராஜீவின் பெயரை ஒப்பிடுவது தேவையற்றது என்றும் மறைந்த தலைவரின் புகழுக்குக் களங்கம் ஏற்படுத்த தமது அரசு ஒருபோதும் முயற்சிக்கவில்லை என்றும் சோனியா கும்பலின் அனுதாப நாடகத்தை முடித்து வைத்தார். அதே சமயம், "குற்றப்பத்திரிக்கையில் இருந்து ராஜீவின் பெயரை நீக்க

**சுவிஸ் இரகசிய வங்கிக் கணக்கு ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்ட போஃபர்ஸ் கொள்ளையர்கள். 6-ஆவது கொள்ளைக்காரன் ராஜீவா? கோடி ரூபாய் கேள்வி**


GOPICHAND HINDUJA


SRICHAND HINDUJA


PRAKASH HINDUJA


WIN CHADHA


OTTAVIO QUATTROCCHI



www.padippakam.com



முயற்சிப்பதென்பது புலனாய்வுத் துறையின் விசாரணையில் அரசு குறுக்கிடும் செயலாகும். ராஜீவின் பெயரை நீக்குவது பற்றி புலனாய்வுத் துறையோ, நீதிமன்றமோதான் முடிவு செய்ய வேண்டும்'' என்று அறிவித்த பா.ஜ.க. அரசு, குற்றப்பத்திரிகையில் இருந்து ராஜீவ் பெயரை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையை உறுதியாக மறுத்து விட்டது.


நாடாளுமன்ற அமளி, வெளி நடப்பு, கண்டன ஆர்ப்பாட்டம், அனுதாபத்தை ஏற்படுத்த ஒப்பாரி, கண்டன அறிக்கைகள் அனைத்தும் தோல்வியடைந்த நிலையில், பா.ஜ.க. அரசை மிரட்டிப் பணிய வைக்கும் இறுதி முயற்சியுடன் இப்போது சோனியா கும்பல் கிளம்பியுள்ளது. நடப்பு நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் வங்கி மற்றும் காப்பீட்டுத் துறையைத் தனியார்மயமாக்கும் கொள்கையுடன் பா.ஜ.க. அரசு கொண்டு வரவுள்ள மசோதாவை நிறைவேற்றுவது உள்ளிட்டு எந்த நடவடிக்கையிலும் எதிர்க்கட்சி என்ற முறையில் ஒத்துழைக்க மாட்டோம் என்று சோனியா கும்பல் ''பிளாக்மெயில்'' செய்து மிரட்டுகிறது.

அதாவது, குற்றப் பத்திரிகையில் இருந்து ராஜீவ் பெயரை நீக்கிவிட்டால் வங்கி - காப்பீட்டுத் துறை தனியார்மயமாக்கலை ஆதரிப்போம்; இல்லையேல் எதிர்ப்போம் என்பதே சோனியா கும்பலின் கொள்கை. நாடாளுமன்ற மேலவையில் எதிர்க்கட்சிகள் பெரும்பான்மையாக உள்ளதால், தனியார்மயமாக்கும் மசோதாவை எப்படி நிறைவேற்றுவது என்று புரியாமல் பா.ஜ.க.அரசு கையைப் பிசைந்து கொண்டிருக்கிறது.

தனியார்மயக் கொள்கையை எதிர்த்து வீரதீரச் சவடால் அடித்துவரும் போலி கம்யூனிஸ்டுகளோ இப்போது தேள் கொட்டிய திருடனாக விழிபிதுங்கி நிற்கின்றனர். ஒருபுறம் போபர்ஸ் ஊழலையோ அதில் சம்பந்தப்பட்டுள்ள கொள்ளைக்காரன் ராஜீவையோ நியாயப்படுத்த முடியாத நிலை. மறுபுறம் வங்கி-காப்பீட்டுத் துறை தனியார்மயத்தை ஆதரிக்க முடியாத நிலை.

ஊழலா? மதவாதமா? என்றால் மதவாதமே முதன்மையான எதிரி என்று ஊழல் பெருச்சாளிகளுடன் கூட்டணி சேர்ந்துள்ள போலி கம்யூனிஸ்டுகளுக்கு வங்கி - காப்பீட்டுத் துறையா? போபர்சா? என்றால் வங்கி - காப்பீட்டுத் துறையைப் பாதுகாப்பதுதான் முதன்மையான கடமையா? போலி கம்யூனிஸ்டுகளுக்கே வெளிச்சம்! மதவாத எதிர்ப்பு என்ற பெயரில் சோனியா கும்பலுடன் கூட்டணி கட்டிக் கொண்டுள்ள போலி கம்யூனிஸ்டுகள், போபர்ஸ் ஊழல் தொடர்பான குற்றப் பத்திரிகையை ஒட்டி நாடாளுமன்றத்தில் அமளி நடந்தபோது வெறும் பார்வையாளர்களாகவே இருந்தனர். அதன் மூலம் சோனியா கும்பலுக்குத் தமது விசுவாசத்தைக் காட்டினர். இப்போது வங்கி-காப்பீட்டுத் துறை தனியார்மயமாக்கும் விவகாரத்திலும் சோனியா கும்பலை அம்பலப்படுத்தி எதிர்க்க முற்படாமல் மௌனம் சாதிக்கின்றனர். துரோகத்தனத்தையே பாரம்பரியக் கொள்கையாகக் கொண்டுள்ள போலி கம்யூனிஸ்டுகளிடம் வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

இதற்கிடையே, போபர்ஸ் ஊழல் வழக்கை விசாரித்து வந்த முன்னாள் சி.பி.ஐ - இயக்குநரான ஜோகிந்தர் சிங், இதுவரை கிடைத்துள்ள ஐந்து சுவிஸ் வங்கிக் கணக்கு ஆவணங்களின்படி ராஜீவ் லஞ்சம் பெற்றதற்கான ஆதாரம் எதுவுமில்லை என்கிறார். இதைக்காட்டி, குற்றப் பத்திரிகையில் ராஜீவ் பெயரைச் சேர்த்திருப்பது அநீதியானது; போபர்ஸ் விவகாரத்தில் லஞ்ச ஊழலே நடக்கவில்லை; இத்தனை ஆண்டுகளாகியும் எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை. இனிமேலும் விசாரணை நடத்துவது வீண் விரயம் என்று சோனியா காங்கிரசு எம்.பி. மணிசங்கர் (அய்யர்) எகிறிக் குதிக்கிறார். குற்றப்பத்திரிகையில் ராஜீவ் பெயரைச் சேர்த்திருப்பது அநீதியானது என்றால், நாடெங்கும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தங்கள் மீது என்ன குற்றம் சாட்டப்பட்டுள்ளது என்று கூடத் தெரியாமல், ஆண்டுக்கணக்கில் விசாரணையே இல்லாமல் சிறையில் தண்டனையை அனுபவித்துவரும் விசாரணைக் கைதிகளுக்கு என்ன நீதி?




இதுவொருபுறமிருக்க, ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு முன்பு இந்திய அரசியலில் திருப்பு முனையாக அமைந்த போபர்ஸ் ஊழல் விவகாரத்தின் விசாரணை இனிமேலாவது முறையாக நடக்குமா? குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்களா என்பதை யாராலும் உறுதியாகக் கூறமுடியாது. ஏனெனில் இன்றைய இந்துவெறி ஆட்சியாளர்களே போபர்ஸ் கொள்ளையர்களின் பங்காளிகளாக உள்ளனர்.

பிரிட்டனில் வாழும் இந்தியத் தரகுப் பெருமுதலாளிகளான இந்துஜா சகோதரர்கள் போபர்ஸ் பீரங்கி பேரத்திலும் ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல் பேரத்திலும் இடைத்தரகர்களாகச் செயல்பட்டவர்கள். போபர்ஸ் பீரங்கி பேர லஞ்சத்தொகை இவர்களது பினாமி கம்பெனிகளின் பெயரில் சுவிஸ் ரகசிய வங்கிக் கணக்கில் போடப்பட்டுள்ளது. ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு முன்பே பத்திரிகைகள் இதை ஆதாரத்துடன் அம்பலப்படுத்தியுள்ளன. போபர்ஸ் ஊழலில் இந்துஜாக்கள் மீது குற்றச்சாட்டுகள் முதன்முதலாக வெளிவந்த நிலையில், இலண்டனில் இந்துஜாக்கள் அளித்த தீபாவளிப் பண்டிகை விருந்தில் பிரதமர் வாஜ்பாய் கொஞ்சமும் கூச்சமின்றி விருந்தினராகப் பங்கேற்றுள்ளார்.

1993-இல் ஜெனீவாவில் நடந்த ஐ.நா. மனித உரிமைக்கமிஷன் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றபோது, அவருக்கென தனிச்சிறப்பான தங்குமிட ஏற்பாடுகளையும் உதவிகளையும் இந்துஜாக்கள் செய்தனர். இம்மாநாட்டுக்குப் பிறகு, இந்துஜாக்களின் சிறப்பு விருந்தினராக வாஜ்பாய் சில நாட்கள் தங்கியிருந்தார். 1995-இல் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த வாஜ்பாய் இந்திய நாடாளுமன்றக் குழுவுடன் லண்டனுக்குச் சென்றபோது, தேம்ஸ் நதியில் இக்குழுவினருடன் உல்லாசப் படகுப் பயணத்தை மேற்கொண்டார். ''சில்வர் டால்பின்'' என்ற படகில் நடந்த இந்த உல்லாசப் பயணம் - விருந்துச் செலவுகளை இந்துஜாக்களே ஏற்றுக்கொண்டனர்.

இப்படி இந்துஜாக்களின் பாக்கெட்டில் இருக்கும் வாஜ்பாய், போபர்ஸ் ஊழலில் உண்மைக் குற்றவாளிகளைக் கண்ட

www.padippakam.com



றிந்து நடவடிக்கை எடுக்கப் போவதாக ஆரவாரம் செய்வதை நம்பமுடியுமா? வாஜ்பாய் மட்டுமல்ல; முன்னாள் பிரதமர் நரசிம்மராவ், மறைந்த முன்னாள் அரசுத் தலைவர் ஜெயில்சிங், முன்னாள் நாடாளுமன்ற அவைத்தலைவர் பல்ராம் ஜாக்கர், முன்னாள் வெளியுறவு அமைச்சர் சோலங்கி, மராட்டிய ஆளுநர் அலெக்சாண்டர், லோக்சக்தி தலைவர் ஹெக்டே, 'மார்க்சிஸ்டு' கட்சி எம்.பி. யான சோமநாத் சட்டர்ஜி, மத்திய அமைச்சர் ராம்ஜெத்மலானி என அனைத்துக் கட்சித் தலைவர்களும், அமைச்சர்களும், அதிகாரிகளும் இந்துஜாக்களின் விருந்துகளில் பலமுறை கலந்து கொண்டுள்ளனர்.

இந்துஜாக்களின் கவனிப்பில் திக்குமுக்காடிப்போன 'மார்க்சிஸ்டு' கட்சியின் சோமநாத் சட்டர்ஜியே, "போபர்ஸ் ஊழலில் இந்துஜாக்களுக்கு எவ்விதத்திலும் தொடர்பேயில்லை" என்று நான்காண்டுகளுக்கு முன்பு விசுவாசமாக வாலாட்டினார். போபர்ஸ் ஊழலுக்கு எதிராக அன்று ஆரவாரம் செய்த 'மார்க்சிஸ்டு'களின் லட்சணமே இப்படியென்றால், இந்துஜாக்களின் நம்பகமான விசுவாசியான வாஜ்பாயின் லட்சணம் எப்படியிருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. இதுதவிர, போபர்ஸ் பீரங்கிபேரத்திலும், லஞ்சத் தொகை பட்டுவாடா விவகாரத்திலும் முக்கிய பங்கு வகித்த ராஜீவின் உறவினரும் அன்றைய மத்திய அமைச்சருமான அருண்நேரு இப்போது இந்து வெறியர்களின் அணியில் இருக்கிறார். இந்த லட்சணத்தில் போபர்ஸ் விசாரணையை இந்து வெறி ஆட்சியாளர்கள் முழுமையாக நடத்தி, குற்றவாளிகளைத் தண்டிப்பார்கள் என்று நம்புவதற்கு அடிப்படையே இல்லை.

எனவேதான் சோனியா கும்பல் நாடறிந்த கொள்ளைக்காரன் ராஜீவுக்கு ஆதரவாக, துணிச்சலுடன் வாதாடுகிறது. மறுபுறம், "நீ மட்டும் யோக்கியமா?" என்கிற பாணியில் முதலாவது குற்றப்பத்திரிகையில் போபர்ஸ் தரகர்களான இந்துஜாக்களின் பெயரை ஏன் சேர்க்கவில்லை என்று இந்துவெறி ஆளும் கும்பலை கொக்கி போட்டு இழுக்கிறது. போபர்ஸ் பீரங்கிக் கொள்ளை விவகாரம் ஆளும் இந்துவெறி கும்பலுக்கு அரசியல் ரீதியில் ஆதாயமடைய வாய்ப்பானதுதான். ஆனாலும் இதில் சம்பந்தப்பட்டுள்ள தமது கூட்டாளிகளும், ஆயுதபேரத் தரகர்களான தமது எஜமானர்களும் சிக்கிவிடக் கூடாது என்பதால் இந்த விவகாரத்தை எரியவும் விடாமல், அணைக்கவும் செய்யாமல் புகைய விட்டுக் கொண்டிருக்கிறது.

● மனோகரன்

# போபர்ஸ் பீரங்கிக் கொள்ளையும் மூடிமறைக்க நடந்த சதிகளும்

பியாந்த்சிங்குடனும் தனுவுடனும் ராஜீவை ஒப்பிடுவதா என்று ஒப்பாரி வைத்து அனுதாபம் தேட முயற்சிக்கும் காங்கிரசுப் பெருச்சாளிகள், போபர்ஸ் ஊழல் அம்பலமானபோது எவ்வளவு திமிராக நடந்து கொண்டு அரசு எந்திரத்தைக் கேடாகப் பயன்படுத்தி கொட்டமடித்தார்கள் என்பதை வாசகர்கள் மறந்து போயிருக்கலாம். அதை நினைவூட்டும் வகையில் போபர்ஸ் கொள்ளையையும் அதை மூடிமறைக்க சதிகளையும் பற்றி சுருக்கமாக பார்ப்போம்.

1986-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்திய அரசு சுவீடன் நாட்டின் போபர்ஸ் நிறுவனத்திடமிருந்து ரூ 1436 கோடி மதிப்புடைய பீரங்கிகள் வாங்கியதில், இந்துஜா, வின்சாடா, குவோட்ரோச்சி ஆகிய இடைத்தரகர்களுக்கும் ராஜீவின் பினாமிகளுக்கும் 14% லஞ்சத் தொகை மூன்று கம்பெனிகளின் பெயரில் ஐந்து பாதைகள் - போலி நிறுவனங்களின்மூலம் சுவிஸ் ரகசிய வங்கியில் போட ஏற்பாடாகியது. 1987-இல் போபர்ஸ் பீரங்கி பேரத்தில் லஞ்ச ஊழல் நடந்திருப்பதாக சுவீடன் வானொலி முதன்முதலாக அம்பலப்படுத்தியது. அதற்குள்ளாக 64 கோடி ரூபாய் லஞ்சப் பணம் ராஜீவின் பினாமிகளுக்கும் தரகர்களுக்கும் கைமாறிவிட்டது.

இந்து நாளேட்டின் அன்றைய இணையாசிரியர் என்.ராம் மற்றும் அதன் ஐரோப்பிய நிருபரான சித்ரா சுப்ரமணியம் ஆகியோரின் விடாப்பிடியான முயற்சியால் லஞ்ச ஊழல் பற்றியும், சுவிஸ் ரகசிய வங்கிக்கணக்குகள், போலி நிறுவனங்கள் பற்றியும் அவற்றை மூடிமறைக்க நடந்த சதிகள் பற்றியும் நூற்றுக்கும் மேற்பட்ட ஆவணங்கள் ஆதாரங்களுடன் வெளிவந்தன.

போபர்ஸ் ஊழலுக்கு எதிராக எதிர்கட்சிகள் வரிந்து கட்டியதும் ஊழலே நடக்கவில்லை என்றும், பின்னர் நானோ எனது குடும்பத்தாரோ லஞ்சம் வாங்கவில்லை என்றும் ராஜீவ் கும்பல் அடுக்கடுக்காகப் புளுகியது. ஊழலை அம்பலப்படுத்திய பத்திரிகைகளைக் கண்டு ஆத்திரமடைந்த அன்றைய மத்திய அமைச்சரான ப.சிதம்பரம், வாய்ப்பூட்டு சட்டத்தை ஏவி ஒடுக்க முயற்சித்தார். போபர்ஸ் ஊழலை ஆராய நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற கூட்டுக் குழுவில் விருந்தும் அரட்டையும் குறட்டையுமாக முடமாக்கப்பட்டது. விசாரணைக்காக அழைத்துவரப்பட்ட போபர்ஸ் நிறுவன உயரதிகாரிகள் விருந்தாளிகளாக நடத்தப்பட்டனர். அவர்களிடம் விசாரணை செய்வதற்கான தயாரிப்போ அவகாசமோ நாடாளுமன்றக்குழுவுக்கு அளிக்கப்படாமல் அவசரமாக விசாரணை நாடகம் நடத்தி முடிக்கப்பட்டது.

ராஜீவ் கும்பலின் தயவில் சந்திரசேகரின் ஆட்சி அமைந்ததும், அதுவரை போபர்ஸ் ஊழல் புகார்களை விசாரித்து வந்த அதிகாரிகளும் அரசுத்தலைமை வழக்கறிஞரும் பொறுப்பிலிருந்து மாற்றப்பட்டனர். சர்வதேச ஆயுதபேரத் தரகர்களின் கூட்டாளியான சுப்பிரமணியசாமி சட்ட அமைச்சராக்கப்பட்டார். ராஜீவ் கும்பலின் விசுவாசியான துளசி என்பவர் அரசுத் தலைமை வழக்கறிஞராக நியமிக்கப்பட்டார். துளசியும் டெல்லி உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி சாவ்லாவும் போபர்ஸ் கொள்ளையர்களைக் காப்பாற்றும் கீழ்த்தரமான முயற்சியில் இறங்கி, போபர்ஸ் தொடர்பான அனைத்து வழக்குகளையுமே ரத்து செய்யக் கிளம்பினர்.

நரசிம்மராவ் ஆட்சியில், போபர்ஸ் புலன் விசாரணையை அக்கறையுடன் நடத்தி வந்த சி.பி.ஐ. இணை இயக்குனர் மாதவன் அப்பொறுப்பிலிருந்து விரட்டியடிக்கப்பட்டார். நரசிம்மராவ் ஆட்சியில் வெளியுறவு அமைச்சராக இருந்த சோலங்கி, டாவோஸ் நகரில் 1992-இல் நடந்த பொருளாதார மாநாட்டில் கலந்து கொண்டபோது, சுவிஸ் நாட்டின் வெளியுறவு அமைச்சரைச் சந்தித்து, "சுவிஸ் கோர்ட்டில் ரகசிய வங்கிக் கணக்கு விசாரணையைத் தாமதப்படுத்துங்கள்" என்ற கோரிக்கையுடன் ஒரு கடிதத்தைக் கொடுத்து அம்பலமானதும் பதவி விலகினார்.

காங்கிரசின் தயவில் தேவகவுடா தலைமையில் ஐக்கிய முன்னணியின் ஆட்சியில், போபர்ஸ் புலனாய்வு விசாரணையை முடுக்கிவிட்டு காங்கிரசின் நிர்பந்தங்களை முறியடிக்க தேவகவுடா முயற்சித்ததும், அவர் பிரதமர் பதவியிலிருந்து துரத்தப்பட்டார்.

பாசிச ராஜீவின் போபர்ஸ் பீரங்கிக் கொள்ளையை மட்டுமல்ல; அதைவிட முக்கியமாக இத்தகைய லஞ்ச ஊழல் கொள்ளைக்கும் அவற்றை மூடிமறைக்கும் தில்லுமுல்லு - சதிகளுக்கும் இன்றைய அரசியலைப்பு முழுவதுமே உடந்தையாகவும் அடிப்படையாகவும் உள்ளது என்ற உண்மையை இவை மீண்டும் மீண்டும் நிரூபித்துக் காட்டுகின்றன.

www.padippakam.com



### அர்சத் மேத்தா வழக்கு:

# ஒரு தீர்ப்பு வர ஏழு ஆண்டுகள் 26 வழக்குகளுக்கு ....... ?

அர்சத் மேத்தாவும் நாதுபாய்பட்டே லும் ஒரே விவகாரத்தின் இருபக்கங்கள். உலகிலேயே மிகப் பெரிய ஊழல்களுள் ஒன்றான, 1992-ஆம் ஆண்டில் அம்பல மாகிய இந்தியப் பங்குச்சந்தை - வங்கி மோசடியில் முக்கிய குற்றவாளியாகச் சித் தரிக்கப்பட்டவன் அர்சத் மேத்தா. ஆனால் நாதுபாய் பட்டேல் மும்பை நகரில் ஒரு பலசரக்குக் கடையை நடத்திவந்த சிறு வியாபாரி.

வங்கி - பங்குச் சந்தை மோசடி வழக் கில் ஏழரை ஆண்டுகளுக்குப் பின் அர்சத் மேத்தாவுக்கு ஐந்தாண்டு கால சிறைத் தண் டனை விதித்து சிறப்பு நீதிமன்றம் கடந்த மாதத்தில் தீர்ப்பளித்துள்ளது. பல்லாயிரங் கோடிகளைச் சுருட்டிய பங்குச் சந்தை தர கன் அர்சத்மேத்தா இத்தண்டனையை அனுபவிக்காமலேயே உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இத்தீர்ப்பு பற்றியும் அர்சத் மேத்தா பற்றியும் பரபரப்பான செய் திகள் கடந்த மாதத்தில் நாளிதழ்களில் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில் வெளிவந்தன.

ஆனால் நாதுபாய் பட்டேல் பற்றிய செய்தி கடந்த மாதத்தில் மும்பை நாளிதழ்க ளில் நாலாம் பக்க மரண அறிவிப்பு பகுதி யில் நாலுவரியில் வெளிவந்தது. ஏழாண்டு களுக்கு முன்பு பங்குச் சந்தை சூதாட்டத் தில் ஐந்து இலட்ச ரூபாயை பட்டேல் ஒரே நாளில் பறிகொடுத்து போண்டியாகிப் போனார். கடன் தொல்லை தாளாமல் அவ திப்பட்ட அவர், தனது குடும்பத்து டன் சேர்ந்து கடந்த மாதத்தில் தற் கொலை செய்து கொண்டார். பங் குச் சந்தை சூதாட்ட மோசடியில் பட்டேலைப் போல பணத்தை இழந்து உயிரை மாய்த்துக் கொண் டவர்கள் பலநூறு பேர்.

இக்கிரிமினல் கொலைக் குற் றத்துக்காகவோ, பங்குச் சந்தை சூதாட்டத்துக்காவோ, அர்சத் மேத்தா போன்ற தரகர்களுக்கு எதி ராக எந்த வழக்கும் விசாரணையும் நடக்கவில்லை. இக்குற்றங்களுக் காக தண்டனையும் விதிக்கப்பட வில்லை. சிறப்பு நீதிமன்றத்தின் தற் போதைய தீர்ப்பும் அர்சத்மேத்தா வுக்குத் தண்டனையும் வேறு ஒரு மோசடிக்காகவே வழங்கப்பட்டுள் ளது.

அர்சத்மேத்தா, பூபேன் தலால் போன்ற பங்குச் சந்தை தரகர்களும் மார்க்க பந்து, கேமாணி போன்ற வங்கி அதிகாரிக ளும் ஓட்டுக்கட்சி அரசியல்வாதிகளும் கூட்டுச் சேர்ந்து பங்குச் சந்தை சூதாட்ட விதிகளை மீறி, பித்தலாட்டங்கள் செய்து பல்லாயிரங் கோடி ரூபாய்களைச் சுருட்டி விட்டார்கள். இந்தப் பங்குச்சந்தை சூதாட் டத்துக்கு இக்கொள்ளையர்கள் தமது சொந் தப் பணத்தை எடுத்து பயன்படுத்த வில்லை. அரசு வங்கிகள் மற்றும் அரசுத் துறை நிறுவனங்களின் நிதியை எடுத்து சூதாடினார்கள். இதுதான் வங்கி பங்குச் சந்தை மோசடியின் மையமான விவகாரம்.

வங்கிகளுக்கிடையே அரசு கடன் பத் திரங்களை விற்பது - வாங்குவதற்கான ஏற் பாடுகளும் வசதிகளும் உண்டு. போலி ஆவணங்கள் மூலம் இந்த வசதிகளைக் கேடாகப் பயன்படுத்தி வங்கி அதிகாரிக ளும் பங்குச் சந்தை தரகர்களும் அரசு வங் கிகள் மற்றும் அரசுத்துறை வங்கிகளுக்கு ரூ. 5000 கோடிக்கும் மேலாக நட்டம் ஏற்ப டுத்தி அவற்றை விழுங்கி விட்டார்கள். இந்த மோசடியைக் கண்டறிந்து அதை மீட் பதற்கான முயற்சியாகவே மையப் புல னாய்வுத் துறை (சி.பி.ஐ)யின் விசாரணை யும் வழக்குகளும் நடந்தன.

இதிலே அர்சத்மேத்தா கும்பல் மீது மொத்தம் 26 வழக்குகள் பதிவு செய்யப் பட்டன. அரசுத்துறை நிறுவனமான மாரு திகார் நிறுவனத்தின் ரூ. 38 கோடியைச் சுருட்டிய அர்சத்மேத்தா மற்றும் மூன்று அதிகாரிகள் மீதான வழக்கு இதிலே ஒன் றாகும். இந்த வழக்கை விசாரணை செய்த சிறப்பு நீதிமன்றம், அர்சத்மேத்தாவுக்கும் மாருதி கார் நிறுவனத்தின் முன்னாள் துணை மேலாளர் விநாயக் நாராயண், கிரின்லேஸ் வங்கியின் முன்னாள் அதிகாரி ராம்நாயக் ஆகிய மூவருக்கும் ஐந்தாண்டு சிறைத் தண்டனையும் ரூ. 35,000 அபராத மும் விதித்துள்ளது. இத்தண்டனையை அனுபவிக்காமலேயே இவர்கள் உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்து கொள் ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

''எப்படியிருந்தாலும் மோசடி செய் யப்பட்டதாகக் கூறப்படும் பணம் திரும்பக் கிடைக்கப் போவதில்லை. அப்படியிருக் கும்போது சிறப்பு நீதிமன்றம் என்பதே வீண்விரயம்'' என்கிறார் வழக்கறிஞர் மகேஷ் ஜெத்மலானி. இவர் மத்திய அமைச்சர் ஜெத்மலானியின் மகன். அர்சத் மேத்தாவுக்காக வாதிடும் வழக்கறிஞர். ''அர்ஷத் மேத்தா ஓர் அப்பாவி. அரசியல் வாதிகள் அவரைப் பலிகடா ஆக்கிவிட் டார்கள். பங்குச் சந்தை மோசடி விவகாரத் தில் அசல் குற்றவாளிகள் தப்பிவிட்டார் கள். அர்சத் சிக்கிக் கொண்டு விட்டார்'' என்று அர்சத்துக்கு ஆதரவாக நிற்கிறார் இவர்.

கோட்டு சூட்டு போட்ட கொள்ளைக் காரனுக்கு ஆதரவாக இந்தக் கூலி வழக்கறி ஞர் நின்றாலும், அவர் கூறுவதில் ஒரு உண்மை இருக்கிறது. வங்கி - பங்குச் சந்தை மோசடியில் மையப் புல னாய்வுத் துறை அர்சத் மேத்தா மீது தாக்குதலைக் குவித்ததும், அவன் தான் முக்கியப் புள்ளி என்று பத்திரி கைகள் சித்தரித்தன. ஆனால் வங்கி - பங்குச் சந்தை மோசடியில் அதி கம் கொள்ளையடித்துக் கொண்டு போனவை ஐந்து பெரும் அன்னிய ஏகபோக வங்கிகள். பிரிட்டனைத் தலைமையகமாகக் கொண்ட ஸ்டாண்டர்டு சார்ட்டட் வங்கி, ஏ.என்.இசட். கிரின்லேஸ் வங்கி, அமெரிக்காவைத் தலைமையகமா கக் கொண்ட சிட்டி வங்கி, பாங்க் ஆப் அமெரிக்கா மற்றும் அமெரிக் கன் எக்ஸ்பிரஸ் வங்கி ஆகிய வையே அவை.



இந்த ஐந்து அந்நிய வங்கிக ளின் வரவு - செலவு சில ஆயிரம்


படிப்பகம்

www.padippakam.com

கோடி ரூபாய்களாக இருந்து, 1991 - 92-ஆம் ஆண்டுகளில் திடீரென்று இலட்சக்கணக்கான கோடி ரூபாய்களாக உயர்ந்தது. இலாபம் மட்டுமே பல ஆயிரம் கோடிகளாகக் குவிந்தது. அவ்வளவு தொகையும் ஏகாதிபத்திய நாடுகளுக்குக் கடத்தப்பட்டு விட்டது.

இந்திய அரசுடமை வங்கிகளிடமிருந்தும், அர்ச்த்மேத்தா போன்ற தரகர்களிடமிருந்தும் போலியான ரசீதுகளையும் காப்புறுதிப் பத்திரங்களையும் பெற்றுக் கொண்டு, கோடிக்கணக்கான தொகையை கடனாகக் கொடுத்து, பங்குச் சந்தை சூதாட்டத்தில் இந்த ஐந்து வங்கிகளும் ஈடுபட்டன. உள்நாட்டு, வெளிநாட்டு வங்கிகள் அனைத்தையும் கணக்கில் எடுத்துப் பார்க்கும்போது, இந்த ஐந்து வங்கிகள் மட்டும் ஏறத்தாழ 70% அளவுக்கு பங்கு பத்திர சூதாட்டத்தில் ஈடுபட்டன. 1991- 92-ஆம் ஆண்டில் மட்டும் ஸ்டாண்டர்டு சார்ட்டட் வங்கி 1,20,000 கோடி ரூபாயும், கிரின்லேஸ் வங்கி 30,000 கோடி ரூபாயும் இப்படி பங்குச் சந்தையில் புரட்டியிருக்கின்றன.



மோசடி நிதி நிறுவனங்களில் முதலீடு செய்து போண்டியானவர்கள் தங்களுக்கு நியாயம் வழங்கக் கோரி சென்னையில் நடத்திய ஊர்வலம்

இப்பங்குச் சந்தை சூதாட்டத்திற்கான தொகையைக் கூட இந்திய அரசுடமை நிறுவனங்களிடமிருந்தே இந்த அன்னிய வங்கிகள் பெற்றன. மின் உற்பத்தி முதலீட்டுக் கழகம், ஏர் இந்தியா - இந்தியன் ஏர் லைன்ஸ், உர உற்பத்தி கூட்டுறவு நிறுவனம், பெட்ரோலிய எண்ணெய் கழகம் போன்ற அரசுத்துறை நிறுவனங்களின் உபரித் தொகையைக் குறைந்த வட்டிக்கு வாங்கி அதிக இலாபம் தரக்கூடிய பங்குச் சந்தையில் முதலீடு செய்து இந்த அந்நிய வங்கிகள் கொள்ளையடித்தன.

அரசுத்துறை நிறுவனங்களின் பங்குகள் இரகசிய பேர அடிப்படையில் அந்நிய வங்கிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. இப்பங்குகளை மிகக் குறைந்த மதிப்பில் இந்த வங்கிகள் பங்குச்சந்தை தரகு கம்பெனிகளுக்கு விற்றன. ஒரே நாளில் அதே பங்குகளை அதிக மதிப்பில் இத்தரகுக் கம்பெனிகள் இந்திய அரசுடமை வங்கிகளுக்கு விற்று கோடிகோடியாய் கொள்ளையடித்தன. இக்கொள்ளையை அந்நிய வங்கிகளும், பங்குச்சந்தை தரகுக் கம்பெனிகளும் பங்குபோட்டுக் கொண்டன.

இப்படி அரசுத்துறை நிறுவனங்களின் பங்குகளை அடிமாட்டு விலைக்கு விற்பது; அவற்றை அதிகவிலை கொடுத்து அரசுடமை வங்கிகள் வாங்கியது ஆகிய இரு வழிகளில் அரசுச்சொத்து குறையாடப்பட்டுள்ளது. அரசுடமை வங்கிகளின் முதலீட்டுப் பிரிவுகள் அதிக விலைக்கு வாங்கிய பங்குகளை மீண்டும் குறைந்த விலைக்கு தரகுக் கம்பெனிகளுக்கும் அந்நிய வங்கிகளுக்கும் விற்று தாம் நட்டமடைவதும், அவற்றுக்கு லாபம் ஏற்படுத்திக் கொடுப்பதும் திரும்பத் திரும்ப நடந்துள்ளது. இந்தப் பகற்கொள்ளையில் அந்நிய வங்கிகள் மிக முக்கிய பங்கு வகித்துள்ள போதிலும் அவற்றுக்கு எதிராக எந்த கிரிமினல் குற்ற நடவடிக்கையோ, தடை - கட்டுப்பாட்டு நடவடிக்கைகளோ இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

தனியார்மயக் கமிட்டியின் தலைவர் என்ற முறையில் அரசு நிறுவனப் பங்குகளை அற்பவிலைக்கு விற்ற கிருஷ்ணமூர்த்தி, ரிசர்வ் வங்கி கவர்னர் வெங்கடரமணன், நிதிச் செயலாளர் கீதகிருஷ்ணன், அரசு வழக்கறிஞரான ஜி. ராமசாமி, ரிசர்வ் வங்கி துணை கவர்னர் ஜானகிராமன், ஸ்டேட் பாங்கின் சீதாராமன் என இப்பங்குச் சந்தை - வங்கிமோசடிகளில் பார்ப்பன கும்பல் முக்கிய பங்கு வகித்துள்ளது. இப்பார்ப்பன கும்பல் எந்தக்குற்றமும் செய்யவில்லை என்று அரசியல் தரகன் சுப்பிரமணியசாமி, காங்கிரசு எம்.பி. மணிசங்கர் அய்யர் என மேல்மட்ட பார்ப்பன அரசியல் கும்பல் அவர்களைக் காப்பாற்றக் கிளம்பியது. நாடாளுமன்றக் கூட்டுக்குழு விசாரணையையே நீர்த்துப் போகச் செய்து கேலியும் அரட்டையும் குறட்டையுமாக மாற்றி குற்றவாளிகளைத் தப்புவிக்கச் செய்வதில் துணை நின்றது.

இப்பெரும் மோசடிக் கும்பல் அனைத்தையும் விசாரணையோ நடவடிக்கையோ இன்றி தப்புவிக்கச் செய்து விட்டு, இம்மோசடியில் ஒரு அங்கமான அர்சத் மேத்தா, பூபேன்தலால் முதலான தரகர்களை மட்டும் கைது செய்து ஆட்சியாளர்கள் விசாரணை நாடகமாடுகின்றனர். யானையின் வால்முடியில் மெல்லிய நூலைக்கட்டி கையில் பிடித்துக் கொண்டு, யானையையே பிடித்து அடக்கிவிட்டதாக பம்மாத்து செய்வதன் மூலம் இன்றைய கேடுகெட்ட அரசியல் அமைப்பு முறையின்மீது நம்பிக்கையூட்ட முயற்சிக்கின்றனர். ஆனால் ஏழாண்டுகளுக்கு முன்பு அர்சத் மேத்தாவை விசாரணைக்காக கைது செய்து அவனது சொத்துக்களை முடக்கி வைத்த போதிலும், அவன் தனது பினாமிகளைக் கொண்டு மும்பை பங்குச் சந்தையை இரண்டுமுறை நிலைகுலைய வைத்து அச்சுறுத்தினான். பின்னர் பெரு முதலாளித்துவ கும்பலும் அதிகார வர்க்கமும் அவனைச் சமரசப்படுத்திய பிறகே பங்குச் சந்தை இயங்க முடிந்தது.

அர்சத்மேத்தா விவகாரத்தைத் தொடர்ந்து பங்குச் சந்தை சூதாட்டத்துக்கான நெறிமுறைகள், கட்டுப்பாடுகள், வங்கிமோசடிகளைத் தடுக்க உயர்மட்ட கண்காணிப்புக்குழு, விதிமுறை சீர்திருத்தம் என ஆட்சியாளர்கள் பரபரப்பூட்டினாலும் இத்தகைய மோசடி - கொள்ளையும் பொருளாதாரக் குற்றங்களும் குறைந்துவிடவில்லை. மாறாக, முன்னைவிட அதிகமாக நாலுகால் பாய்ச்சலில் முன்னேறி விட்டது.

அந்நிய வங்கிகளும் நிதி முதலீட்டு நிறுவனங்களும் "இதரவகை மூலதனம்" என்ற பெயரில் பல்லாயிரங்கோடி கறுப்புப் பணத்தை இந்தியாவுக்குக் கொண்டு வருகின்றன. அவை தொழிலுற்பத்தித் துறைகளில் முதலீடு செய்யப்படுவதில்லை. மாறாக, பங்குச்சந்தை ஊக வணிகத்திலேயே புரளவிட்டு, ஓரிரு நாட்களிலேயே அதைவிடப் பலமடங்கு அதிகமாகச் சுருட்டிக் கொண்டு செல்கின்றன. இந்த வகையிலான மூலதனம் எவ்வளவு இந்தியாவுக்கு வருகிறது. ஏவ்வளவு திரும்ப எடுத்துச் செல்லப்படுகிறது என்பதற்கு எவ்வித கணக்கோ, தணிக்கையோ, கண்காணிப்போ, கட்டுப்பாடோ எதுவுமே கிடையாது. இச்சர்வதேச கிரிமினல் குற்றத்தை அந்நிய வங்கிகளும் நிதிமுதலீட்டு நிறுவனங்களும் கேள்வி முறையின்றி நடத்தி வருகின்றன. 1995-இல் மட்டும் இந்தியாவிலிருந்து 500 கோடி டாலர் அளவுக்கு இந்த வகையில் அமெரிக்காவுக்கு கடத்தப்பட்டுள்ளது! என்று பொருளாதாரத் துறை பத்திரிகையாளர்களே எழுதுகின்றனர்.

கடந்த அக்டோபர் முதல் வாரத்தில் இந்தியப் பங்குச் சந்தையின் விலை குறியீட்டுப் புள்ளி கிடுகிடுவென உயர்ந்து 5000 என்ற அளவை எட்டியதும், அரசிய


படிப்பகம்

www.padippakam.com

லைப் போலவே பொருளாதாரமும் நிலைத்த தன்மையை எட்டிப்பிடித்து விட்டது; முரட்டுக் காளையாக பங்குச்சந்தை வணிகம் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறப் போகிறது என்று முதலாளித்துவ பொருளாதார வாதிகள் ஆருடம் கூறினார்கள். ஆனால் குறைந்த விலையில் வாங்கிய பங்குகளை அக்டோபர் 12-ந் தேதியன்று அந்நிய நிதி முதலீட்டு நிறுவனங்கள் ஒரே நாளில் ரூ. 175 கோடி அளவுக்கு விற்று சூதாடியதும், பங்குகளை வாங்க ஆளில்லாமல் சிறு முதலீட்டாளர்கள் நட்டமடைந்து போண்டியானார்கள். ஏறத்தாழ 40,000 கோடி ரூபாய் அளவுக்கு இந்தியப் பங்குச் சந்தையில் முதலீடு செய்து சூதாடி வரும் அன்னிய நிதிமுதலீட்டு நிறுவனங்களைக் கட்டுப்படுத்தி முறைப்படுத்த வேண்டும் பங்குச் சந்தை சூதாட்டத் தரகர்களே புலம்பும் அளவுக்கு அராஜகமும் கொள்ளையும் தலைவிரித்தாடுகின்றன.

அன்னிய நிதி நிறுவனங்களின் சூறையாடலும் கொள்ளையும் ஒருபுறமிருக்க, சி.ஆர்.பி. முதலீட்டு நிறுவன மோசடி, காலனி ஊழல், அவாமி வங்கி ஊழல், சி.யு. வர்த்தக நிறுவன மோசடி என வடநாட்டிலும் அனுபவ், ஸ்டெர்லிங், தேக்குப் பண்ணை மோசடி, மாட்டுக்காரன் - ஆட்டுக்காரன் திட்டமோசடி, கலைமகள் சபா, பாலு ஜீவல்லரி, ஈஸ்வரி - ஆர்.பி.எஃப் பைனான்சு என தமிழ்நாட்டிலும் கணக்கற்ற மோசடிகளும் கோகோடியாய் கொள்ளையும் தொடர்கின்றன.

இந்நிலையில் ஒரு சூதாட்டத் தரகனும் கொள்ளையனுமாகிய அர்சத்மேத்தாவைத் தண்டிப்பதாக நாடகமாடுவதன் மூலம் வங்கி - பங்குச்சந்தை, நிதிநிறுவன மோசடி - சூறையாடலை ஒருக்காலும் தடுக்க முடியாது. மேத்தா மீதான தண்டனை நடவடிக்கையை இம்மோசடிகளுக்கு எதிரான முதல் அடியாகவும் கருத முடியாது. இம்மோசடியை ஒட்டி கைதான தரகர்களும் வங்கி அதிகாரிகளும் சிறையில் ஐந்து நட்சத்திர சுகபோக வசதிகளுடன் இருந்துவிட்டு வெற்றிவீரர்களாக படகுக்காரில் பவனி வருகிறார்கள். அவர்கள் கொள்ளையடித்த சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும் இன்றைய சட்டத்தில் வழியுமில்லை.

மொத்தத்தில் லஞ்சமும் ஊழலும் மோசடியும் கொள்ளையும் தேசிய பாரம்பரியமாக, இன்றைய அரசியலமைப்பு முறையின் பிரிக்க முடியாத அங்கமாக, சமூக அந்தஸ்துக்கான தொழிலாக மாறிவிட்டது. இந்திய வங்கி - பங்குச் சந்தையின் தலைவிதியை அந்நிய ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களிடம் ஒப்படைத்து விட்ட ஆளும் துரோகக் கும்பல், அர்சத்மேத்தா மீதான நடவடிக்கை நாடகம் மூலம் முழுப் பூசணிக்காயை சோற்றிலே மறைக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறது.

● குமார்

# வாரவட்டிக் கொடுமைக்கு முடிவு கட்டிய வி.வி.மு.

விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்காமல் ஒருபுறம் விவசாயிகள் தத்தளித்துக் கொண்டிருக்கும்போது, மறுபுறம் கந்துவட்டிக்காரர்கள் அவர்களின் கழுத்தை நெறிக்கிறார்கள். கூட்டுறவு வங்கிகள் கடன் கொடுக்க முன்வராத நிலையில், ஏழை - நடுத்தர விவசாயிகள் கந்துவட்டிக்காரர்களிடம் சிக்கி, தமது அற்ப உடமைகளையும் இழந்து வீதியில் வீசியெறியப்படுவது, நாடெங்கும் கேள்வி முறையின்றித் தொடர்கிறது. ஆந்திர, கர்நாடகப் பருத்தி விவசாயிகளின் தற்கொலைக்கு பூச்சித் தாக்குதல் மட்டும் காரணமல்ல; அதைவிட முக்கியமாக கந்துவட்டிக்காரர்களின் அச்சுறுத்தலும் அடக்குமுறையுமே விவசாயிகளைத் தற்கொலைக்குத் தள்ளியது. ஆந்திர, கர்நாடக விவசாயிகளைப் போல தமிழக விவசாயிகளையும் அச்சுறுத்தி வரும் வார வட்டிக் கொடுமைக்கு எதிராக விவசாயிகள் விடுதலை முன்னணி தாம் இயங்கும் பகுதியில் நடத்திய போராட்டம், விவசாயிகளுக்கு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

உத்தமபாளையம் வட்டாரத்தில் உள்ள நாராயணத் தேவன்பட்டி கிராமத்தில் நடக்கும் வாரவட்டிக் கொடுமைக்கு அளவே கிடையாது. 100 ரூபாய்க்கு வார வட்டி 20 ரூபாய்; 5 வாரத்தில் வட்டி மட்டும் 100 ரூபாய் ஆகிவிடும். மொத்தமாக அசலைக் கட்டாத வரையிலும் வாரம் ரூ. 20 வட்டி கட்டியே ஆக வேண்டும்.

நொடித்துப்போன விவசாயிகளும், கூலி ஏழைகளும் எதிர்பாராத கட்டாயச் செலவினங்களுக்கு வழியற்ற நிலையில் இந்த வட்டிக் கொடுமையில் வீழ்கின்றனர். ஆரம்பத்தில் கந்துவட்டி மூலம் கொள்ளையடித்து வந்த சுரண்டல் கூட்டம், மக்களின் அவசரத் தேவையினைப் பயன்படுத்தி, வாரவட்டிக் கொள்ளைக் கும்பலாக மாறியது.

வார வட்டிக்குக் கடன் வாங்கும் நபர் வெற்று முத்திரைத் தாளில் கையொப்பமிட்டுத் தர வேண்டும். இந்த வாரவட்டிச் சுரண்டலில் மாட்டிக் கொண்டவர் அதிலிருந்து மீண்டதாக வரலாறே இல்லை. ஒன்று வீடு, வாசல், துண்டு நிலத்தைப் பறிகொடுத்து ஊரைவிட்டு ஓட வேண்டும்; அல்லது பூச்சி மருந்து குடித்துச் சாக வேண்டும். கொடூரமான இந்தக் கொலைகார வட்டிக் கொடுமையை முடிவுக்குக் கொண்டுவர விவசாயிகள் விடுதலை முன்னணி களமிறங்கியது. ஊர் முழுதும் சுவரொட்டிகள் ஒட்டி, வீடு வீடாகச் சென்று மக்களைச் சந்தித்துப் பேசி, அணி திரட்டினர்.

பாதிக்கப்பட்ட மக்களும் வி.வி.மு.-வினரைத் தேடிவந்து முறையிடத் தொடங்கினர். இதைக் கண்டு ஆத்திரமடைந்த வாரவட்டிக் கும்பல் கூடி, ஊர்ப் பொதுமக்கள் என்ற பொய்யான பெயரில், பகுதி வி.வி.மு. கிளைச் செயலாளர் தோழர். தேவராசை அவதூறு செய்து பிரசுரம் வினியோகித்தது. பிரசுரம் வாங்கிய பொதுமக்களோ, வாரவட்டிக் கும்பலின் பொய்ப் பிரச்சாரத்தைத் தோலுரித்தனர்.

இந்நிலையில் முத்தையா என்பவர், அவசரத் தேவைக்காக ரூ. 5000-ஐ 'மேகம்' என்பவரிடம் வார வட்டிக்கு வாங்கினார். ரூ. 7400 வரை வட்டியாகக் கட்டியும், நெஞ்சில் ஈரமின்றி மேலும் மேலும் பணம் கேட்டு 'மேகம்' நெருக்கடி தரவே, முத்தையா வி.வி.மு.-விடம் முறையிட்டார். வி.வி.மு. இதில் தலையிடவே, வார வட்டிக் கும்பல் மேகத்தை உசுப்பேற்றிவிட்டது.

முத்தையாவின் டி.வி.எஸ். 50 வாகனத்தை மேகம் கும்பல் பறித்தது. இந்த அடாவடித்தனத்தைக் கண்டித்து வி.வி.மு. வினர் தட்டி எழுதி வைக்க, மேகம் கும்பல் ஏவிய ரவுடிகள் தட்டியைக் கிழித்து, வெட்டிச் சேதப்படுத்தினர். பொதுச் சொத்தான வி.வி.மு. தட்டியைத் திருப்பித் தருவதோடு, மன்னிப்புக் கோர வேண்டும்; இல்லையென்றால், வி.வி.மு-வே நேரில் பதிலடி தரும், தண்டிக்கும் என வி.வி.மு.-வினர் துண்டுப் பிரசுரம் வெளியிட்டனர்.

இதற்குப் பின்பும் 'மேகம்' தனது கைக்கூலிகளை ஏவி தோழர் தேவராசைத் தாக்கத் திட்டமிட்டான். செய்தியறிந்த தோழர்கள் பதிலடி தர தயாரிப்புடன் காத்திருக்க, உசுப்பேற்றிவிட்ட வாரவட்டிக் கும்பல் பீதியடைந்து மேகத்தைக் கைகழுவியது. சவடால் அடித்த மேகம் மரியாதையுடன் தட்டியைத் தந்ததோடு மக்களிடையே பகிரங்க மன்னிப்பும் கோரி சரணடைந்தான். இச்சம்பவத்திற்குப் பின் ஊர் முழுதும் ஒரு வாரத்திற்கு இதே பேச்சானது.

வாரவட்டிக் கும்பலில் ஒருவன் வி.வி.மு.வை ஊரைவிட்டே ஒழிக்க வேண்டுமென்ற போது, அப்படி நடக்க விட மாட்டோம் என வி.வி.மு. அல்லாத கூலி விவசாயி ஒருவர் பதிலடி தந்தார். உழைக்கும் மக்கள் மத்தியில், வி.வி.மு. தான் தமக்கான அமைப்பு, சுரண்டல் கூட்டத்தை முறியடிக்கும் அமைப்பு என நிலை நாட்டப்பட்டுள்ளது.

தகவல்:
வி.வி.மு.,
நாராயணத் தேவன்பட்டி கிளை,
பாளையம் வட்டம்.



படிப்பகம்

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா

''சென்னை மைய சிறைச் சாலையில் நடந்த கலவரத்தையடுத்து போலீசார் சிறைக்குள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 11 கைதிகள் இறந்து போயினர்; 95 கைதிகள் காயமடைந்தனர். துணை சிறை அதிகாரி ஜெயக்குமார் கைதிகளால் தாக்கப்பட்டு, எரித்துக் கொல்லப் பட்டிருக்கிறார்; சிறை மேற்பார்வையாளர் நடராஜனும் கைதிகளின் தாக்குதலால் இறந்து போனார்'' - இவை அனைத்தும் கலவரம் நடந்த நான்கைந்து நாட்களுக்குள் அரசு கொடுத்துள்ள புள்ளி விபரங்கள்.

கலவரம் நடந்தபொழுது சென்னை மைய சிறைச்சாலையில் இருந்த கைதிகளின் எண்ணிக்கை 2,177. கிட்டதட்ட நான்கு மணி நேரம் துப்பாக்கிச் சூடு நடந்தது. இதனால், ''சுட்டுக் கொல்லப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை கூடுதலாக (கிட்டத்தட்ட ஐம்பது) இருக்கும் என்றும், பாக்ஸர் வடிவேலு கும்பலைச் சேர்ந்த ரௌடிகள்தான் ஜெயக்குமாரை எரித்துக் கொன்றனர்'' என்றும் செய்திகள் வெளிவந்துள்ளன.

சென்னை மைய சிறைச்சாலையில் குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தில் அடைக்கப்பட்டிருந்த, வட சென்னையைச் சேர்ந்த ''தாதா''வான பாக்ஸர் வடிவேலுவின் தொழில் கூட்டாளிகள் வெள்ளை ரவி, வேம்புலி, ஆனந்தன், காசிமேடு இருதயராஜ் ஆகியோர்தான் இந்தக் கலவரத்தைத் தூண்டி விட்டுள்ளனர். இந்த ரௌடிகள், ''பாக்ஸர் வடிவேலு மர்மமான முறையில் இறந்து போனதற்கு நீதிகேட்டு நடத்திய போராட்டமாகக் காட்டிக் கொள்கிறார்கள். ஆனால், இந்தப் 'போராட்டத்தை' ஒடுக்க போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில், இந்த ரௌடிகளில் ஒருவன் கூட குண்டடிபட்டு இறக்கவில்லை. போலீசின் துப்பாக்கிச் சூட்டில் பலியானவர்கள், படுகாயமடைந்தவர்களில் பெரும்பாலோர் விசாரணைக் கைதிகள்தான்.

பாக்ஸர் வடிவேலு கஞ்சா, அபின் போன்ற போதைப் பொருட்களையும், விஸ்கி, பிராந்தியையும் சிறைக்குள்ளேயே 'கடத்தி' வந்து விற்று வந்தான். வடிவேலுவிடம் மாமூல் வாங்கிக் கொண்டு, அவனுக்குத் 'தொழில்' நடத்தும் உரிமையை வழங்கியவர்கள் சிறைத்துறை அதிகாரிகளைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்?

ஆனால், துணை சிறை அதிகாரி ஜெயக்குமார் சிறைக்குள் நடப்பதை அனுசரித்துப் போகாமல், பாக்ஸர் வடிவேலுவைத் தனிமைச் சிறையில் அடைத்தும், போலீசு அடிகொடுத்தும், அவனின் போதை மருந்து வியாபாரத்தைத் தடுக்க முயன்றார் என்று பத்திரிக்கைகள் கூறுகின்றன.

வடிவேலுவின் மரணத்திற்கு ஜெயக்குமார்தான் காரணம் என்கிறது வடிவேலுவின் கூலிப் பட்டாளம். அதேசமயம், ''ஜெயா ஆட்சியில் தராசு அலுவலகத்தில் நடந்த இரட்டைக் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப் பட்டுள்ள பாக்ஸர் வடிவேலு, அந்த வழக்கு நவம்பர் மாத இறுதியில் நீதிமன்ற விசாரணைக்கு வரும்போது, அரசு தரப்பு சாட்சியாக மாறி, ஜெயா மற்றும் சசிகலா கணவர் நடராஜன் தூண்டுதலில்தான் இந்தக் கொலை நடந்ததாகச் சாட்சியம் அளிக்க ஒப்புக் கொண்டிருந்தானாம்; அதனால், அ.தி.மு.க.வைச் சேர்ந்த மதுசூதனனுக்கு நெருக்கமான ரௌடிகள்' மூலம், வடிவேலுவைக் கொல்லவும் முயற்சிகள் நடந்திருக்கலாம்'' என்றும் செய்திகள் வந்துள்ளன.

இச்செய்திகளை வைத்துப் பார்க்கும் பொழுது, ஜெயக்குமாருக்கும், பாக்ஸர் வடிவேலு கும்பலுக்கும் இடையே மோதல் முற்றிக் கொண்டிருந்த நிலையில், வடிவேலு சந்தேகத்துக்கு இடமான முறையில் இறந்துவிட, பாக்ஸர் வடிவேலுவின் தொழில் கூட்டாளிகள், அதைச் சாக்காக வைத்து, கலவரத்தைத் தூண்டிவிட்டு, ஜெயகுமாரைப் பழி தீர்த்துக் கொண்டுள்ளனர் என்றுதான் கருத முடியும்.

மேலும், பாக்ஸர் வடிவேலு போதை மருந்து கடத்தும், கள்ளச்சாராயம் விற்கும் கிரிமினல் பேர்வழி என்பதும் காசுக்காக யாரை வேண்டுமானாலும் கொலை செய்ய அஞ்சாத கூலிப் பட்டாளத்தின் தலைவன் என்பதும் சிறையில் இருக்கும் அனைத்துக் கைதிகளும் அறிந்த விஷயம். இப்படிப்பட்ட கிரிமினல் பேர்வழி சந்தேகத்துக்கு இடமான முறையில் இறந்து போனது பெரும்பாலான கைதிகள் மத்தியில் அனுதாபத்தையும் ஆத்திரத்தையும் தூண்டிவிட்டிருக்கும் என்பது நம்பவே முடியாத ஒன்று.

எனவே, சிறையில் நடந்த கலவரம் கைதிகள் நடத்திய போராட்டமல்ல. வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கதையாக, சிறைத்துறை அதிகாரிகளால் ஆதரிக்கப்பட்ட ரௌடிகள், அவர்களது கட்டுப்பாட்டையும் மீறிச் சென்றதால் அந்த ரௌடிகளுக்கும், காக்கி சட்டை போட்ட ரவுடிகளுக்கும் நடந்த மோதல் தான் இந்தக் கலவரம்.

போலீசுக்கும், ''தாதா'' கும்பலுக்கும் இடையே தெருவில் நடக்கும் மோதலின் பொழுது, அப்பாவி பொதுமக்கள் பலியாகி விடுவதைப் போல, சிறைக்குள் போலீசுக்கும் ரௌடி கும்பலுக்கும் இடையே நடந்த மோதலில் அப்பாவி விசாரணைக் கைதிகள் பலியாகியுள்ளனர்.

சென்னை மைய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள 2,177 கைதிகளுள், நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை 122 தான்; ஏனைய கைதிகளுள், குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தில் அடைக்கப்பட்டுள்ள 721 பேரையும் நீக்கி விட்டால், மீதமுள்ள 1334 பேரும் போலீசாரால் பொய் வழக்கில் உள்ளே தள்ளப்படுபவர்கள்; சந்தேகக் கேஸில் பிடிக்கப்படுவர்கள்; உணர்ச்சி வசப்பட்டு குற்றங்கள் புரிந்தவர்கள்; ஏழ்மையால் சிறு சிறு குற்றங்களைச் செய்தவர்கள் தான். இவர்கள் மீதான வழக்குகளை முறையாகவும், விரைவாகவும் விசாரிக்காமல், நீதிமன்றம் - போலீசின் கூட்டுச் சதியால், இவர்கள் அனைவரும் விசாரணைக் கைதிகளாக அடைக்கப் பட்டுள்ளனர்.

குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தில் அடைக்கப்பட்டுள்ள அனைவரையும் கூட ரௌடிகள் பட்டியலில் சேர்த்துவிட முடியாது. குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தை போலீசார் மனம்போன போக்கில்தான் பயன்படுத்துகின்றனர். தனது பெயரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, ''பாக்ஸர்'' வடிவேலு போன்று ஏற்கனவே மக்கள் மத்தியில் அம்பலப்பட்டுப் போன ரவுடிகள் அல்லது தனக்கு அடங்க மறுக்கும்

தொடர்ச்சி பின் அட்டையில்

எரித்துக் கொல்லப்பட்ட துணை சிறை அதிகாரி ஜெயக்குமார்.



Published and Owned by R. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ

படிப்பகம்

www.padippakam.com
PUTHIYA JANANAYAGAM (TAMIL FORTNIGHTLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER FOR INDIA UNDER NO. 42648/85
Regd. No. TN/MS(S) 622 / 99

# இதுதான் இன்றைய இந்தியா

முன்பக்கத் தொடர்ச்சி

ரவுடிகள் மீது ஏவிவிடுகின்றனர்; கள்ளச்சாராயம் காய்ச்சுவது போன்ற சமூக விரோதச் செயலில் ஈடுபட்டவர்கள், அதைக் கைவிட்டுத் திருந்திவாழ முயலும்பொழுது, அவர்களைத் தண்டிப்பதற்காகக் குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தை ஏவிவிடுகிறது.

பெரும்பாலான மக்கள் நினைத்துக் கொண்டிருப்பது போல, சிறைச்சாலை என்பது நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளை அடைக்கும் இடமாக இல்லை. மாறாக, பாக்ஸர் வடிவேலு போன்ற சமூக விரோதிகள் கொஞ்ச காலத்திற்குப் பாதுகாப்பாகவும், சொகுசாகவும் தங்கிச் செல்லும் இடமாகவும், போலீசிடம் மாட்டிக் கொள்ளும் அப்பாவிகளையும், வறுமையால் சிறு சிறு குற்றங்களை செய்வோரையும், மனித உரிமைப் போராளிகளையும் விசாரணையின்றி, குற்றம் நிரூபிக்கப்படாமலேயே தண்டிக்கும் இடமாகவும் தான் உள்ளது.

சிறையில் நிலவும் போலீசின் அராஜகமும், மனிதத் தன்மையற்ற வாழ்க்கையும் விசாரணைக் கைதிகளின் மனதில் ஒருவித எதிர்வினையைத் தோற்றுவிக்கிறது. குற்றம் செய்யாமலேயே தண்டனை அனுபவிப்பதற்கு, குற்றவாளியாகவே உள்ளே வந்திருக்கலாம் என்று நினைக்கத் தூண்டுகிறது.

இந்த மனநிலைக்கு வந்தவர்களை சிறைத்துறை போலீசார் மிரட்டியோ, அதட்டியோ, ஆசை காட்டியோ சிறைக் குள்ளிருக்கும் கிரிமினல்களோடு பழகவிட்டு, எல்லா வித்தைகளையும் கற்றுக் கொடுத்து விடுகின்றனர். சிறைச்சாலை புதிய கிரிமினல்களை உருவாக்கும் இடமாகவும், போலீசு நிலையம் சிறைக்குள்ளிருந்து சமூக விரோதிகளாகச் சீரழிந்து வருபவர்களை, தொழிலைத் தொடங்கச் சொல்லி, அவர்களைப் பராமரிக்கும் இடமாகவும் உள்ளது.





போலீசாரால் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப் பட்ட விசாரணைக் கைதிகள்; மேல்படத்தில் உள்ள கைதியின் தாடை குண்டடிபட்டு பிய்ந்து தொங்குகிறது.

''கிரிமினல்களுக்கும் சிறைத்துறை அதிகாரிகளுக்கும் இடையே உள்ள தொடர்பு; சிறை, சமூக விரோதிகளை உற்பத்தி செய்யும் இடமாகவும் இருப்பது'' போன்ற பிரச்சினைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, பொத்தாம் பொதுவாக சிறை சீர்திருத்தம் பற்றி ஓட்டுக் கட்சிகள் உள்ளிட்டுப் பலரும் பேசுகின்றனர். இவர்கள், எவ்வித வழக்கு விசாரணையும் நடத்தாமல், விசாரணைக் கைதிகளைத் தண்டிக்கும் இடமாக சிறைச்சாலை இருப்பதைக் கண்டு கொள்ளாமல், சென்னை சிறையில் அளவுக்கு மீறி கைதிகளின் எண்ணிக்கை இருப்பதாகப் புலம்பு கின்றனர். சென்னை நகருக்குள் மைய சிறைச்சாலை இருப்பது ஆபத்து எனப் பூச்சாண்டி காட்டி, சிவில் சமூகத்திற்கே போலீசு பெருத்த அபாயமாக மாறி யிருப்பதை மூடி மறைக்கின்றனர்.

துணை சிறை அதிகாரி ஜெயக் குமார் சிறைக்குள் நடந்த போதைப் பொருள் வியாபாரத்தைக் கட்டுப்படுத்த முயன்ற தோடு, கைதிகளுக்கு வழங் கப்படும் ரேஷன் பொருட் களை அதிகாரிகள் கொள்ளை யடிப்பதையும் தடுத்த நேர் மையான அதிகாரி என அனைத்துப் பத்திரிகை களும் எழுதுகின்றன.

இதுதான் உண்மை எனும்பொழுது, தூசி கிரா மத்தில் கள்ளச் சாராயத்தை ஒழிக்க முயன்ற போலீசு அதிகாரி அரிதாசைவிட, மிகக் கொடூ மான முறையில் ஜெயக்குமார் தண்டிக் கப்பட்டுள்ளார் என்றுதான் கூற வேண்டும்.

இதுதான் உண்மை எனும்பொழுது, ரௌடிகளைப் போல, சிறைத்துறை அதிகாரிகளுக்கும் ஜெயக்குமார் மீது ஆத்திரமும் பகையுணர்வும் இருந் திருக்கும். சிறைக்குள் போதை மருந்து விற்று, சிறைத்துறை அதிகாரிகளுக்கு மாமூல் கொடுத்துவந்த ரௌடிகளால் ஜெயக்குமார் கொலை செய்யப்பட்டிருப் பதால், சிறைத்துறை அதிகாரிகள் ரேஷன் பொருட்களைக் கொள்ளையடிப்பதற்கு இருந்து வந்த தடை ஒழிக்கப்பட்டிருப் பதால், இதை சிறைத்துறை அதிகாரிகள் - ரௌடிகள் நடத்திய கூட்டுக் கொலை என்றுதான் கூற வேண்டும்!

போலீசிலும், சிறைத்துறையிலும் நேர்மைக்கும், நாணயத்திற்கும் இடமே கிடையாது; மனசாட்சியை அடகு வைக்க முடியாதவர்கள், அரிதாசைப் போல, ஜெயக்குமாரைப் போல அப்புறப்படுத் தப்படுவார்கள்!

மருத்துவமனைக்குள் நுழைய முடியாமல் தடுக்கப்பட்ட கைதிகளின் உறவினர்கள்

